# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 09 ஞாயிற்றுக்கிழமை (23.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 058




இனிவரும் போது ஆடிப் பாடுவேன் 2



பௌர்ணமி தின நிகழ்வு 7



யாழில் சுங்கத் திணைக்களம் 7



யாழ். குடாவை உய்யவிபாது தடுக்க 14



அடக்கியது நியூஸிலாந்து 29

# குடாநாட்டில் குற்றங்களைத் தடுக்க இராணுவத்தினர் இரவிலும் ரோந்து



யாழ். செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் அரச அதிபர், இராணுவத் தளபதி, யாழ். ஆயர், கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் கலந்துரையாடலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

## பொலிஸாரின் நடவடிக்கையும் தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ். குடாநாட்டில் தொடரும் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் போன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

விசேட புலனாய்வுக்குழு, சிவிலில் செல்லும் பொலிஸ்குழு என்பன யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டு, சம்பவங்கள் குறித்து விசாரணை முன்னெடுத்துவருகின்றன.

வடபிராந்திய பதில் பொலிஸ் மா அதிபர் (டி.ஐ.ஜி) சுசில் பெரேரா இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் தெரிவித்தவை வருமாறு.

குடாநாட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த உடனடி மூன்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

✱ பொலிஸ்மா அதிபரின் விசேட பணிப்பின் பேரில் ரோந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (31 ஆம் பக்கம் பார்க்க)

## வழமைக்கு மீள நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், ஜனவரி 23

யாழ். குடாநாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

இராணுவம் மற்றும் பொலிஸார் தவிர்ந்த வேறு எவரும் ஆயுதங்களை வைத்திருப்பதைத் தடுப்பதற்கான சாத்தியமான வழிகள் அனைத்தும் எடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார். இதற்காக இன்று முதல் இராணுவத்தினர் இரவு நேர ரோந்தில் ஈடுபடுவர். திடீர் சோதனைகள், வீதி தடைகளும் நடைமுறைக்கு வந்துள்ளன.

"எந்தவிதமான குற்றச்செயல்களும் எதிர்காலத்தில் இடம்பெறாத வகையில் - குடாநாட்டின் குற்றச் செயல் நிலைமையை பூச்சிய நிலைக்குக் கொண்டு வர - முழு நடவடிக்கைகளும் எடுக்கப் (31 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமையை மீறியோரை பொறுப்பாளியாக்க வேண்டும்: அமெ.

நியூயோர்க், ஜன. 23

இலங்கையின் இறுதிப் போரின் போது மனிதாபிமானச் சட்டங்களை மீறியவர்கள் அவற்றுக்குப் பொறுப்பாளர்கள் ஆக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது.

குற்றங்களுக்கு பதில்கூறும் நிலைமை தேசிய நல்லிணக்கத்திற்கு அவசியம் எனவும் அது தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமெரிக்க ராஜாங்கத்திணைக்களத்தின் செய்தியாளர் மாநாட்டில் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் (31 ஆம் பக்கம் பார்க்க)

## மிகப் பழமை வாய்ந்த கோயில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

பூநகரி கௌதாரி முனைப் பகுதியில் அழிவுண்ட நிலையில் மிகப் பெரிய இந்து ஆலயம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்களின் தகவல்களை அடுத்து யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் க.புஸ்பரட்ணம் தலைமையிலான குழுவினரே இந்த ஆலயத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.



பூநகரியில்

பூநகரி, மண்ணித்தலையை அடுத்துள்ள கௌதாரிமுனைக் காட்டுப்பகுதியில் உயர்ந்த மண்மேடுகளும் பெரிய ஆலமரமும், பனைமரங்களும் நிறைந்த பகுதியில் அழிவுண்ட நிலையில் இந்த ஆலயம் காணப்படுகிறது.

சிறிய கர்ப்பக்கிரகத்தையும், முன்மண்டபத்தையும் கொண்டு ஏறத்தாள 50 அடி நீளமும், 15 அடி அகலமும் கொண்டு காணப்படுகின்றது. (31 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு – கூட்டமைப்பு சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன.23

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசு - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு குழுவின் சந்திப்பு அடுத்தமாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் முதலாவது கூட்டத்தின் இரண்டாம் கட்ட சந்திப்பு நாளை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அன்றைய தினம் கூட்டம் இடம்பெறவில்லை. அக்குழுவில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதால் கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அடுத்த சந்திப்பு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி நடைபெறும் என்று இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது என கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுத் தெரிவித்தார். (ஒ-ஐ)


ரூ10,000/= விலைக்குறைப்பு

கண்காட்சியில் இன்று மட்டும்.

சர்வதேச வர்த்தகச் சந்தை 2011

கா சியமறை இல். A8 ல்



| | | |
|---|---|---|
| E -Family Bike | 49500/= | 39500/= |
| E- Scooty | 89500/= | 79500/= |
| Hybrid Bike | 120000/= | 110000/= |
| TVS - Flame - 125 | 155000/= | 145000/= |

யப்பான் றேடர்ஸ்: 0770868079



INDIA

Rs. 2/-

செக்கன் அடிப்படையிலான கட்டண அறவீடு

MY10 + 5 IDD இனை செயற்படுத்த அழையுங்கள் 676 அல்லது ரூ. 177/- ரீலோட் செய்யுங்கள்

Dialog


## வேட்பு மனு விண்ணப்பத்துக்கு அரசு விதித்துள்ள நிபந்தனையால் முறுகல்

கொழும்பு, ஜன.23

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவோர் தொடர்பாக ஆளும் தரப்பு விதித்துள்ள புதிய நிபந்தனையால் அரசுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசின் அமைச்சராகவோ நாடாளுமன்ற உறுப்பினராகவோ மாகாண சபை உறுப்பினராகவோ இருப்பவரின் உறவினர் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட வேட்புமனுவுக்கு விண்ணப்பிக்க (32 ஆம் பக்கம் பார்க்க)


கண்காட்சிஇன் இறுதி நாள்

JAFFNA International 2011 TRADE FAIR 2nd Edition

சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக

மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




மழை பெய்வதற்கு 20 சதவீத வாய்ப்பு உண்டு.

# மீனவர்கள் மீதான தாக்குதல்களால் இந்திய ஒருமைப்பாடு உடையும் நிலை

## வைகோ பிரதமரிடம் தெரிவிப்பு

சென்னை, ஜன.23

இந்தியக் கடற்படை தமிழக மீனவர்களை பாதுகாக்கத் தவறியதால் தமிழக இளைஞர்களின் உள்ளத்தில் மத்திய அரசுக்கு எதிராகக் கொதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தியாவின் ஒருமைப்பாடு உடையக் காரணமாகிவிடும் என்பதைக் கவனிக்கத் தவறிவிடாதீர்கள்.

பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேற்றுக் கையளித்த மகஜரில் வைகோ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வைகோ தனது கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

இலங்கைக்கு ஆயுதங்கள் கொடுக்காதீர்கள் என்று நான் பலமுறை விடுத்த வேண்டுகோள்கள் வீணாகிப் போயின.

விடுதலைப்புலிகளை எதிர்த்துப் போரிடுகிறோம் என்ற போர்வையில், இலங்கை அரசு தமிழர் இனக்கொலையை நடத்தி இருக்கிறது. அந்தப் படுகொலைகளைத் தடுப்பதற்குப் பதிலாக, இந்திய அரசு, இலங்கைக்கு ஆயுதங்கள் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் செய்து இருக்கிறது.

இந்தியக் கடற்படையும், கடலோரக் காவல்படையும், மீனவர்கள் மீதான கொடுமைகளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்ததே தவிர, சிங்களக் கடற்படையினரின் தாக்குதலில் இருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாக்கவில்லை.

இந்தியக் குடிமக்களாகிய தமிழக மீனவர்களைக் காப்பாற்ற வேண்டியது, இந்தியக் கடற்படை, கடலோரக் காவல் படையினரின் கடமை இல்லையா?

எனவே, தமிழகத்தின் இளைய தலைமுறையினரின் உள்ளத்தில், நாங்கள் இந்தியக் குடிமக்கள் இல்லையா? என்ற கேள்வி எழுந்து உள்ளது.

இந்தப் பிரச்சினையின் கடுமையை உணர்ந்து, இலங்கை அரசை எச்சரிக்க வேண்டியது இந்திய அரசின் கடமை அல்லவா?

இலங்கை இனப்பிரச்சினையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் தவறான கொள்கைகளால், அள்ளிக் கொடுத்த ஆயுதங்களால், இந்தியக் கடற்படை தமிழக மீனவர்களைப் பாதுகாக்கத் தவறியதால், தமிழகத்து இளைஞர்களின் உள்ளத்தில் இந்திய அரசு மீது ஏற்பட்டு உள்ள கடுமையான கோபமும், கொதிப்பும், இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு உடைவதற்குக் காரணமாகி விடும் என்பது, காலம் காட்டும் எச்சரிக்கை என்பதைக் கவனிக்கத் தவறி விடாதீர்கள்.

எனவே, இந்தப் பிரச்சினையை தொலைநோக்குப் பார்வையோடு அணுகுமாறு தங்களை வேண்டுகிறேன். தங்களது பொன்னான நேரத்தை எனக்காக ஒதுக்கி, எனது கருத்துகளைச் செவிமடுத்ததற்காக, எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது.

# இனி வரும்போது ஆடிப்பாடுவேன் என்கிறார் அமைச்சர்



## யாழ்.நகரில் மைத்திரிபால தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்ப்பாணத்துக்கு அடுத்த முறைவரும்போது ஆடிப்பாடி மகிழ்வேன் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

யப்பான் நாட்டின் நிதியுதவியுடன் யாழ்.போதனா வைத்திய சாலையில் அமைக்கப்படவுள்ள மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

''என்னை நீங்கள் உற்சாகத்துடன்வரவேற்றுள்ளீர்கள். மகிழ்ச்சியாக இருக்கின்றது. அதிலும் வரவேற்றுக்கொண்டு வரும் போது நாதஸ்வரத்தில் இசைத்த பாடலை ரசித்த எனக்கு ஆடி மகிழ வேண்டும் போல இருந்தது. இருப்பினும் என்னை ஒருவாறு கட்டுப்படுத்திக் கொண்டேன். எனக்குப் பாடவும் ஆடவும் தெரியும். மற்றுமொரு முறை வரும் போது நிச்சயம் அதனைச் செய்வேன்'' என்றார்.

அமைச்சர் இவ்வாறு கூறியதும் சபையில் இருந்தவர்கள் கரகோஷங்களை எழுப்பி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

நாதஸ்வரத்தில் இசைக்கப்பட்டது ''என்னடி ராக்கம்மா...'' என்ற பாடல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று உதயன் முதற்பக்கத்தில் பிரசுரமான செய்தியில் ''குடாநாட்டில் வாழ விருப்பம்'' என்று கூறியிருந்ததும் மைத்திரி பால சிறிசேன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## ஐந்துகண் பாலத்தின் தற்காலிகப் பாதை அகற்றப்பட்டதால் சிரமம்

சண்டிலிப்பாய் ஐந்துகண் பாலத்தின் தற்காலிகப் பாதை முன்னறிவித்தல் ஏதுமின்றி நேற்றுத் திடீரென அகற்றப்பட்டதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஐந்துகண் மதகுப்பாலம் இரும்பால் அமைப்பதற்காக கடந்த நான்கு மாதங்களாக பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

அமைக்கப்பட்டிருந்த தற்காலிகப் பாதையை நேற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மாலை 5 மணியளவில் முன்னறிவித்தல் ஏதுமின்றி அதற்கான எச்சரிக்கை சமிக்ஜை அறிவிப்பு எதுவும் போடப்படாமல் அகற்றியதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியிருந்தனர். (ஒ-9)

# குற்றச்செயல்கள் நடந்தால் தொலைபேசியில் அறிவியுங்கள்

யாழ்ப்பாணம், ஜன.23

குடாநாட்டில் குற்றச் செயல்கள் இடம்பெற்றால் அது தொடர்பான உடனடித்தகவல்களை வழங்க தொலைபேசி இலக்கங்கள், பொறுப்பான அதிகாரிகள் ஆகியன தொடர்பான விடயங்கள் பலாலிப் பாதுகாப்பு படைத்தலைமையகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவு, பொறுப்பான அதிகாரி தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றின் விவரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| யாழ்.நகரம் | - பெரேரா | | - 0773887124, |
| யாழ்.நகரம் | - வடுகொட | | - 0212229899, 0772910943, |
| யாழ்.நகரம் | - நாணயக்கார | | - 0213207572, 0718063166, |
| அதியுயர் பாதுகாப்பு வலயம் | - ஏக்கநாயக்க | - 515 பிரிக்கேட் | - 0777276730 |
| யாழ்ப்பாணம் | - சில்வா | - 51 பிரிக்கேட் | - 0773826866 |
| அச்செழு | - அபயகுணசேகர | - 511 பிரிக்கேட் | - 0716848296 |
| அரியாலை | - ரணசிங்க | - 512 பிரிக்கேட் | - 0773172958 |
| உடுவில் | - அமரசிங்க | - 513 பிரிக்கேட் | - 0777752269 |
| வரணி (வடக்கு) | - லக்ஷ்மன் | - 52 பிரிக்கேட் | -02132146416, 0772613007 |
| பருத்தித்துறை | - நந்தனகுமார | - 521 பிரிக்கேட் | - 0772666107 |
| மீசாலை வடக்கு | - ரஞ்சகொட | - 522 பிரிக்கேட் | -0773706296 |
| நுணாவில் | - அபயவர்த்தன | - 523 பிரிக்கேட் | - 0213211009, 0718748300 |
| கட்டைக்காடு | - டி.சில்வா | - 55 பிரிக்கேட் | - 0213211214, 0772539891 |
| செம்பியன்பற்று | - குலசிங்க | - 551 பிரிக்கேட் | - 0716832832 |

## கல்வி நிறுவனம் தீக்கிரை

யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்று இனந்தெரியாதோரால் நேற்றிரவு தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

நேற்றிரவு 8 மணியளவில் குறித்த கல்வி நிறுவனம் தீப்பற்றி எரிந்ததை அவதானித்த அப்பகுதி மக்கள் மாநகர சபை தீயணைப்புப் பிரிவினருக்குத் தகவல் கொடுத்தனர்.

உடனடியாக அங்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இருப்பினும் கல்வி நிறுவனத்தின் கூரைகள் மற்றும் தளபாடங்கள் எரிந்து நாசமாகின.

சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ-9)

# நிகழ்வுகள்

## இன்று

### கலை பண்பாட்டு விழா

சிறுப்பிட்டி கலை பண்பாட்டு மன்றத்தினர் நடத்தும் கலை பண்பாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சிறுப்பிட்டி வடக்கு, கலைவாணி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாகப் பேராசிரியர்கள் அ.சண்முகதாஸ், எஸ்.சிவலிங்கராசா மற்றும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ''சிறுவை'' கலைபண்பாட்டு மலர் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (ஒ-10)

### மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள வைரவிழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது..

கடந்த ஜூன் மாதம் 20ஆம் திகதியன்று வைத்திசாலையின் அபிவிருத்தி சபையினால் நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாமில் கண் பரிசோதிக்கப்பட்ட வர்களுக்கே கண்ணாடி வழங்க ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை மீளக்குடியமர்ந்த பயனாளிகளுக்கும் கண் பரிசோதனை நடத்தி கண்ணாடி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-319-236)

### பாடல் போட்டி

கொழும்புத்துறை றொசாறியன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இளைஞர் யுவதிகளுக்கான பாடல் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற இசைத்துறைப் பொறுப்பாளர் ம.யோசுதாசன் தலைமையில் தீர்ப்பாளர்கள் வெற்றிபெறுவோரைத் தெரிவு செய்யவுள்ளனர்.

பிரதம விருந்தினராக பெனிசுலா சுப்பமால் நிறுவன இயக்குநர் கலந்து கொள்ளும் இப்பாடல் போட்டி நிகழ்வுக்கு விண்ணப்பித்தோர், ஆர்வமுள்ளவர்களும் பங்கு பற்ற முடியுமென நிலைய கலைப்பிரிவுப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (ற-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியாவில் நேற்றுமுன்தினம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் ந.சித்தார்த்தன் ஆகியோர் கலந்துரையாடுகின்றனர்.

# மாவையில் காம்யோற்ஸவம் இல்லை

யாழ்ப்பாணம்,ஜன.23

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இவ்வருடம் காம்யோற்ஸவம் நடைபெறமாட்டாது.

ஆலயத்துக்கு வரும் மக்கள் மன அழுத்தம் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமான மகா ராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார். இந்த முடிவு தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிவித்தலின் முடிவு வருமாறு:-

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் சுற்றாடலிலும், சுற்றியுள்ள கிராமங்களிலும் குடியிருந்த மக்கள் இடம்பெயர்ந்து மக்கள் இடம்பெயர்ந்து அமைதி இல்லாமல் மனோநிலை பாதிக்கப்பட்டு பெரும் துன்பத்துடன் வாழ்கிறார்கள். இறையருள் வேண்டி தங்கள் குல தெய்வமான முருகப்பெருமானை தரிசிக்க வரும் போது ஏற்படும் சிரமங்கள், கஷ்டங்கள் போதிய போக்குவரத்து இன்மையாலும் மன அழுத்தத்துடன் நின்மதி இழந்து துன்பப்படுகிறார்கள்.

மேலும் சீரற்ற காலநிலை, போதிய ஊழியர்கள்- சிற்பந்திகள் பற்றாக்குறை, சிவாச்சாரியார்கள் பற்றாக்குறையும், ஆலயத்துக்கு வந்து போகும் போது ஏற்படும் மன உளைச்சல், கஷ்டங்கள், இடைஞ்சல்கள் இருப்பதனாலும் பொருள்கள் விலை ஏற்றத்தினாலும், ஆலயத்துக்கு போதிய வருமானம் இன்மையாலும், மேற்கொண்டு அமைதியான கர்மாக்களை தெய் வீகமாக செயலாற்ற இயலாத சூழ்நிலை இருப்பதனால் உற்சவங்களை முன்னெடுத்து நடத்த முடியாமல் நிலைமை உள்ளது. எனவே இவ்வருடம் காம்யோற்ஸவ வைபவங்கள் இடம்பெற மாட்டாது என்பதை அடியார்களுக்கு மிகுந்த வருத்தத்துடனும் கவலையும் அறியத்தருகின்றோம்.

இருப்பினும் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை ஆலயம் திறந்திருக்கும். நித்திய பூசைகள் நடைபெறும். விசேட ஆராதனைகளும் பக்கதர்களின் நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்யும் வைபவங்களும் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம் - என்றுள்ளது. (ஒ-ஐ)

# விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்த நிறுவனங்களின் சொத்துகள் ரத்து

மொன்றியல்,ஜன.23

தமிழீழ விடுதலைப்புலிகளுக்காக கனடாவில் நிதி சேகரித்த உலக தமிழர் பேரவை உள்ளிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் சொத்துக்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதற்கான தீர்மானத்தை கனடா அரசு மேற்கொண்டுள்ளது.

9 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பயனாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ மற்றும் கியூ பெக் பிராந்தியங்களில் இயங்கின வந்த உலக தமிழர் பேரவை மூலம் வருடம் ஒன்றிற்கு 7 லட்சத்து 63 ஆயிரம் டொலர் நிதி சேகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேகரிக்கப்பட்ட நிதியில் பெரும் பாலான நிதி தமிழீழ விடுதலைப்புலிக்காக மலேசிய கணக்கு ஒன்றில் வைப்பு செய்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (த)

# போலி வாகன பத்திரத்தால் ரூ. 2 கோடி நட்டம்

யாழ்ப்பாணம், ஜன.23

மேல்மாகாண வீதிப் போக்குவரத்து அதிகா ரசபை 60 வாகன அனுமதிப் பத்திரங்களை களவாக வழங்கியுள்ளதால் அரசுக்கு 2 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

''வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது டென்டர் முறையிலாகும். 2008 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி கால அட்டவணையொன்றை தாயாரிக்க வேண்டும்.

அதன்பின்னரே வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்கமுடியும். ஆனால் போக்குவரத்து அதிகாரசபை போலி அனுமதிப் பத்திரம் வழங்கியுள்ளது. இதற்கு போக்குவரத்து அமைச்சரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்'' என்றார்.

# பொதுமக்கள் தகவல் கொடுத்தால் போதைவஸ்து பாவனை ஒழிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.மாவட்டத்தில் போதைவஸ்து பாவனையைக் கட்டுப்படுத்த தகவல் தருமாறு பொது மக்களை வடபிராந்திய பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மக்களை கோரியுள்ளார்.

யாழ். செயலகத்தில் நேற்று இடம் பெற்ற குற்றச்செயல் தடுப்புச் சம்பந்தமான கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில் பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுசில் பெரேரா இப்படித் தெரிவித்தார்.

குடாநாட்டில் மதுப்பழக்கம், போதைவஸ்து பழக்கம் அதிகரித்து வருகிறது. இதைக்கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த வைத்தியர் கோரினார்.

போதைவஸ்து தொடர்பாக பொதுமக்கள் தகவல் தந்தால், விற்பனையாளர், வாங்கியவர், பாவித்தவர் ஆகிய முத்தரப்பினருக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதிப் பொஸில் மா அதிபர் சுசில் பெரேரா தெரிவித்தார்.

குடாநாட்டுக்கு வீதி அபிவிருத்தி, கட்டட நிர்மாணம் ஆகிய பணிகளுக்கு வேலைக்கு வருபவர்களே போதைவஸ்துக்களை எடுத்து வருவதாக தகவல் கிடைத்துள்ளது என்று அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அங்கு குறிப்பிட்டார். (ஒ-ஐ)



# சந்தியடிச் சோமு

## சத்தம் வராமல் வாயாட்டினால் கௌரவம் கிடைக்கும் போல....

காலையில எழும்பேலாமல் பனி இப்பவே வாட்டி எடுக்குது. என்னொட்ட வயசுக்காரர் பலபேர் சளியள் இழுப்புக்கள் என்று இந்தா அந்தா என்று இருக்கினம். குளிர் தாங்கேலாமல் கிடக்கிறதால சாக்குக் கட்டிலுக்கு இன்னுமொரு சாக்கும் சேர்த்து அடிச்சுப்போட்டுக் கிடக்கிறன். அதனால எனக்கு இழுப்பு சளி ஒண்டும் அண்டேல்ல. இடையில ஒருக்கா மன்னாருக்கும் போய் வந்தனான்.

''நடடா ராஜா நாளை விடியப் போகுது ............ பொழுது சாயும் நேரம் இது. கள்ளர் பாயும் நேரம்.... '' இதென்னடா பாட்டு எண்டு நினைக்கிறியளே! விடிய வெள்ளன மன்னாருக்கு போறதுக்காக பஸ் பிடிக்க என்னை ஏத்திக் கொண்டு போன பக்கத்து வீட்டுப் 'பெடியன்' பாடின பாட்டிது. 'பெடி' எண்டால் அவனுக்கு ஒரு நாற்பத்தியஞ்சு வயசிருக்கும். எங்கட றோட்டுக் கிடக்கிற கிடயில வண்டில்ல போற மாதிரித்தான் கிடக்கு. அதுதான் அவன் அப்படி பாடிக்கொண்டு வந்தவன். அறுவார், வடக்கின் வசந்த மென்டுறாங்கள், ஆனால் இஞ்ச றோட்டில போகவர ஏலாமக் கிடக்கு. உது என்ன கோதாரி வசந்தமோ தெரியாது. என்னை மாதிரி வெறும் வேட்டி கட்டுறாக்கள் உந்த றோட்டுகளில சைக்கிள்ள போகேலாது. உள்ள கிடங்குகளுக்க விழுந்து எழும்ப குலை அறுந்து போகுமாப் போல இருக்கு.

றோட்டில் வாகனங்கள் வேற கூடிப்போச்சுது. வெய்யில் நேரத்தில வெளியில வெளிக்கிட்டால் புழுதி குடிச்சே செத்து போவம் போலக் கிடக்குது.றோட் அகலிப்பு எண்டு கோயில் குடியிருப்பெல்லாம் இடிக்கினம்; ஏதோ விடிவு வரப்போகுதெண்டு விளாசுறாங்கள். இருக்கிற றோட்ட ஒழுங்கா வச்சுருக்கக் காணோம். குண்டும் குழியும் புழுதியுமாக் கிடக்கு என்று நான் சந்தியில நிண்டு பொரிஞ்சு தள்ள, கன காலத்துக்குப் பிறகு சந்திக்கு வந்த நடேசண்ணை சொன்னார், நல்லூரடிப் பக்கமா மஹிந்தர் வாறதுக்கு முதல் நாள் இரவிரவா றோட்டில பள்ளங்களை தார் போட்டுப்பொத்தினவையாம் எண்டு. ''அதொரு ஒட்டுச்சித்திரம் போல இருந்திச்சு. அது மஹிந்தர் அங்கால போக புழுதியாக் கிளம்புது. எல்லாரும் நல்லாக் கணக்கு காட்டி பேக்காட்ட பழகிட்டாங்கள்'' எண்டு அந்தாள் ஆத்திரப்பட்டிச்சு.

கதிரண்ணை சைக்கிள விட்டுட்டு இறங்கினவர், வந்த வேகத்திலயே ''இவங்கள் மாதம் ஐஞ்சு விழாக்கொண்டாடுற காசை றோட்டுத் திருத்திறதுக்கு செலவிட்டாலே அத நல்லா வைச்சிருக்கலாம். பெறுமாதக்காரர் உந்த றோட்டில போனா ஒரு கிலோ மீற்றர் தூரத்திலயே பெற வேண்டியதுதான். பத்துப்போட்டுட்டு றோட்டுத் திருத்தினதெண்டு கணக்கக் காட்டுவாங்களோ என்ன கோதாரியோ! நாங்கள் இதில நின்று கதைச்சு என்ன நடக்கப்போகுது'' என்று சொல்லிக் கொண்டு வெத்திலைய வாங்கிக் கொண்டு அந்தாள் விலகிச்சுது.

நாங்களும் வெளிக்கிடுவம் எண்டு சைக்கிளத்தூக்க கம்பஸ் வாத்தியார் பாண் வாங்க வந்திட்டார். எங்களப் பாத்திட்டு ''என்ன வெள்ளனக் கிளம்பிட்டீங்கள்'' எண்டுகொண்டு ஆள் வந்திச்சுது. ஆள் வலியக் கதைக்க விரும்புற படியால் ஏதோ வில்லங்கம் வைச்சிருக்கிறார் போலயெண்டு நினைச்சு, ''உந்த மஹிந்தர் வரேக்க றோட்டுக்குத் தார் குழைச்சு ஒட்டினதைச் சொன்னம்'' எண்டன் நான். அதைக்கேட்டிட்டு அந்தாள் சொல்லிச்சு, ''கன அலுவல்கள் இப்படி நடந்குது பாருங்கோ! பொங்கல் திருவிழாவில. தேசியப் பாடசாலை ஒண்டின்ட பிள்ளையள் மஹிந்தரை மகிழ்விக்க நடனமாடினவை. அதுக்குப் பாட்டு இசை எல்லாம் சி.டி யில றெக்கோட் பண்ணி போட்டவையாம். அது பரவாயில்லை; ஏற்கக்கூடியது. பின்னால மியூசிக் போக முன்னால இருந்த பாட்டுக்காரரும் பக்கவாத்தியக்காரரும் முன்னால இருந்தபடிக்கு தலையையும் ஆட்டி ஏதோ தாங்கள்தான் வாசிச்சவை போல நடிச்சுப் போட்டும் வந்தவையாம்'' எண்டார். வயலினும் மிருதங்கமும் வாசிக்கிறது மாதிரி நடிச்சவை அச்சுப் பிச்சில்லாம அசலா நடிச்சவை எண்டும் அந்தாள் பாராட்டிச்சுது.

எல்லாம் நல்லாத்தான் நடந்தது. ஆனாலும் ஒரு சின்னப் பிசிறில குட்டு வெளிப்பட்டுப் போட்டுதாம். மேடையில இருந்தவர் மிருதங்கத்தை படு சீரியஸா வாசிச்சுக் கொண்டிருக்க 'பொக்ஸில' தபேலா சத்தமா வெளியில வருதாம். விசயம் தெரிஞ்சாக்களுக்கு ஒரே யோசினையாப் போச்சாம். ''என்னடா இது! மிருதங்கம் வாசிக்க 'மைக்'குக்குள்ளால தபேலாவா வெளியில வாற அதிசயத்தை இப்பத்தான் காணுறம்'' எண்டு அங்கலாய்ச்சுப் போட்டினம். ''இப்பிடி தப்புத் தாளத்துக்கு நடிச்ச ஆளுக்குக் கிட்டடியில பெரிய விருதும் கிடைச்சது'' எண்டு ஒரு நக்கலும் விட்டுட்டுப் போனார் மாஸ்டர். அதெல்லாத்தின்ரயும் உச்சம், சி.டி போட்டு பாடுற மாதிரி முன்னால இருந்து வாயாட்டினவருக்கும் மஹிந்தர் பொன்னாடை போட்டு கௌரவிச்சிருக்கிறார். ''உலகத்திலேயே முதன்மையான இயக்கத் தையே ஒழிச்சவர எவ்வளவு சிம்பிளா ஏமாத்திப் போட்டினம் எங்க ஆக்கள். அதப் பாராட்டுறத விட்டுட்டு முட்டையில மயிர் புடுங் கிறியள் நீங்கள்'' எண்டார் நடேசண்ணை. நான் சொன்னன். ''அதில்லைப் பாருங்கோ! சத்தம்போடாமல் வாயாட்டினா பொன்னாடை போத்து [illegible] போல ...'' எண்டு. நான் சொல்லுறது உங்களுக்குச் சரியெண்டு படுகுதோ....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

2 வயது BOXER பெண் நாய் - 18000/= Double நாய் கூடு - 19,000 (ஒருகூட்டில் 2 நாய் விடமுடியும். சின்ன நாய்க்கூடு -5000/- உடன் விற்பனைக்கு

தொடர்பு: 0779485703

## காணி உடனடி விற்பனைக்கு

இணுவில் கிழக்கு சோதிலிங்க சாமியார் வீட்டுக்கு அருகில் வெறும் காணி 1 1/2 பரப்பு விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

*தொடர்பு: நாகமித்திரன் சர்வேஸ்வரன் "ஸ்ரீராம்" கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு.*

தொ.பே.இல: 0779364493

## தேவை

வயோதிபர் இருவருக்கு வீடு தேவை. கோப்பாய், கொக்குவில், மானிப்பாய் பகுதிகளில் விரும்பத்தக்கது. 0777630215

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த 38 வயது சுமாரான அழகு மணமகளுக்கு அரசாங்க உத்தியோகம் அல்லது சொந்த தொழில் செய்யும் மணமகனை எதிர்பார்க்கிறோம். யாழ்.நகருக்கு 5 மையில் சுற்றாடலில் சகல வசதிகளுடன் வீடு மற்றும் தகுந்த சீதனம் கொடுக்கப்படும்.

தொடர்பு: 0770862547

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாவட்ட அமைப்பாளர், யாழ். திரு.க.கமலேந்திரன்



அமைச்சர்



பிரதேச அமைப்பாளர் வலி.கிழக்குகோப்பாய் இ.ஐங்கரன்

மக்கள் சேவை மகேசன் சேவை என்பதற்கு எடுத்துக்காட்டாக 19.01.2011 ஆம்திகதி எமது பகுதிக்கு வருகை தந்து பாலர்களின் நலன் கருதி முன்பள்ளிக்கட்டடத்தினை புனரமைத்துத் தந்து திறந்து வைத்து அதற்கு மேலாகவும் ஒரு லட்சம்ரூபா நிதி உதவியையும் வழங்கி எமக்கு உதவி செய்த பாரம்பரிய கைத்தொழில் , சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா ஐயா அவர்களை மக்கள் பாராட்டி வாழ்த்துவதுடன் எமது யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் அவர்களின் உதவி மூலம் எமக்குக்கிடைத்த உதவிகளையும் பாராட்டுகின்றோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக எங்களின் நிலை கண்டு எங்கள் துயர் துடைத்த திரு.இ.ஐங்கரன் அவர்களின் அணியில் உறுதியாக நின்று உழைப்போம் என்று உறுதியாக வாழ்த்துகிறோம்.

**கோப்பாய் மத்தி. வள்ளியம்மன் சனசமூக நிலையம்.**

## 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

*தோற்றம் 03.03.1933* *மறைவு 24.12.2010*



கடந்த 24.12.2010 வெள்ளிக்கிழமை அன்று ஜேர்மனியில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

*அமரர்* **சின்னத்தம்பி கந்தசாமி**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த கிரியைகள் விகிர்தி வருஷம் தை 9 ஆம் நாள் இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறுகின்றன.அன்றையதினம் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பனை, சுன்னாகம் மேற்கு

தளைச்செல்வம் *(சகலன்)* பெறாமக்கள்

## A/L முடித்த மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி

உங்கள் உயர்கல்விகளைத் தொடர இந்தியாவைச் சேர்ந்த நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

- ★ இந்தியக் கல்லூரிகளில் பட்டப்படிப்புகளையும் பட்ட மேற்படிப்புக்களையும் தொடர்வதற்கு தேவையான ஒழுங்குகள் அத்தனையும் செய்து தரப்படும்.
- ★ சிறந்த மாணவர்களுக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்பும் தொழில் விசாவும் பெற்றுத்தரப்படும்.
- ★ இது தொடர்பான ஆலோசனைகளைப் பெறவும் தங்களின் சந்தேகங்களுக்கான விடைகளைப் பெறவும் ஓர் அரியவாய்ப்பு.
- ★ அனுமதி முற்றிலும் இலவசம்.

நாள் : 26 ஆம் திகதி ஜனவரி 2011

நேரம் : மு.ப. 10 மணி

இடம் : நியு பிறைட் எடிக்கேசன் சென்ரர், இலக்கம் 95, மத்திய வீதி, யாழ்ப்பாணம்.

*அனுமதி இலவசம் குளிர்பானங்களும் வழங்கப்படும்.*

பணிப்பாளர், கப்ஸோ நிறுவனம்

## நன்றி கூறிப் பாராட்டுகின்றோம்



நுண்கலைப் பட்டதாரிகள் ஆசிரிய நியமனத்துக்கான நேர்முகப்பரீட்சைக்கான அழைப்பு புள்ளியின் அடிப்படையில் சிறு தொகையினருக்கே கோரப்பட்டிருந்த நிலையில் மிகுதிப்பேரும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உதவுமாறு இலங்கை சுதந்திரக் கட்சியின் வடக்கு மாகாண அமைப்பாளராகிய திரு.அங்கயன் இராமநாதன் அவர்களிடம் கேட்டபோது அதற்கு உரிய அமைச்சருடன் அணுகி வழி செய்கிறேன் எனக் கூறி அதன்படியே செயற்பட்டு நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பினை ஏற்படுத்தியமையால் அங்கஜன் அண்ணா அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றிகளைக்கூறுவதோடு அவரது சேவைகள் தொடரவேண்டும் எனவும் பாராட்டி வாழ்த்து கின்றோம்.

"இளைஞரின் வேதனையை உணர்ந்து செயற்படும் இன்னொரு இளைஞனுக்கு நன்றி"

நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய நுண்கலைப்பட்டதாரிகள் சார்பில்
ம.தயாசீலன்
0774249988

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரிய சமூக சேவையாளரும் சமாதான நீதிவானும், குணபாலன் வாகன உரிமையாளரும் புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் ஆகிய

**ஆறுமுகம் பொன்னம்பலம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய வீரகத்தி விநாயகனை வேண்டி நிற்கின்றோம்.

**அரியநாயகன் புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர், மாணிக்கவாசக சுவாமிகள் மடாலய சபை, திருவாசக மடம், புங்குடுதீவு.**

## கட்டட நிர்மாணத்துறைப் பணியாளர்களுக்கான வெற்றிடங்கள்

யாழ்.குடாநாட்டிலும், வவுனியா மற்றும் கிளிநொச்சி நகர்களிலும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய கட்டட நிர்மாண வேலைஸ்தலங்களுக்கு கீழ்குறிப்பிடப்படும் பணியாளர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. தங்குமிட வசதிகள் உண்டு. தகுதியுடையோர் கீழ்வரும் முகவரிக்குத் தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும். அல்லது நேரில் சமுகமளிக்கவும்.

- ★ கட்டட கணிய அளவிட்டாளர் (Quantity Surveyor) - 04
  இத்துறைசார் தகுதியுடையவர்களும், அனுபவமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- ★ கட்டட மேற்பார்வையாளர் (Supervisors) - 06
  N.C.T தகைமையுடன் அனுபவம் தேவை.
- ★ களஞ்சியப் பொறுப்பாளர் (Store keeper) - 04
- ★ காவலாளிகள் (Security Guards) - 06
- ★ மேசன் தொழிலாளர் (Masons) - 12
- ★ தச்சுத் தொழிலாளர் (Carpenters) - 08
- ★ மின் இணைப்பாளர் (Electricians) - 04
- ★ குழாய் நீர் பொருத்துநர் (Plumbers) - 05
- ★ உதவிப் பணியாள்கள் (Laboures) - 25
- ★ பார ஊர்தி ஓட்டுநர் (Drivers) - 02
- ★ "டபிள் கப்" வாகன ஓட்டுநர் (Driver) - 01

தொடர்புகளுக்கு:

கிளை முகாமையாளர்
வீ.வீ.இராமநாதன் அன்கொம்பனி
பிறைவேட் லிமிடெட்
இல.23, நல்லூரர் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அல்லது

முகாமையாளர்
வீ.வீ.இராமநாதன் அன்கொம்பனி
பிறைவட் லிமிடெட்
பொது வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மீள்குடியமர்ந்த எமது மக்களும் அவர்களுக்கான வசதி வாய்ப்புகளும்

அண்மையில் இலங்கைக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முக்கிய சில இடங்களைப் பார்வையிட்டுள்ள ஐ.நா. மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளரும் அவசர உதவிகளுக்கான பிரதி இணைப்பாளருமான கதரின் பிறேக் அம்மையார் கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்த போது சில கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்.

இக்கருத்துக்களை பத்திரிகையாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவோ ஊடகங்களில் வெளிவரச் செய்வதற்காகவோ அவர் வெளியிட்டுள்ளார் என்று எடுத்துக் கொள்வது தவறாகும்.

தாம் சென்ற இடங்களில் பார்த்தவை கேட்டவைகள் - அவை தொடர்பான தமது கருத்துக்கள் தொடர்பாக பிறேக் அம்மையார் ஐ.நாவிடம் அறிக்கை சமர்ப்பிப்பார் என்பது ஒரு புறமிருக்க அவர் கொழும்பில் அதிகாரிகளையும் அமைச்சர்களையும் சந்தித்தபோதும் அவை தொடர்பான கருத்துக்களை பரிமாறிக் கொண்டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளம் தொடர்பான இடர் பாடுகளைச் சமாளிப்பதற்கும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை அவர் பாராட்டியுள்ளார்.

அதேவேளை ஏற்கனவே இடம்பெயர்ந்து பின்னர் தம் கிராமங் களுக்குத் திரும்பியுள்ள மக்களுக்கான உதவிகளை மேம்படுத்துவதற்கு இன்னும் அதிக முயற்சிகள் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் மட்டுப்படுத்திய அளவிலேயே கிடைப்பதாக அம்மையார் குறிப்பிட்டிருப்பதுடன் இப்பகுதியில் வேலைவாய்ப்புகள் மிகக் குறைவாகவே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிறேக் அம்மையார் முல்லைத்தீவு மற்றும் மக்கள் மீளக்குடியமர்த் தப்பட்டுள்ள பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டபோது அங்குள்ள மக்களின் தேவைகள், குறைபாடுகள் குறித்து அரச அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் எடுத்துக் கூறியுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவவென உலக நாடுகள் பலவும் ஏராளமாக இலங்கை அரசுக்குப் பணம் வழங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது. ஐ.நாவும் பெருமளவில் உதவிகளையும் புரிகின்றது. ஆனால் இன்னமும் சுமார் 35 ஆயிரம் மக்களுக்குமேல் மீளக் குடியமர்த்தப்படவிருக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது. ஏற்கனவே குடியமர்த்தப்பட்டவர்களிலும் பெரும்பாலானவர்கள் கூடாரங்களி லும், அரைகுறையாக மறைக்கப்பட்ட குடிசைகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். அப்படியானால் கிடைத்துள்ள பணம் எல்லாம் எங்கே போகின்றது என்ற கேள்வி எழுவது இயற்கையே.

இந்தியா கட்டித் தருவதாகக் கூறியுள்ள 50 ஆயிரம் வீடுகளும் முற்றுப்பெறும் வரை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்கிறதா என்று தெரியவில்லை.

மீளக்குடியமர்ந்தப்பட்ட மக்களுக்குப் போதுமான வசதிகள் இன்னமும் செய்து கொடுக்கப்படவில்லையென்பதை ஐ.நா.அதிகாரி குற்றச்சாட்டாக வெளியிடாவிட்டாலும் குறைபாடுகளும் பற்றாக் குறைகளும் இருப்பதைச் சுட்டிக்காட்டாமல் விடவில்லை. விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்களில் ஈடுபடவும் வேறு பணிகளை மேற்கொள்ளவும் இந்த இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களுக்கு வசதி வாய்ப்புக்கள் தாராளமாக வழங்கப்பட வேண்டும்.

புதிய தொழில் எதிலும் ஈடுபடவிரும்பும் மக்களை அந்த வகையில் நெறிப்படுத்துவதற்கு அதிகாரிகள் முயற்சி மேற்கொள்வது அவசியம்.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்துள்ள மக்கள் தொடர்ந்தும் நிவாரணங்களை எதிர்பார்த்து இருக்க முடியாது. ஆனால் நிவாரணம் இன்றி அவர்கள் பட்டினியில் கிடக்கவும் முடியாது. எனவே அம்மக்கள் இடம்பெயர்வதற்கு முன்னர் வாழ்ந்த வகையில் தமது இருப்பிடங்களில் தமக்குரிய தொழில்களைச் செய்து அவை மூலம் வரும் வருமானத்தைப் பகிர்ந்து கொள்ளவும் அடிப்படை ஆதாரங் களை அரசு அவசரமாகச் செய்து கொடுப்பது அவசியம்.

இளைய சமுதாயத்தினருக்கு ஏற்ற பயிற்சிகள், தொழில் முயற்சி களுக்கான ஆதாரத்தை அரசு தரப்பிலிருந்தே அவர்கள் எதிர்பார்ப்பது இயற்கை. அதுமட்டுமல்ல, இம்மக்களின் பிள்ளைகளுக்கான கல்விக் கூடங்கள் பெரும்பாலும் இன்னமும் திருத்தப்படாமலே இருப்பதாகத் தகவல். இவைகள், இவைபோன்ற விடயங்களை - இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலமே தெரிந்து கொள்ளலாம். அரச அதிகாரிகள் அறிக்கைகளைத் தயாரிப்பார்கள். அவைகளில் பெரும்பாலானவை அரசு வழங்கும் நிதிகளைத் தாம் பக்குவமாகச் செலவு செய்திருப்பதாகவே காட்ட முயற்சி எடுக்கப் படுபவையாக இருக்கும்.

கிழக்கு இலங்கையில் அண்மையில் ஒரு பகுதியில் அமைச்சர் ஒருவர் மக்களின் நிவாரணத்துக்கென ஒதுக்கிய நிதியில் ஒரு தொகுதிப் பணம் களவாடப்பட்டுவிட்டது என்று கூறி பிரதேச செயலர் ஒருவர் அதனை வெட் டிக் குறைத்தார் என்றும் அதனால் அப்பகுதி மக்கள் கிளர்ந்தெழுந் தார்கள் என்றும் செய்திகள் வந்தன.

எனவே போரினாலும் மழை வெள்ளத்தினாலும் இடர்களுக்குள்ளா கியுள்ள மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்க்கை சிறப்புறுவதற்கான அவசரப் பணிகளை அரசும் அதிகாரிகளும் மேற்கொள்ள வேண்டிய கால்கட்டம் தோன்றியுள்ளது.

மீளவும் ஐ.நா.அதிகாரி ஒருவர் ஆய்வு நடத்த வராமல் இருக்க வேண்டும். அதற்கேற்றவாறு சம்பந்தப்பட்டவர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

# பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி விரைவில் ஆரம்பம்



## இந்தியத் தூதுவர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.23

பலாலி இராணுவ விமானத்தளத்தை பொதுமக்கள் விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா உதவிகளை வழங்கும் என்று இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் வர்த்தகக் கண்காட்சி யைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதில் இந்தியா அக்கறையுடன் உள்ளது.

இதற்காக பலாலி விமானப்படைத் தளம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

தலைமன்னார் படகுச்சேவையை மீள ஆரம்பிப்பதற்காக இராமேஸ்வரம் இறங்கு துறையை இந்தியா புனரமைப்பு செய்யத் தொடங்கியுள்ளது. இந்தப் புனரமைப்பு வேலை கள் முடிவடைய மூன்று நான்கு மாதங்கள் தேவைப்படும்.

கொழும்பு - தூத்துக்குடி இடையிலான படகுச் சேவையை ஆரம்பிப்பதற்கான புரிந்துணர்வு உடன்பாடு கடந்த மாதம் செய்து கொள்ளப்பட்டது. இந்தச் சேவை மார்ச் மாதமளவில் ஆரம்பமாகும்.

இந்த சேவை இரு நாடுகளையும் சேர்ந்த சாதாரண மக்கள் பயணம் செய்வதற்கு வசதியாக அமையும். இதன் காரணமாக இருதரப்பு உறவுகள் மேலும் பலமடையும்.

காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கும் இந்தியா நிதி உதவிகளை வழங்கியுள்ளது. இதற்கான வேலைகள் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# கப்பலில் கனடா சென்றவர்களில் 15 பேர் வெளியேற்றப்படுவார்கள்

மொன்றியல்,ஜன.23

சன்சீ கப்பல் மூலம் கடந்த ஓகஸ்ட் மாதம் கனடாவை சென்றடைந்தவர்களில் 15 பேர் போர்க்குற்றங்கள், தீவிரவாத செயல்கள் அல்லது ஆள்கடத்தல் சம்பவங் களுடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றப் பட வேண்டும் என்றும் கனேடிய அரசஅதி காரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பாக கனேடிய எல்லை சேவைகள் முகவரகத்தின் பேச்சாளர் மெலிசா அன்டர்சன் தகவல் வெளிடுகை யில்,

சன் சீ கப்பலில் வந்த 15 ஆண்களின் அடைக்கலக் கோரிக்கைகள் நிராகரிக்கப் பட்டுள்ளன.

இவர்களில் 14 பேர் தீவிரவாத அமைப்பு டன் தொடர்புடையவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இவர்களில் ஒருவர் வெளிநாடுகளுக்கு ஆள்களைக் கடத்தும் சம்பவங்களிலும் தொடர்புபட்டுள்ளார்.

மற்றொருவர் போர்க்குற்றங்களில் தொடர்புபட்டுள்ளார் என்று தெரிவித்தார்.

சன் சீ கப்பலில் கனடாவுக்குச் சென்ற 492 அகதிகளில் 307 பேர் விடுவிக்கப்பட் டுள்ளனர்.

136 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். இவர்களில் 12 பேர் பெண் களாவர்.

அதேவேளை இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள எல்லை சேவைகள் முகவரகத்தின் பெண் பேச்சாளரான சகிலா மன்சூர் கனேடியர்களின் பாதுகாப்புக் குறித்து தமது அமைப்பு மிகவும் கவனமாக இருக்கும், அதற்கே முன்னுரிமை கொடுக் கும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளையில், சன் சீ கப்பல் மூலம் அகதிகளை கனடாவுக்கு அனுப்பி வைத்த சந்தேக நபர்களில் ஒருவரை தாய்லாந்து அதிகாரிகள் கைது செய்துள்ளதாக கனேடிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நடேசன் ஜெயானந்தன் என்ற 48 வய தான ஈழத்தமிழரே தாய்லாந்து குடிவரவுக் காவல்துறையினரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

இவருடன் மேலும் ஏழு பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பான் கென் மாவட்டத் தில் நடத்தப்பட்ட தேடுதலில் கைது செய் யபட்டுள்ளனர்.

அடுத்த மாதம் 200 அகதிகளுடன் கப் பல் ஒன்றை கனடாவுக்கு அனுப்புவதற்கு திட்டமிட்டிருந்த போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

எனினும் கைது செய்யப்பட்ட எட்டுப் பேர் மீதும் சட்டவிரோதமாக தாய்லாந்துக் குள் நுழைந்த குற்றசாட்டு அல்லது தாய் லாந்தில் மேலதிக காலம் தங்கியிருந்த குற் றச்சாட்டே சுமத்தப்படும் என்று அதிகாரி கள் கூறியுள்ளனர்.

அதேவேளை, தாய்லாந்தில் கைது செய்யப்பட்ட நடேசன் ஜெயானந்தன் சன் சீ கப்பலை அனுப்பிய சந்தேக நபர்களில் ஒருவர் என்ற போதும் பிரதான ஒருங்கிணைப் பாளர் அவர் அல்ல என்று கனேடிய அதி காரிகள் கூறியுள்ளனர். (த)

# கடலோர நகரங்களை நாட்டுக்குள் மீள்நிர்மாணிக்க அரசு 20 வருடத் திட்டம்

கொழும்பு,ஜன.23

இலங்கையின் கடலோரமாக அமைந்துள்ள அனைத்துப் பிரதான நகரங்களையும் உள்நாட்டினுள் மீள் நிர்மாணிக்க வீடமைப்பு மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை உட்பட கடலோரமாக அமைந்திருக்கும் பிரதான நகரங்களும் எதிர்வரும் காலங்களில் கடற்கரையோரத் திலிருந்து தொலைவில் அமைந்துள்ள பிரதேசங்களில் மீள நிர்மாணிக்கப்படும்.

அதற்கென 20 வருட செயற்திட்டம் மற்றும் அதனுடன் இணைந்ததான இலங்கையின் பௌதீக வரைபுத் திட்டம் என்பன உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

சுனாமி மற்றும் கடல்கொந்தளிப்பு, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங் களிலிருந்து முக்கிய நகரங்களைப் பாதுகாப்பதும், அவற்றின் மூலமான உயிர்ச்சேதத்தைக் கட்டுப்படுத்தவும் நோக்காகக் கொண்டே குறித்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தை முன்னேற்ற இந்தியா முழுவீச்சில் உதவும்

## இந்திய வங்கித் திறப்பு விழாவில் தூதுவர்

யாழ்ப்பாணம், ஜன.23

வடக்கில் யுத்தம் முடிந்த பின்னர் பத்துத் தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளேன். ஒவ்வொரு விஜயத்தின் போதும் படிப்படியான முன்னேற்றங்களைக்காண்கிறேன். யாழ்ப்பாணம் விரைவாக முழு வளர்ச்சி-முன்னேற்றத்தைக்காண பொருளாதரா ரீதியில் இந்தியா முடிந்தளவு உதவும்.

இந்திய தூதுவர் அசோக் கே. காந்த் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியன் வங்கியின் கிளை நேற்று முன்தினம் ஸ்ரான்லி வீதியில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மேளதாளங்களுடன் இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரா லும் வரவேற்கப்பட்டனர்.

அதன் பின்னர் அஜித் நிவாட் கப்ரால் நாடாவை வெட்டி வங்கியைத் திறந்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து இந்தியன் வங்கியின் தலைவர் ரி.எம் பாசான் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது.

அதில் இந்தியத் தூதுவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது.

இந்திய வங்கியின் கிளை ஒன்று திறந்து வைக்கப்படும் முக்கிய நிகழ்வு இன்று இடம் பெற்றுள்ளது.

கடந்த ஐப்பசி மாதம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா வந்த போது இந்தியன் வங்கிக் கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறக்கும் இந்தியாவின் விருப்பம் அவருக்குத் தெரிவிக்கப் பட்டது. உடன் அதற்கு அவர் அனுமதி வழங்கிவிட்டார்.

இந்தக் கிளை விரைவாக இங்கு திறப்பதற்கு இலங்கை அரசும் இலங்கை மத்திய வங்கியும் பூரண ஒத்துழைப்பை வழங்கின.

இந்த வங்கியின் கிளை இங்கு திறக்கப்பட்டமைக்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று- யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியுள்ள சர்வதேச வர்த்தக சந்தையில் 45 தொழில் நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. அவை தமது தொழில் நுட்பத்தை இங்குள்ள தொழில் நிறுவனங்களுக்கு அறிமுகம் செய்கின்றன. இந்தத் தொழில் நிறுவனங்கள் இங்கு தொழில்களை ஆரம்பிக்க இந்தியன் வங்கி உதவிகளைச் செய்யும்.

இந்த வங்கி ஊடாக சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்க உதவிகளை வழங்கவிருக்கிறோம்.

விவசாயம், கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் சிறுகைத் தொழில்களை ஆரம்பிக்க இந்த வங்கி மூலம் உதவிகளை வழங்குவோம். யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் இந்தியா ஒத்துழைப்பு வழங்குவதற்கும் இந்த வங்கிக் கிளை இங்கு இருப்பது பொருத்தமானதாகும்.

இந்த வங்கியின் ஊடாக பல்வேறு தொழில் துறைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. அந்தத் தொழில்களை இங்கும் ஆரம் பிக்க ஏற்பாடு செய்யப் படும். என்றார் அவர். (ஒ-ஐ-14)

# மண்டைதீவுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஜன.23

மண்டைதீவு பிரதேசத்திக்கு நிலத்தடிக் குழாய் மூலம் குடி தண்ணீர் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

ஆரம்ப நடவடிக்கையாக நிலத்தடி குழாய்களைப் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அல்லைப்பிட்டிப் பகுதியில் உள்ள நன்னீர் கிணறுகளில் இருந்து நேரடியாக குழாய் மூலம் மண்டைதீவுப் பிரதேச மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பிரதேச மக்களுக்கு தற்போது பவுசர் வாகனங்கள் மூலமே குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த-111-26)

# வீதிகளின் புனரமைப்புக்கு புதிய பொறியியலாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன.23

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குப் புதிதாக இரண்டு பொறியியலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டின் வீதிப்புனரமைப்புப் பணிகளைத் துரிதமாக முன்னெடுப்பதற்காகவே இந்தப் புதிய பொறியியலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அண்மையில் பெய்தமழையினால் குடாநாட்டின் சகல வீதிகளும் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு மோசமாகச் சேதமடைந்துள்ளன.

இந்த வீதிகளைத் தற்காலிகமாகத் தார்க்கலவை மூலம் செப்பனிடும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

அதனைவிட வீதி அகலிப்பு, பாலம் புனரமைப்பு போன்ற பணிகளும் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகளை மேற்பார்வை செய்து அவற்றை மேலும் துரிதப்படுத்துவதற்காகவே இந்த இரு பொறியியலாளர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். (த-26)

## நல்லகாலம் பிறக்கிறது...



எப்போது வரும்; அல்லைப்பிட்டியில் இருந்து மண்டைதீவுக்கான நீர் விநியோகக்குழாய் தற்சமயம் போடப்பட்டு வருகின்றதைக் காணலாம். (7)

# இன்று வைரவிழா

வடமராட்சி, ஜன.23

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் வைர விழாவும், மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி எவில் நடைபெறவுள் ளது.

மாவட்ட வைத்திய அதிகாரி கே. மயில்லேறும் பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் காசநோய் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் பி.வி. அஸ்விஸ் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-9-236)

# பெண் ஊழியருக்கு சேலை கட்டாயம்

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் பெண் ஊழியர்களின் உடை விடயத்திலும் இப்போது அதிக அக்கறை காட்டப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் கடமையாற்றும் பெண் ஊழியர்கள் தமிழ்மக்களின் கலாசாரத்தைப்பேணும் வகையில் சேலை அணிந்து வர வேண்டும் எனத் தமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக யாழ். செயலகத்தில் பணியாற்றும் பெண் ஊழியர்கள் தெரிவித்தனர்.

யாழ்.அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோர்களுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

தற்போது அரச அலுவலகங்களில் கடமையாற்றும் பெண் அரச ஊழியர்கள் பஞ்சாபி, சுடிதார், மற்றும் குட்டைப் பாவாடை எனத் தமிழ்மக்களுடைய கலாசாரத்துக்குப் புறம்பான உடைகளை அணிந்து அலுவலகங்களில் கடமையாற்றுவது தொடர்பாகப் பொது மக்களால் தெரிவிக்கப்பட்ட விமர்சனங்களை அடுத்தே பெண் ஊழியர்களின் உடை விடயத்தில் யாழ்.அரச அதிபர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்பட்டது. (த)

# நெடுந்தீவு-குறிகாட்டுவான் பயணிகள் படகு தயார்

நெடுந்தீவு ஜன.23

நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவைக்கென புதிதாக அமைக்கப்பட்ட பயணிகள் படகு தனது கட்டுமாணப் பணிகளைப் பூர்த்தி செய்துள்ளதாகவும் பெரும்பாலும் இந்தப் படகு அடுத்த வாரம் கடலில் மிதக்க விடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு டொக்பாட் நிறுவனத்தில் அமைக்கப்பட்ட 'வடதாரகை II என்ற பயணிகள் படகு இந்தமாத இறுதிக்குள் சேவைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நான்கு அடி நீரில் மிதக்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள இந்தப்படகில் இரண்டு இயந்திரங்கள் உள்ளன நவீன வசதிகள் கொண்டதாகவும் இந்தப்படகு அமைக்கப்பட்டுள்ளதெனக் கூறப்படுகிறது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் 800 கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (த-111)

# காரைநகரில் கால்நடைகளால் நெற்பயிர்கள் சேதம்

காரைநகர், ஜன.23

காரைநகர் பிரதேசத்தில் முற்றி விளைந்த நெற்கதிர்களைக் கட்டாக்காலிக் கால்நடைகள் வந்து தொகை வகையின்றி அழித்து வருவதாக அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக விவசாயிகள் கூறுகையில்:

நெல் விளைந்த மகிழ்வில் தைப்பூசத் தினத்தன்று புதிர் எடுப்பதற்குச் சென்ற விவசாயிகள் பலர் வயல் நிலங்களில் நெற்கதிர்கள் இல்லாமை கண்டு திகைத்து நின்றனர்.

தமது வயல் நிலங்கள் நல்ல விளைச்சலைக் கண்டுள்ளதால் தைப்பூசத் தினத்தன்று புதிர் எடுத்து பொங்கல் செய்வதற்காகச்சென்ற விவசாயிகள் பலர் தமது வயல்களிலுள்ள நெற்கதிர்களைக் கட்டாக் காலிக் கால்நடைகள் சூறையாடி நெற்கதிர்களை அழித்தமையால் புதிர் எடுக்க முடியாமல் போய்விட்டதாகக் கவலை தெரிவித்தனர்.

பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் பல ஆயிரம் ரூபா செலவிலும் நெற்செய்கையை மேற்கொண்ட ஏழை விவசாயிகள் பெரியளவில் வாழ்வாதாரப் பிரச்சினையை இந்த வருடம் எதிர்நோக்க வேண்டியுள்ளனர்.

இதேவேளை ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது காரைநகர் வயல்களில் இந்தவருடம் அதிகநெல் விளைச்சல் ஏற்பட்டும் அதனை அறுவடை செய்துகொள்ள முடியாத நிலைமை உள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

காரைநகரில் கட்டாக்காலிக் கால்நடைகளின் தொல்லை காரணமாகப் பயிரிடப்படக் கூடிய சிறுதானியச் செய்கையை முற்றாகக் கைவிட்ட விவசாயிகள், அடுத்து வரும் காலங்களில் பெரும்போக நெற்செய்கையையும் கைவிடும் நிலை தோன்றி உள்ளது.

இதேவேளை காரைநகருக்குத் தனியான கமநல சேவைகள் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் கண்காணிப்பில் ஐந்து விவசாய சம்மேளனங்கள் காரைநகரில் உள்ளன.

இருந்தபோதும் அவை உரிய காலத்தில் விவசாயிகளுக்கான கூட்டங்களையோ அல்லது தமக்குரிய பணிகளையோ ஆற்றுவதில்லை எனவும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் பலமுறை கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் எந்தப் முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் அவர்கள் நம்பிக்கை இழந்துள்ள வர்களாகக் காணப்படுகின்றனர். எனவே இந்த விடயத் தைக் கவனத்தில் எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வருமாறு விவசாயிகள் எதிர்பார்த்திருக் கின்றனர். (201-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுங்கத் திணைக்களம் நேற்று பிரதம தபாலகத்தில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.23

சுங்கத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகம் நேற்று யாழ். பிரதம தபாலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

20 ஆண்டுகளின் பின் யாழ்ப்பாணத்தில் இந்த அலுவலகத்தை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுதர்ம கருணாரட்ண திறந்து வைத்தார்.

நேற்றுக்காலை 9 மணிக்கு வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் எஸ்.ரட்ணசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.பிரதம தபாலகக் கட்டடத்தில் இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் இந்த அலுவலகம் நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப் பட்டது.

பணிப்பாளர் நாயகம் கருணாரட்ண அலுவலகப் பெயர்ப் பலகையை முதலில் திரைநீக்கம் செய்து வைத்தார்.தொடர்ந்து பணிப்பாளர் நாயகமும் தபால் மா அதிபர் எம்.கே.திசநாயக்காவும் இணைந்து நாடாவை வெட்டி அலுவலகத்தைத் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பணிப்பாளர் நாயகம் கருணாரட்ண தெரிவித்தவை வருமாறு:

நீண்ட காலத்தின் பின்னர் யாழ்ப்பாத்தில் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த சுங்க அலுவலகத்தினால் இங்குள்ள மக்கள் பெரிதும் நன்மை அடைவார்கள். அவர்களுக்கான வெளிநாட்டுப் பொதிகள் விரைவாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இப்போது ஏற்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தின் பணிகள் உடனடியாகவே ஆரம்பித்து வைக்கப் படுகின்றன. வெளியூர்ப்பொதிகள் அலுவலர்களால் உடனுக்குடன் பரிசோதிக்கப்பட்டு அவற்றை உரியவர்களிடம் விரைவாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுங்கப் பகுதியினரின் இந்தச் செயற்பாடுகளுக்கு மக்கள் தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும். என்றார்.

**இருபது ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணத்தில் சுங்கத் திணைக்கள அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.**



கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டிருந்த ஒரு தொகுதி வெளியூர் பொதிகள் நேற்றைய தினம் முதல்முறையாக சுங்கப் பகுதியினரால் பரிசோதிக்கப் பட்ட பின்னர் உரியவர்களுக்கு உடன் அனுப்பி வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கொழும்பு மத்திய தபாலகத்தின் கட்டுப்பாட்டாளர் வி.குமரகுரு, மேலதிக சுங்கப் பணிப்பாளர் டபிள்யூ.ஏ.சந்திரதாசா, யாழ் பிரதி சுங்கப்பணிப்பாளர் ஏ.ரி.வளவகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படும் வெளியூர் தபால்பொதிகள் திருகோணமலை சுங்க அலுவலகத்தில் வைத்தே பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-26)

## கைதடி முதியோர் இல்லத்துக்கு எரிவாயு அடுப்பு

கைதடி, ஜன.23

கைதடி அரச முதியோர் இல்லத்தின் சமையல் பாவனைக்கு எரிவாயு அடுப்பு பயன்படுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்ததாக இல்ல அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் தெரிவித்தார்.

வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் எஸ்.சிவகரன் இந்த சமையல் எரிவாயு அடுப்பை ஆரம்பித்து வைத்தார்.

கடந்தகாலங்களில் சமையல் பாவனைக்கு விறகே பயன் படுத்தப்பட்டு வந்தது.

தற்போது வேலைச்சுமையைக் குறைப்பதன் முகமாகவே இந்த எரிவாயுச் சமையல் அடுப்புக்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக இல்ல அத்தியட் சகர் மேலும் தெரிவித்துள்ளார். (201-26)

## தரம் குறைந்த தேயிலை விற்பனைக்கு

கொடிகாமம்,ஜன.23

கொடிகாமம் பொதுச் சந்தையில் தரம் குறைந்த தேயிலைப் பைக்கற்றுகள் நடமாடும் தனியார் வியாபாரி ஒருவரால் சந்தை நாள்களில் விற்பனை செய்யப்படுவதாக அந்தப்பகுதி நுகர்வோரால் தெரிவிக்கப்படுகின்றது.

கவர்ச்சிகரமான முறையில் பொதி செய்யப்பட்ட இந்தத் தேயிலைப்பொதிகள் விற்பனைக்கு தயார் நிலையில் அடுக்கி வைக்கும் போது அதன் மேல் கம்பனிப் பெயர் பொறித்த சுட்டுத் துண்டுகளை குறிப்பிட்ட வியாபாரி ஒட்டுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது என மக்கள் கூறுகின்றனர்.

அதில் தேயிலை தயாரிக்கப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி போன்ற விவரங்கள் அச்சிடப்பட்டிருந்தாலும் திகதிகள் குறிப்பிடாமல் வெற்றிடமாக உள்ளது. இதன் மூலம் இவை தரம்குறைந்த தேயிலை என அனுமதிக்க முடிகிறது. இது போன்ற தேயிலைப் பொதிகள் சாவகச் சேரி பொதுச்சந்தையிலும் விற்கப் படுகின்றது. எனவே தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கள் இது விடயத்தில் கவன மெடுத்து நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (201-122)

# நீண்டகாலத்தின் பின் பௌர்ணமி தின நிகழ்வு

வலி. வடக்கு, ஜன.23

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நீண்ட கால இடைவெளியின் பின்னர் பௌர்ணமி தின நிகழ்வுகள் உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

அந்த வகையில் வட மாகாணத்தில் 12 கல்வி வலயங்களிலும் நீண்ட காலத்தின் பின்னர் பௌர்ணமி தின நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. அதனடிப்படையில் வலிகாமம் கல்வி வலயம் தெரிவு செய் யப்பட்டு மேற்படி கல்லூரியில் முதலாவது பௌர்ணமி தின நிகழ்வுகள் நடைபெற்றன.

அடுத்துவரும் பௌர்ணமி தின நிகழ்வுகள் வடமாகாணத்தில் உள்ள பன்னிரண்டு கல்வி வலயங்களிலும் நடைபெறவுள்ளன.

வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கௌரவ விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனும் கலந்து கொண்டனர்.



நீண்ட கால இடைவெளியின் பின்னர் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற பௌணமி தின நிகழ்வில் மாணவிகள் குழுப்பாடல் இசைக்கின்றனர்.

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி மாணவர்களின் தமிழ் மொழி வாழ்த்துப் பாடலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் தொடர்ந்து வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது.

வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜேந்திரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து வடமாகாண கல்வித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தலைமை உரையை நிகழ்த்தினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் குழுப்பாடலைத் தொடர்ந்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனம் இடம்பெற்றது.

இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்கும் மாற்று வலுவுள்ளோர்களின் நிகழ்ச்சியைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றினார்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களின் 'மீண்டும் மீண்டும்' என்னும் நாடகத்தைத் தொடர்ந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவிகளின் தில்லான நடனம் இடம்பெற்றது.

கௌரவ விருந்தினர் இ.இளங்கோவனின் சிறப்புரையைத் தொடர்ந்து வலிகாமம் கல்வி வலய ஆசிரியர்கள் இணைந்து வழங்கிய சத்தியவான் சாவித்திரி இசை நாடகம் இடம்பெற்றது.

நீண்ட காலத்தின் பின்னர் பௌர்ணமி நிகழ்வு நடைபெற்ற போதும் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் கலந்து கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.(ம-86)

# பிரதம தபாலகத்துக்கு வாகனம்

யாழ்ப்பாணம், ஜன.23

வட மாகாணத்தின் தபால் சேவைக்கென இரண்டு தபால் வாகனங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என தபால்மா அதிபர் எம்.கே திசாநாயக்கா தெரிவித்தார்.

யாழ். பிரதம தபாலகத்தில் சுங்க திணைக்களத்தின் அலுவலகத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தபால் வாகனங்கள் மூலம் வெளிமாவட்டங்களுக்கான தபால் சேவையை விரைவாகவும், சீராகவும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

தபால் சேவையை இந்த ஆண்டில் மேலும் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையின் [illegible] பகுதி[illegible]ாக தபால் சேவை [illegible] னங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது- என்றார்.

முன்னர் வழங்கப்பட்ட இரு வாகனங்கள் மீளப் பெறப் பட்டமையால் தபாலகத்தில் தற்போது இரண்டு தபால் வாகனங்களே குடாநாட்டிலும் குடாநாட்டுக்கு வெளியிலும் பெரும் சிரமப்பட்டு சேவை [illegible] கள் கூறினர். (த-26)

## சரஸ்வதி ம.வி.யில் உயர்தரம்

வலி.வடக்கு, ஜன.23

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் முதல் தடவையாக ஜி.சீ.ஈ உயர்தர கலைப் பிரிவுக்கான வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

பாடசாலை ஆரம்பிக்கப் பட்டு 99 வருடங்களின் பின்னர் உயர்தரக் கலைப்பிரிவு வகுப்புக்கள் ஆரம்பிக்கப் படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

பாடசாலை அதிபர் மா.சோமசேகரம் தலைமையில் நாளை முற் பகல் 11 மணிக்கு வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் இ.இராஜேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக அகில இலங்கை இந்து மாமன்றத் தலை வரும் சரஸ்வதி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவருமான இ.கைலாசபிள்ளையும் திருமதி அ.கைலாச பிள்ளையும் கலந்து கொள்வர். (201-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் - முல்லை வீதியின் அவலம் பயணிகள் இக்கட்டான நிலை

முள்ளியவளை, ஜன.23

முல்லைத்தீவு - யாழ்ப்பாணம் வீதியில் ஒட்டுசுட்டானில் கனரக வாகனமொன்று சேற்றில் புதைந்ததால் பயணிகள் பேருந்து செல்வதில் மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு - யாழ்ப்பாணம் வீதி ஏற்கனவே மோசமான நிலையில் இருந்தது. தற்போது பெய்த பெருமழை காரணமாக இந்த வீதி மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனால் இதில் பயணிக்கும் வாகனங்கள் மிகுந்த சிரமங்களுக்கு முகம் கொடுத்து வந்தன.

இந்தநிலையில் கனரக வாகனமொன்று இந்த வீதியால் பயணித்துக் கொண்டிருந்த போது சேற்றில் புதைந்து விட்டது.

இதனால் வீதியூடான போக்குவரத்துக்களில் தடையேற்பட்டது. அவ்வேளையில் முல்லைத்தீவிலிருந்து பயணிகள் தனியார்பேருந்தொன்று அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தது. ஆனால் கனரக வாகனம் புதைந்திருந்த இடத்திற்கு அப்பால் செல்ல முடியவில்லை. பயணிகள் செய்வதறியாது திகைத்து நின்றனர். சில நிமிடங்கள் கழித்து பிரயாணிகள் அனைவரும் இறக்கி விடப்பட்டனர். வெறும் பேருந்து மட்டும் வீதிக்கு அருகிலுள்ள சேற்றினூடாகக் கொண்டு செல்லப்பட்டது. பிரயாணிகள் ஆசனத்தில் இடம் பிடிப்பதற்காகத் தமது பிரயாணப் பொதிகளுடன் சேற்றையும் லட்சியம் செய்யாது பேருந்தின் பின்னால் ஓடிச் சென்றனர். ஒருவாறு பேருந்து சுற்றி வளைத்துப் பிரதான வீதிக்கு வந்ததும் பிரயாணம் தொடர்ந்தது. இதனால் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய பிரயாணிகள் மிகுந்த தாமதத்தின் பின்னரே தமது வீடுகளுக்குச் செல்ல முடிந்தது.

மேற்படி சம்பவம் ஓர் உதாரணம் மட்டுமே. தினமும் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதால் தாம் பெருஞ் சிரமங்களைச் சந்திப்பதாக முல்லைத்தீவில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

(க)

**பயணம் தொடருமா?...**



சேற்றில் பயணம்: முல்லைத்தீவு - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ஒட்டுசுட்டானில் கனரகவாகனமொன்று புதைந்ததால் பயணிகள் பேருந்து சேறும் சகதியுமான பாதையில் பயணிக்கின்றது. (555)

# வேரவில் இந்து மாணவரின் சாதனை

பூநகரி, ஜன.23

போதிய ஆசிரிய வளப்பற்றாக்குறை நிலவிய போதிலும் கிளிநொச்சி மாவட்டம் வேரவில் இந்து மகாவித்தியாலய மாணவர்கள் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சாதனை புரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாடசாலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. ஆசிரிய வளப்பற்றாக்குறையுடன் பௌதீக வளங்கள் இல்லாத நிலையில் மிகுந்த சிரமத்துடன் இயங்கிவருகின்றது.

க.பொ.த உயர்தர வகுப்பில் இந்தப் பாடசாலையில் தமிழ், புவியியல், வரலாறு, இந்து நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களே போதிக்கப்படுகின்றன. ஆனால் இவற்றைப் போதிப்பதற்கு ஏற்ற ஆசிரியர்கள் இல்லாததால் ஆசிரியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தப் பாடங்களைப் போதித்துள்ளனர். மாணவர்களும் ஆர்வத்துடன் கற்று வந்தனர்.

இந்தநிலையில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரும் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்து சாதனை புரிந்துள்ளனர்.

இதற்காக இந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பாராட்டுவதாகக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

(க-496)

# பூநகரி - சங்குப்பிட்டி ஊடாக அதிகரித்த பஸ் கட்டணங்கள்

பூநகரி, ஜன.23

பூநகரியில் இருந்து சங்குப்பிட்டிப் பாலம் ஊடாகச் செல்லும் தனியார் பேருந்துகள் அதிக கட்டணத்தை அறவிடுவதாகப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தத் தனியார் பேருந்துகளில் யாழ்ப்பாணத்துக்கு 80 ரூபாவும் சாவகச்சேரிக்கு 50 ரூபாவும் அறவிடுகின்றனர். இவை மிகவும் அதிகரித்த கட்டணங்களாக இருப்பதனால் பிரயாணிகள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதுபற்றிப் பேருந்து நடத்துநரிடம் கேட்டால் சரியான பதிலும் கிடைப்பதில்லை என பயணிகள் வருத்தம் தெரிவிக்கின்றனர். எனவே பயணிகளின் நன்மை கருதிச் சீரான கட்டணங்களை அறவிடுவதற்கு அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட பயணிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (க-406)


## அலுவலகம் வாடகைக்கு

யாழ். நகரப்பகுதிக்கு மிக அண்மையில், கண்டி வீதியில் (ஏ-9), தற்போது அலுவலகமாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒருமாடிக் கட்டடம் ஒன்று ஒப்பந்த அடிப்படையில் அல்லது வாடகைக்கு விடப்படும். சுமார் 5000 சதுர அடிகளைக் கொண்ட 4 பரப்புக் காணியில் நல்ல நிலையில் உள்ள இந்தக் கட்டடத்துக்கு 10 இற்கும் மேற்பட்ட வாகனங்களை நிறுத்தும் வசதியும் உண்டு. பெறவிரும்புவோர் நேரடியாகவே தொடர்புகொள்ளவும்.

தொ.பேசி இலக்கங்கள் - 0773979388, 0776428502.

(சி/575056)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 30 வயதுக்கு மேற்பட்ட பணிப் பெண் உடன் தேவை.

சம்பளம் ரூபா 10,000/=

தொடர்பு:- 0771965666

## ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

நரமான தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட ஊர்க்குஞ்சுகள் (ஒரு நாள்/ ஒரு மாதம்) மொத்தமாகவும் சிறிய அளவுகளாகவும் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. மொத்தக் கொள்வனவுக்கு விநியோகம் இலவசம். (முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் விநியோகிக்கப்படும்)

தொடர்பு: 0217200716, 0771341795

## வீடு விற்பனைக்கு

கண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: எஸ்.எஸ். நாதன்,
16/3, விதானையார் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776146434

## காணி வீடு விற்பனைக்கு

அம்பலவாணர் வீதி, கற்பக்குணை, உடுவில், சுன்னாகம் என்ற விலாசத்தில் அமைந்துள்ள ஒன்பது பரப்புக்காணியுடன் அமைந்த வீடு, கிணற்றுடன் கூடியது விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு: 0776959285
0776913464

## விற்பனைப் பிரதிநிதி தேவை (Sales Reps)

குடாநாட்டில் எமது பொருள்களை விநியோகிக்க விற்பனைப் பிரதிநிதி தேவை.

விற்பனை அனுபவத்துடன் மோட்டார் சைக்கிள் உள்ளவர் மட்டும் விண்ணப்பிக்கவும்.

சிறந்த சம்பளத்துடன் விற்பனைக் கமிஷனும் வழங்கப்படும்.

New Keen Marketing உப்புமடம் சந்தி, கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு.

தொ.பே:- 0774710002

## மதுபானசாலைக்கு வேலை ஆள்கள் தேவை

"தர்சனா வைன் ஸ்ரோர்"

இல.54, பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள மதுபானசாலைக்கு வேலை ஆள்கள் தேவை. உடன் நேரில் வரவும்.

## விற்பனைக்கு

HSPDA DONGLE (Multi Sim FUNCTION) 4750/= with 2 GB Memory CARD 5210/=

தொடர்பு: 0758935453

## எவரெஸ்ட் தாளங்காய்த் தைலம்


- வாதம், மூட்டுவீக்கம், மூட்டு வேதனை என்பவற்றுக்கு சிறந்த நிவாரணி
- யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய சித்தமருத்துவர்களின் கையாட்சி முறைப்படி தயாரிக்கப்பட்டது.
- யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

எவரெஸ்ட் மருந்தகம்
(பதிவு Ay/MF/JA/295)
உசன், மிருசுவில்.

(109684)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தில்லைநாதர்



பூநகரி, பாலாவியைப் பிறப்பிடமாகவும், மாசிவன், நீர்வேலி மேற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தில்லைநாதர் (20.01.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் புனிதமலரின் அன்புக் கணவரும் தேவராஜா (கனடா), சண்முகராஜா (லண்டன்), புஸ்பா, ரவிந்திரராஜா (கனடா), காலஞ்சென்றவர்களான கஜேந்திரராஜா, ஜெயந்தினி மற்றும் விஜி, பத்மராஜா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்செழு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசிவன், நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்

(109688)

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவலைகள்



### இராசையா (மாஸ்ரர்) சுதாகரன்

சீவனாய் 23.06.1980

சிவமாய் 23.01.2010

பாசம் பொழியும் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று போனாலும்
உன் நினைவு எங்கள் மனதைவிட்டு அகலாது
ஓராண்டென்ன இருபதாண்டு தான்
சென்றாலும் எம் உயிருள்ளவரை
மறக்க முடியாதேடா
எம் கடைக்குட்டிச் செல்வமே!
எம்மை விட்டுப் போக மனம் வந்ததாடா?
இல்லவே இல்லை பறித்து விட்டானே அந்த கடவுளே!

151. Glebe Court,
Mitcham London Rd,
Cr- 43 nusurrey
T.P.No.0031659092846

உன் பிரிவுத் துயரில் வாடும்
அம்மா - ராதாம்பிகை
அக்கா - சித்திரா.

(109698)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகப்பேற்று நிபுணரை நியமிக்குக

வவுனியா,ஜன.23

வவுனியா பொது வைத்தியசாலையில் மேலதிகமாக ஒரு மகப்பேற்று வைத்திய நிபுணரை நியமிக்க வேண்டுமென வைத்தியசாலையின் அத்தியட்சகர் டாக்டர் எஸ். சத்தியமூர்த்தி கேட்டுள்ளார்.

கடந்தமாதம் வவுனியாவில் நடைபெற்ற தாய்சேய் நல வைத்தியசாலைகளின் பொறுப்பு அத்தியட்சகர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் ஒன்றில் அவர் இவ்வாறு கேட்டுள்ளார்.

முல்லைத்தீவு, நெடுங்கேணி, செட்டிகுளம், மன்னார், மதவாச்சி, கிளிநொச்சி வைத்தியசாலைகளில் மகப்பேற்று வைத்திய நிபுணர் இல்லாத காரணத்தால் மேலதிக சிகிச்சைக்காக அல்லது பிரசவத் தில் சிக்கல் ஏற்படுகின்றபோது வவுனியா பொது வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கர்ப்பிணிகள் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

**செட்டிகுளம்**
**வைத்தியசாலையில் மகப்**
**பேற்றுச் சிகிச்சைக்காக**
**மகப்பேற்று வைத்திய**
**நிபுணர்**
**நியமிக்கப்படவுள்ளார்.**

எனவே உரிய சிகிச்சையை வழங்குவதற்கு மேலதிக மகப்பேற்று வைத்திய நிபுணரின் சேவை அத்தியாவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை செட்டிகுளம் தள வைத்தியசாலையிலும் பலர் மகப்பேற்றுச் சிகிச்சைக்காக வந்து கொண்டிருப்பதால் அங்கேயும் மகப்பேற்று வைத்திய நிபுணரின் சேவை அவசியமாகவுள்ளது.

தற்போது அவசர மற்றும் திடீர் பிரசவங்களுக்கு மேலதிக சிகிச்சை தேவைப்படும் போது வவுனியா பொது வைத்தியசாலைக்குத்தான் இவர்களை அனுப்பவேண்டிய நிலை உள்ளது. இதில் பல அசௌகரியங்கள் ஏற்படுவது தொடர்பாகவும் செட்டிகுளம் வைத்தியசாலை அத்தியட்சகர் இக்கலந்துரையாடலில் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மத்திய சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியக உயர் வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்டதால் இவை தொடர்பாக விரைவில் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (க-501)

# அடிப்படை வசதி எதுவுமின்றி இயங்கி வரும் முன்பள்ளிகள்

முல்லைத்தீவு, ஜன.23

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முன்பள்ளிகள் தற்பொழுது எதுவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்துக்கு முன்னர் முன்பள்ளிகள் இயங்கி வந்த கட்டடங்கள் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. யுத்தம் முடிவடைந்து சில மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இவை இன்னமும் புனரமைப்புச் செய்யப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

இதனால் கட்டடங்களின்றியே முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதனால் சின்னஞ்சிறார்கள் பல்வேறு சிரமங்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

அத்துடன் இவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒழுங்கான வேதனம் கூடக் கிடைக்காமல் அவதியுடன் கற்பித்து வருகின்றனர்.

தற்போது பெய்த பெருமழையின்போது முன்பள்ளிகள் சீராக இயங்க முடியாத நிலையே நிலவியது. இதனால் சிறார்களின் கல்வியிலும் பாதிப்புகள் ஏற்பட்டன.

எனவே இந்த முன்பள்ளிகளுக்கான கட்டடங்களைச் சீர் செய்யும் வரை பொதுநோக்கு மண்டபங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அல்லது மாதர்சங்கக் கட்டடங்களையாவது புனரமைத்து முன்பள்ளிகளைத் தடையின்றி இயங்க வைக்க வேண்டுமென்பதே பெற்றோர்களின் விருப்பமாக உள்ளது. உரியவர்கள் இதில் கூடிய கவனமெடுத்துச் செயல்பட வேண்டுமெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

# கட்டடமில்லாத கமநல சேவை நிலையம்

பூநகரி, ஜன.23

பூநகரி கமநல சேவை நிலையம் நிரந்தரக் கட்டடமின்றி வசதிக் குறைவுடன் இயங்குவதால் தமது தேவைகளுக்கு அதை நாடிச்செல்வோர் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.


தற்போது இந்த நிலையம் பூநகரி ஆலங்கேணிக் கிராமத்தில் தனியார் வீடொன்றில் வசதிக்குறைவுகளுடன் இயங்கி வருகின்றது. ஆனால் இந்தக் கட்டடம் கமநல சேவை நிலையத்தின் செயற்பாடுகளுக்கு ஏற்றதாக இல்லாது இருப்பதனால் இதனை நாடி வருவோர் சிரமங்களுக்காளாகின்றனர்.

குறிப்பாக விவசாயம் சார்ந்த கலந்துரையாடல்களை நடத்துவதற்குப் போதிய இடவசதி காணப்படவில்லை. இதனால் கலந்துரையாடலில் கலந்து கொள்ள வருவோர் சிரமங்களுக்காளாகின்றனர்.

அத்துடன் விவசாயிகளுக்குத் தேவையான விவசாய உள்ளீடுகளை உரிய முறையில் சேமித்து வைக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது. இதனால் இவற்றைப் பெறுவதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் இவர்களின் விவசாய நடவடிக்கைகளிலும் பாதிப்பு ஏற்படுகின்றது.

ஆகவே பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து மீள்குடியமர்ந்துள்ள இந்தப் பிரதேச மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாகப் பூநகரி கமநல சேவை நிலையத்துக்கு நிரந்தரமாகக் கட்டடமொன்று அமைக்கப்பட வேண்டுமெனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-406)

## தேடுதலின் பயன்....



மீட்பு: வவுனியா, புளியங்குளம் பிரதேசத்தில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட ஆயுதங்கள்.

# வன்னியில் நோய்த் தொற்று

முல்லைத்தீவு, ஜன.23

அண்மையில் பெய்த மழை ஓய்ந்துள்ள போதிலும் ஆங்காங்கே வெள்ளம் தேங்கி நிற்பதால் தொற்றுநோய்கள் பரவக் கூடுமென வன்னி மக்கள் அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்து பெய்த பெருமழை காரணமாக வன்னிப் பகுதியிலுள்ள குளங்கள் யாவும் நிரம்பியுள்ளதுடன் ஆங்காங்கு வெள்ளநீரும் நிறைந்து காணப்படுகிறது. குறிப்பாக மக்களின் வாழ்விடங்களைச் சூழ வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

மீள்குடியமர்ந்த வன்னி மக்கள் தற்போதும் பாதுகாப்பற்ற தற்காலிகக் குடிசைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் குளிரிலும் நுளம்புகளுக்கு மத்தியிலும் தமது வாழ்க்கையைத் தொடருகின்றனர்.

மேலும் வெள்ள நீர் காரணமாக நுளம்புகள் அதிகளவில் பெருகும் அபாயமும் தோன்றியுள்ளது. இவற்றால் பல்வேறு நோய்த் தொற்றுக்கள் பரவக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. இதைவிடக் குடிதண்ணீரும் மாசுற்றதால் நீரினால் பரவக்கூடிய நோய்த் தொற்றுக்களும் ஏற்பட வாய்ப்புண்டு.

தற்போது காய்ச்சல், சளி போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் தொற்று நோய்கள் பரவித் தம்மைப் பாதிக்குமோ வென இந்த மக்கள் அஞ்சுகின்றனர். (க-500)

# சீரில்லாத பஸ் சேவை; கிராம மக்கள் அவதியில்

பூநகரி, ஜன.23

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, மண்ணித்தலைக் கிராமத்துக்கு சீரான பஸ்சேவை இல்லாததால் கிராம மக்கள் போக்குவரத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இதனால் பரமன்கிராய், ஞானிமுனை, விநாசியோடை, மண்ணித்தலை போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது நாளாந்தக் கடமைகளை ஆற்றுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இங்கு பஸ் பயணிப்பதற்கெனக் குறிப்பிட்ட நேரம் எதுவும் வரையறுக்கப்படவில்லை. இதனால் பயணிகள் நீண்டநேரம் காத்திருந்தே பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

அத்தோடு விநாசியோடை அ.த.க.பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்கள் முற்பகல் 11 மணிக்கே பாடசாலை வரும் நிலையும் காணப்படுகின்றது. அதேவேளை சில சமயங்களில் ஆசிரியர்கள் பாடசாலை வர முடியாத நிலையும் காணப்படுகின்றது.

இதனால் இப்பாடசாலையின் மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலையில் பாடவேளைகள் பல வீண்பொழுதாகக் கழிவதாகப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே உரியதரப்பினர் இவ்விடயத்தில் அக்கறை கொண்டு சீரான பஸ் சேவைக்கு ஆவன செய்யுமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-406)

# 10 பேருக்கு சைக்கிள்கள்

கிளிநொச்சி, ஜன.23

மாற்றுத் திறனாளிகள் 10 பேருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் துவிச்சக்கர வண்டிகளை வழங்கினார்.

கனடாவிலுள்ள 'வாழவைப்போம்' என்ற அமைப்பின் அனுசரணையுடன் இவை வழங்கப்பட்டன. இந்த நிகழ்வுக்கு கரோல் பிட்டன வனத்தைச் சேர்ந்த திருமதி ம.விஜயலட்சுமி தலைமை வகித்தார். இதில் கிளிநொச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் பலர் கலந்து கொண்டனர். (க-319)

# வழங்கப்பட்ட உழவு இயந்திரம் உதவாத நிலையில்

முல்லைத்தீவு, ஜன.23

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள தென்னியங்குள விவசாயிகளின் விவசாயத் தேவைக்கென வழங்கப்பட்ட இருசக்கர உழவு இயந்திரங்களைக் கமக்கார அமைப்பினரே தமது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

துணுக்காய் தென்னியங்குளம் கிராமத்தில் சுமார் 107 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான தென்னியன் குளத்தின் கீழுள்ள 600 ஏக்கர் விவசாய நிலத்தில் 397 ஏக்கரில் தற்போது நெற்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதைவிட 35 வரையான விவசாயிகள் சிறுதானியச் செய்கை மற்றும் தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில் இவர்களின் விவசாய நிலங்களைப் பண்படுத்துவதற்கும் விவசாயத் தேவைகளுக்குமென கமநல சேவை நிலையத்தால் ஒரு இருசக்கர உழவு இயந்திரம் வழங்கப்பட்டது. மேலும் இந்தக் கிராமத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் ஒரு இருசக்கர உழவு இயந்திரம் வழங்கப்பட்டது.

ஆனால் இந்த இரு உழவு இயந்திரங்களையும் கிராமத்தின் கமக்கார அமைப்பினைச் சேர்ந்தவர்கள் தமது தேவைகளுக்கே பயன்படுத்தி வருகின்றனர். இதைவிட மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களின் செய்கை நிலங்களைப் பண்படுத்திக் கொடுக்க வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் இதை உதாசீனம் செய்து அவ்வாறு இவர்களின் நிலங்கள் பண்படுத்திக் கொடுக்கப்படவில்லையெனவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இவ்வாண்டு கால போக நெற்செய்கை நிலங்களைப் பண்படுத்துவதற்கு குடும்பமொன்றுக்குத் தலா இரண்டு ஏக்கர் வீதம் 8 ஆயிரம் ரூபா வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரை இந்தப் பணம் வழங்கப்படவில்லையெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கமநல சேவை நிலையத்தினர் இந்த விடயங்களில் தலையிட்டுத் தமக்கு உதவ வேண்டுமென்பதே பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளாகும். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் விழிகளுடன் 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னப்பிள்ளை கணேசரத்தினம்

தோற்றம்: 14.11.1933
மறைவு: 15.01.2009
திதி: தைமாத அபரபக்க சதுர்த்தி (23.01.2011)

ஆண்டுகள் இரண்டு
ஓடிக் கடந்தாலும் - எம்
உள்ளங்களில் உங்கள் உருவம்
நிழலாடுதப்பா!
பெருமை மிகு நின்குணத்தை
நெஞ்சமதில் சுமந்து நிற்கும்.

279, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(109214)

## மரண அறிவித்தல்கள்

### கணேசன் இராசாத்தி



சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசன் இராசாத்தி (21.01.2011) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் இணுவிலைச் சேர்ந்த சின்னப்பு- கணேசனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இணுவிலூர் சின்னப்பு- மாணிக்கம் தம்பதியரின் மருமகளும் செல்லத்துரை (ஓய்வுபெற்ற நடத்துனர்- இ.போ.ச.), இராஜதுரை (மேற்பார்வை பொதுசுகாதாரப் பரிசோதகர், முல்லைத்தீவு) ஆகியோரின் சகோதரியும் தர்மரூபி (யாழ். போதனா வைத்தியசாலை), தர்மசுதன் (இ.போ.ச.காரை நகர் சாலை), உஷானந்த் (சுவிஸ்), சுஜந்தன் (தயா- சிறைச்சாலைகள் பாதுகாவலர், யாழ்ப்பாணம்), திலகராஜ், யுவிந்திரா, கிருஷ்ணவேணி (நலன்புரிசங்க லிகிதர்- யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் வாசன் (யா.மா.ச.சுகாதாரப் பாதுகாவலர்), சுபாஷினி, லோஜிதா (சுவிஸ்), யாளினி ஆகியோரின் அன்பு மாமியும் அபிஷாளினி, கோபிஷாளினி, சிந்துஷன், திவ்யன், மயூரதன், அபிஷேக் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2011) ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (109213)

தகவல்:
குடும்பத்தினர்.

### இராசரத்தினம் தயானந்தம் (தவம்)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் தயானந்தம் (21.01.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் சறோஜினி (கிளி), இராசேஸ்வரி (தேவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் கண்மணி தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரியின் (பெரியபிள்ளை) அன்புக் கணவரும் தயாகரன், வாசுகி, காலஞ்சென்ற வாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணகுமார், லோஜினி, ரூபன் ஆகியோரின் மாமனும் செல்வகுலேந்திரன், செல்வரட்ணம், இளங்கோ, பாஸ்கரன் ஆகியோரின் சகலனும் விஜயராசா (விஜயன்), தையல்நாயகி, நகுலேஸ்வரி காலஞ்சென்ற ஸ்ரீ முருகராசா மற்றும் இராசேஸ்வரி (ராசி), கௌரி ஆகியோரின் மைத்துனரும் விஷால், கிஷா, கிஷாந், வகீன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.07, புது வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
தொ.பே.: 0771723842

தகவல்:
குடும்பத்தினர்.
(109212)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1982 ரேவதி நட்சத்திரம், கிரகபாவம் 49, செவ்வாய்க் குற்றமற்ற AUSTRALIA - ENGINEER PhD, PR உள்ள மணமகனுக்கு அழகிய பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: 0774584657

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதி அருகாமையில் சகல வசதியுடனும் கூடிய 3½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
077 6032446, 077 7652012.

## ஜேர்மன், சுவிஸ்

ஜேர்மன், சுவிஸ் மொழிகள் சாவகச்சேரியில் ஜேர்மன் மொழி நன்கு கற்ற ஆசிரியர் திரு.இ. மயூரதன் பரீட்சைக்கு ஏற்றவகையில் கற்பித்துக் கொடுக்கிறார்.

மேலதிக தொடர்புகளுக்கு:
0774706386

பேரம்பலம் வீதி, பெரியமாவடி,
சாவகச்சேரி.

## காணிவிற்பனைக்கு

தென்மராட்சி, சாவகச்சேரி, பருத்தித்துறை வீதியில் கெருடாவிலுக்கும் பெருங்குளம் சந்திக்கு மிடையில் 9 பரப்பும் 8 பரப்பும் கொண்ட இரண்டு காணிகள் விற்பனைக்குண்டு.
சி.நடேசமூர்த்தி: 0785609521, 0112943860
அ.செல்வராசா: 0776658786.

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 26. 01. 2011 விநியோகிக்கப்படும்.
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

T.P.NO:
021 222 2867, 077 6090926

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 3000 சதுரஅடி வீட்டின் கட்டடப் பொருள்கள் கழற்றி அகற்றல், ஓடு, பனைமரம், தீராந்தி, நிலை கதவு, கிறில்களுடனான ஜன்னல்கள், கொங்கிறீற் கற்கள், முழுக் கட்டடத்தின் பொருள்களும் யாழ். நகரில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777302343

## ஆட்டோ வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஆட்டோ வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
V.கிருஸ்ணபிள்ளை, 'கலைவாசகம்'
மீசாலை கிழக்கு, மீசாலை.
T.P. 0776399058

## G.C.E (A/L) BACK -UP CLASSEA

CHEMISTRY, BIOLOGY EXAM VIEW வகுப்புகள் (தமிழ்/ ஆங்கிலம்) வீடுவந்து தனி/குழுவாகக் கற்பித்தல்.
மணித்தியாலயத்துக்கு ரூபா 500/=
அழையுங்கள் வித்யா, சுழற்றுங்கள்.
0777730838/ 021226 4814.

## தேவை

சிறிய அளவிலான அலுவலகம் ஒன்றுக்கு பெண் எழுது வினைஞர் தேவை. யாழ்ப்பாணம், நல்லூர்ப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் மட்டும் சனி, ஞாயிறு பி.ப.4.30 மணிக்கு நேரில் வரவும்.
517, வைமன் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம். (சி/575043)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பொஸ்கோ பாடசாலை முன்பாக அமைந்த ஒன்றரைப்பரப்புக் காணி, வீட்டுடன் விற்பனைக்குண்டு.
அறைகள் (4), குளியலறை, குசினி, வாகன வசதி உண்டு.
தொடர்பு: 077 2923772 (109696)

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது (1Kg 450/-), கல்பேட் சுத்தம் செய்து காலை 6.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.: 021 222 6944 (109274)

## என்றும் எங்கும் இல்லாத மிகப் பிரம்மாண்டமான விசேட தள்ளுபடி



மருத்துவ நூல்களுக்கு 10% முதல் 30% வரையான விலைக்கழிவு

அகராதிகள் 10% முதல் 20%வரையான விசேட தள்ளுபடி

காமிக்ஸ் வெளியீடுகள் 20% விலைக்கழிப்வு

பாடசாலைமாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்திற்கேற்ற புதிய பயிற்சி நூல்கள் விசேட கழிவுவிலையில்

உயர் கல்வி மாணவர்களுக்கான அனைத்து வகை நூல்களும் விசேட விலைக்கழிவுடன்

ஆங்கில நாவல்கள் ஆங்கில இலக்கிய நூல்கள், ஆங்கில இலக்கண நூல்கள் சலுகைவிலையில்

மற்றும் ஏனைய ஸ்ரேசனரிப் பொருள்கள், பாடசாலை தர உள்ளீட்டுப் பொருள்கள், வைற்போட், கிறீன்போட், Over head projector O.H.P Screen உட்பட்ட அனைத்து வகையான கல்வி சார் உபகரணங்களையும் ஒரே கூரையின்கீழ் உங்கள் விருப்புக்கேற்ப நீங்களேதெரிவு செய்து பெற்றிட இன்றே நாடவேண்டிய ஒரே இடம்...

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 2225542

## - தபால் மூலம் - ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month
JAN 2011 TO JUN 2011
தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் டி.மா. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை டி.மா. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2011


## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், இ.போ.சபை, பருத்தித்துறைச் சாலை)



மாசார், பளையைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாள் தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது கரந்தாய், பளையில் வசித்துவருமான சோமசுந்தரம் திருநாவுக்கரசு அவர்கள் (19.01.2011) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (சிவக்கொழுந்து விதானையார்) மற்றும் இலட்சுமி அவர்களின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புத் துணைவரும் திலகேசன் (பிரான்ஸ்), மகேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவேஸ்வரி (கனடா), தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்ற பாலசுந்தரம் ஆகியோரின் சகோதரனும் ஷர்மிலாவின் பாசமிகு மாமனும் திலக்ஷியின் அன்புப் பேரனும் இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற விக்னேஸ்வரன், வேணீஸ்வரன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி (ஆசிரியை), பவானி (ஆசிரியை), பாஸ்கரன் (பொறியியலாளர்- அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கனகரத்தினம்- இந்திரேஸ்வரி தம்பதியரின் சம்மந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் முகாவில், இயக்கச்சி கணுக்கேணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தாய்,
பளை. (109216)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க சர்வதேசத்தின் உதவிகள் தேவை

கொழும்பு, ஜன. 23

வெள்ள அனர்த்தத்தால் 31 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன. அவற்றைப் புனரமைப்பதற்கு சர்வதேச நிறுவனங்கள் உதவவேண்டும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில்கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வெள்ளத்தால் 43 பேர் மரணமடைந்துள்ளனர்; 52 பேர் காயமடைந்துள்ளனர்; 4 பேர் காணாமல் போயுள்ளனர். 6,400 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. மொத்தமாக 31,000 வீடுகள் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசும், உலக உணவுத் திட்டமும் இணைந்து நிவாரணங்களை வழங்கி வருகின்றன. அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்குகின்ற நிவாரணங்களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளும் உதவிகளைச் செய்துள்ளன.பலத்த மழைபெய்யக் கூடும் என்று வானிலை அவதான நிலையம் எமக்குக் கூறியிருந்தது. அதற்கமைய அனர்த்தம் ஏற்பட்டால் முகம் கொடுப்பதற்கு நாம் தயாராகவே இருந்தோம். அனர்த்தம் ஏற்பட்டதும் விரைந்து செயற்பட்டோம். இந்த அனர்த்தத்தால் சேதமடைந்த 31 ஆயிரம் வீடுகளையும் புனரமைக்க சர்வதேச நிறுவனங்கள் உதவ வேண்டும் என்று நான் அந்த நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்-இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார். (சி)

# கொழும்பில் கப்பக் கும்பல்களை பிடிக்க விசேட நடவடிக்கை

கொழும்பு, ஜன.23

கொழும்பு, புறக்கோட்டையில் கடைகள் மற்றும் பஸ்களில் திட்டமிட்ட வகையில் கப்பம் பெற்றுவரும் கும்பல்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக பொலிஸ் கண்காணிப்புக் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய ஆகியோரின் அறிவுறுத்தலுக்களுக்கு அமைய இந்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு மிரட்டிக் கப்பம் பெற்று வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.


இவ்வாறு மிரட்டி கப்பம் பெறும் குழுக்களை எதிர்வரும் நாள்களில் முற்று முழுதாக ஒழிக்க நடவடிக்கை எடுப்பதற்காகவே இந்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

## அலுவலகங்களை மின் விளக்குகளால் அலங்கரிக்க முடிவு

எதிர்வரும் 63 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பெப்ரவரி 3 ஆம், 4 ஆம் திகதிகளில் சகல அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடியை ஏற்றி, அக்கட்டடங்களை மின்விளக்குகளால் அலங்கரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நான்காம் திகதி கொண்டாடப்படவுள்ள இலங்கையின் 63 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சகல அரச மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கும் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளது. இந்தச் சுற்றுநிருபம் சகல அரச நிறுவனங்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கூட்டுத்தாபன மற்றும் அரச பிரிவுகளின் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.பி. அபேகோன் தெரிவித்துள்ளார். (சி)

## புதியதலைமை....



நல்வாழ்த்து: விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ரொஷான் குணதிலக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திஸாநாயகவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கின்றார்.

## பொலிஸார் மோதல் ஒருவர் விளக்கமறியலில்

கொழும்பு, ஜன. 23

பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக ஒருவர் கடும் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றையவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கண்டி மற்றும் குண்டசாலை பொலிஸ் நிலையங்களில் சேவை புரியும் குறித்த இரு பொலிஸ் அதிகாரிகளும், பஸ் ஒன்றில் சென்றுகொண்டிருந்த போது இருவருக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பின்னர் மோதலில் முடிவடைந்துள்ளது.

இதனையடுத்து காயத்திற்குள்ளான பொலிஸ் அதிகாரி ஒருவர் கண்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும், மற்றைய பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (சி)

# வவுனியா பாடசாலையில் முன்னாள் போராளிகள்

## வேறிடத்துக்கு மாற்றக் கோரிக்கை

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக தங்கவைக்கப்பட்டிருக்கும் முன்னாள் போராளிகளை வேறு இடத்திற்கு மாற்றி ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வர வேண்டும் - என வவுனியா நகரசபையின் உப தலைவர் எம்.எம்.ரதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நகரசபையின் உபதலைவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது இனத்தைப் பொறுத்த வரைக்கும் கல்வியே அழியாத சொத்தாக இருக்கிறது. எல்லாவற்றையும் நாம் இழந்தாலும் கல்வி என்ற சொத்தை எமது இனம் இழக்கவில்லை. இந்தப் பாடசாலையில் முன்னாள் போராளிகள் தங்க வைக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்குப் பல வகுப்பறைக் கட்டடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

முன்னாள் போராளிகளை வேறிடம் மாற்றி கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனப் பல தரப்பாலும் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவில்லை. இனியாவது உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும்.

இப்பாடசாலையில் கட்டாக்காலி நாய்கள் மற்றும் மாடுகளின் தொல்லைகள் காணப்படுகின்றன. இதனை ஒழிக்க நகரசபை நடவடிக்கை மேற் கொண்டுள்ளது. இவ்வாறு வவுனியா நகரசபை உப தலைவர் ரதன் தெரிவித்துள்ளார். (சி)

## உதவுதொகை அதிகரிப்பு

சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதிய உதவு தொகை ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் சமூக பாதுகாப்பு நிதிய உதவு தொகை இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஐயாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை இந்த மாதம் முதலாம் திகதிக்குப் பின் இடம்பெறும் பிரசவங்களுக்கு மட்டுமே வழங்கப்படவுள்ளது. (சி)

## நாட்டை மீட்ட பொன்சேகா இன்று 12 அடி சிறைக்குள்

கொழும்பு, ஜன. 23

நாட்டை தீவிரவாதப் பிடியிலிருந்து மீட்டெடுக்க முழுமூச்சாகப் போராடிய ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா இன்று 12, 13 அடிகொண்ட சிறையில் வைக்கப்பட்டுள்ளார் என்று ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முதியோரின் உரிமைகளைப் பாதுகாத்தல் (திருத்தச்) சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனநாயகத்துக்காகப் போராடியதாலேயே அவருக்கு இந்தநிலை ஏற்பட்டுள்ளது. இன்று ஜனநாகத்துக்காகப் போராடுபவர்களும் இறுதியாக 12, 13அடிகொண்ட சிறைக்கூடத்திலேயே சிறை வைக்கப்படும் நிலைமை ஏற்படும் என்று தயாசிறி எம்.பி மேலும் தெரிவித்துள்ளார். (சி)

# நுகர்வோருக்கு நிவாரணமளிக்கவே காய்கறி விற்பனையில் இராணுவம்

கொழும்பு, ஜன. 23

நுகர்வோர் நலன்கருதி அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான சகல முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் வகையிலேயே, இராணுவத்தினர் காய்கறி விற்பனையில் ஈடுபட்டுள்ளனர் என்று அமைச்சர் அநுர பிரிய தர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாம் எப்பொழுதும் மக்கள் நலனுக்காக, அவர்களுக்கு நியாயமான வகையில் நிவாரணம் அளிக்கும் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். நாட்டில் சீரற்ற காலநிலை ஏற்படும் போது விவசாயம் பாதிப்படைகின்றது. அதேவேளை பொருள்களின் விலைகளும் அதிகரிக்கின்றன. இதனை ஓரளவுக்காவது நிறைவுசெய்யும் நோக்குடனேயே விவசாயிகளிடமிருந்து காய்கறிகளை நேரடியாக கொள்வனவுசெய்து இராணுத்தினர் மூலம் அவற்றை குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறோம். இப்படி அவர் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை சுதந்திரம் அடைந்த வேளையில் யாழ்.அரச அதிபராகப் பதவி வகித்தவர் ஒரு தமிழரே

## ஆவணப்பெட்டகம் 27

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

**ஜனவரி 1941**

யாழ். நகரத்தின் சனத்தொகை 90,000. பதுளைக் கச்சேரியில் தலைமை எழுதுவினைஞராகக் கடமையாற்றி வந்த எஸ்.கே அப்பாத்துரை, யாழ்ப்பாணக் கச்சேரி முதலியாராகவும் யாழ் நகரப்பகுதி மணியகாரனாகவும் நியமிக்கப்பட்டார். மணியகாரன் என்பது தற்போதைய உதவி அரச அதிபர் அல்லது பிரதேச செயலர் பதவிக்குச் சமனான பதவி

**பெப்ரவரி 1941**

'சார்ள்ஸ் பத்திரான' என்ற சிங்களவர் யாழ்ப் பாண நகரசபைக்கு நியமன உறுப்பினராக அரச அதிபர் பிரகாத்தினால் நியமிக்கப்பட்டார். ஈழகேசரி பத்திரிகை சார்ள்ஸ் பத்திரானவின் நியமனத்தை வரவேற்று ''சார்ள்ஸ் பத்திரானவின் நியமனம் சிங்கள தமிழ் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு, எனச் செய்தி வெளியிட்டிருந்தது.

**10.03.1941**

உள்நாட்டமைச்சர் பரோன் ஜெயதிலக யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணக் கச்சேரியில் யாழ்ப்பாணப் பிரமுகர்களுடன் கலந்துரையாடலொன்றை நடத்தினார். இக்கலந்துரையாடலில் மரவரி, கிராம சபைகளின் பிரச்சினைகள், ஆசிரியர்களின் சம்பளம், காங்கேசன்துறை சுகாதார விடுதி போன்ற பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

**24.06.1941**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நிறுவியவர் நினைவு தின நிகழ்வில் அரச அதிபர் பிரசாத் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

**31.05.1943**

அரச அதிபர் பிரசாத் யாழ்ப்பாண நகரசபையைக் கலைத்தார்.

**19.06.1943**

இராணுவத்தளபதி மேஜர் ஜிம்றி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து விமானக் குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது பற்றி விளக்க மளித்தார். (அப்போது இரண்டாம் உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது)

முற்றவெளியில் நடைபெற்ற கூட்டத்தில் இராணுவத் தளபதிக்குப் பத்தாயிரம் ரூபா அன்பளிப்புச் செய்யப் பட்டது.

**செப்ரெம்பர் 1943**

அரச அதிபர் பிரசாத் லீவில் செல்ல ஆர்.பி.டேவிஸ் அரச அதிபராகப் பதவியேற்றார்.

**19.05.1944**

அன்று அரச அதிபர் டேவிஸ் லீவில் செல்ல குமாரசாமி மேலதிக அரச அதிபராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து அரச அதிபராகப் பதவியேற்ற குமாரசாமி இலங்கை சுதந்திரமடையும் வரை அரச அதிபராக தற்போது ஐ.நா. சபையில் நிபுணத்துவ ஆலோசகராகக் கடமையாற்றிவரும் ராதிகா குமாரசாமி இவரது பேர்த்தி என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணக் கச்சேரியில் அரச அதிபரின் அலுவலகத்தினுள் உள்ள முன்னாள் அரச அதிபர்களின் பெயர்ப் பட்டி யலில் குமாரசாமி 1939 ஆம் ஆண்டு முதல் அரச அதிபராகப் பதவி வகித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் குமாரசாமி 1944 ஆம் ஆண்டே அரச அதிபராகப் பதவியேற்றதாக இந்துசாதனம், ஈழகேசரி ஆகிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. அத்துடன் தற்போது ஐ.நா. சபையில் நிபுணத்துவ ஆலோசகராகப் பணிபுரிந்து வரும் ராதிகா குமாரசாமியும் (குமாரசாமியின் பேர்த்தி) 1944 ஆம் ஆண்டே குமாரசாமி அரச அதிபராகப் பதவியேற்றதாக மின்னஞ்சல் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணக் கச்சேரியின் ஆரம்பகால வரலாற்றை எழுதித் தருமாறு முன்னாள் அரச அதிபர் க.கணேஷ் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை எழுதத் தொடங்கினேன். 1796 ஆம் ஆண்டு தொடக்கம் 1948 வரையான யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை எண்ணற்ற வரை பூரணமாகத் தந்துள்ளேன், யாழ் .பொது நூலகத்திலும் யாழ். பல்கலைக்கழக நூலகத்திலும் கிடைத்த தகவல் களை வைத்துக் கொண்டே யாழ்ப்பாணக் கச்சேரியின் ஆரம்ப கால வரலாற்றை எழுதியுள்ளேன். இதில் நிர்வாகப் பரவலாக்கல், மணியகாரன் பிரிவு அல்லது உதவி அரச அதிபர் பிரிவு போன்ற விவரங்கள் இடம் பெறவில்லை. இந்த விவரங்கள் சிலவேளை அரச சுவடிகள் காப்பகத்திலிருக்கிறதோ தெரியாது. யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றைக் கூறும் முதல் நூலாக இதனைக் கொள்ளலாமென நினைக்கின்றேன். இனிவரும் காலங்களில் நிர்வாக முகாமைத்துவத்துறையில் பட்டப்படிப்பையோ, பட்ட மேற்படிப்பையோ மேற்கொள்ளும் மாணவர்கள் யாராவது விரும்பினால் யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை விரிவாக ஆராயலாம்.

**நன்றிகள்**

என்னை யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை எழுதுவதற்குத் தூண்டிய முன்னாள் அரச அதிபர் கணேஷ் அவர்களுக்கும் தானாகவே முன்குறிப்புத்தந்துதவிய நாவலர் வீதியைச் சேர்ந்த வீணை ஆசிரியை செல்வி இராஜேஸ்வரிக்கும் தகவல் சேகரிப்பிலீடுபட்டிருந்த போது என்னை ஊக்கப்படுத்திய யாழ்.பொதுநூலகர் தனபாலசிங்கத்திற்கும் யாழ். பல்கலைக்கழக நூலக உத்தியோகத்தர்களுக்கும் லியனாட் வில்பின் குறிப்புகளை மொழிபெயர்த்த போது ஏற்பட்ட சந்தேகங்களைத் தெளிவுபடுத்திய நண்பர் வேல்தஞ்சன், ஈ.ஆர். திருச்செல்வம் ஆகியோருக்கும் வரலாற்றாசிரியர் ஆ.சபாரத்தினம் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

**குறிப்பு**

யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை நூலாக வெளியிடுவதற்கு யாழ்ப்பாண அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நான் ஏற்கனவே எழுதிய இன்றும் நினைவில் கொள்ள ''அந்த நாள் ஞாபகம்'' வரலாற்றுத் தூதுக்களின் தொகுப்பும் விரைவில் நூலாக வாசகர்களின் கரங்களில் தவழும் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தாண்டவன்**

(முற்றும்)


# மங்கலப் பொருள்களாகக் கொள்ளப்படும் இஞ்சியும் மஞ்சளும் ஆயுள்வேத வைத்தியத்திலும் முக்கியத்துவம் மிக்கவை

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

### இஞ்சி

வேறுபெயர்:ஆர்த்திரகம், இலாக்கொட்டை, நறுமணப்பூ.
தாவரவியற் பெயர் - ஜின்ஜிபேர் ஒபிசினாலே (Zingiber Officinale)
குடும்பம் - ஜின்ஜிபேரேசியே (Zingiberaceae)
சிங்களப் பெயர் - அமு இங்குரு
சமஸ்கிருதப் பெயர் - ஆர்த்திரக
ஆங்கிலப் பெயர் - Ginger

கரும்பு, இஞ்சி, மஞ்சள் என்பன சூரியனுக்கு மிகவும் பிரியமானவையாக தைப்பொங்கற் திருநாளில் இடம்பெறுகின்றன. ''இஞ்சி, மஞ்சள் பைங்கறி பிறவும் பல்வேறு தாரமொரு கல்லகத்து ஈண்டி'' என்று இஞ்சி, மஞ்சள், மிளகின் பெருமையை எடுத்துக் கூறுகிறது மதுரைக் காஞ்சி. இஞ்சி சிறு செடி வகுப்புக்குரியது. இதன் மட்ட நிலத்தண்டு (இஞ்சிக் கிழங்கு) மருத்துவத்தில் பயன்படுகிறது.



இஞ்சிக் கிழங்கை உணவில் சேர்த்து வர மலச்சிக்கல், அசீரணம், வயிற்றுப் பொருமல் என்பன அணுகாது.

இஞ்சியை வாயில் மென்று, உமிழ்நீரைத் துப்ப தொண்டைப்புண், குரல் கம்மல் என்பன நீங்கும்.

வாந்தி, ஓங்காளம் என்பவற்றுக்கு இஞ்சிச் சாறும் வெங்காயச் சாறும் சமவளவில் கலந்து நாக்கில் தடவிவர மாறும்.

இஞ்சிச் சாற்றுடன் சமவளவு தோடம்பழச்சாறு, வெங்காயச்சாறு, தேன் என்பன கலந்து காலை, மாலை-15-30மி.லீ. அளவில் பருகிவர இரைப்பிருமல், கோழை என்பன தணிவடையும்.

இஞ்சிச் சாற்றுடன் மாதுளம் பூச்சாறு, தேன் சமவளவில் கலந்து கொடுத்து வந்தாலும் ஈளை, இருமல் நீங்கும்.

உலர்த்தப்பட்ட இஞ்சிக் கிழங்கே சுக்கு அல்லது வேர்க்கொம்பு எனப்படுகிறது. ''சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை சுப்பிரமணியருக்கு மிஞ்சிய தெய்வமில்லை'' என்ற பழமொழியில் இருந்து சுக்கின் மருத்துவ முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளலாம்.

சுக்கைக் குடிநீரிட்டு அல்லது தேநீரில் சேர்த்துப் பருக வயிற்றுப் பொருமல், செமியாமை நீங்கும்.

சுக்கை வாயிலிட்டு மென்றுவர பல்வலி தணியும்.

சுக்குத் தூளைக் கருப்பஞ்சாற்றுடன் கலந்து காலையில் பருகிவர வயிற்றெரிச்சல் நீங்கும்.


சுக்கையரைத்து மூட்டு வீக்கங்களுக்குப் பூசிவர வீக்கம் வற்றும்.

வேர்க்கொம்பை முலைப்பால் அல்லது தேசிப்புளி விட்டரைத்து நெற்றியில் பற்றிட தலைவலி நீங்கும். சுக்கு, கடுக்காய், நிலவேம்பு,வேப்பம்பட்டை, சீந்தில் என்பவற்றைச் சேர்த்துக் குடிநீர் செய்து பருகிவர கடுங்காய்ச்சல், விஷக்காய்ச்சல் என்பன தணிவடையும்.

### மஞ்சள்

வேறுபெயர்: ஹரித்ரா, பீதம், அரிசனம்
தாவரவியற் பெயர் - குக்குமா லோங்கா (Curcuma Longa)
குடும்பம் - கிரமினே - ஜின்ஜிபெரேசியே (Zingiberaceae)
சிங்களப் பெயர் - கஹ
சமஸ்கிருதப் பெயர் - ஹரித்ரா
ஆங்கிலப் பெயர் - Turmeric

மஞ்சள் தெய்வீகத் தன்மையும் மங்கலகரமான தாகவும் உள்ள ஒரு மூலிகையாகும். மஞ்சள் பிள் [illegible] என்று [illegible] போகலாம்.



''சிறு பசுமஞ்ச ளொரு நறுவிரை தெளித்து'' என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது. மஞ்சளிலே கப்பு மஞ்சள், கறிமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், மர மஞ்சள் என்ற வகைகளுண்டு. இதில் மர மஞ்சள் மர வகுப்புக்குரியது. ஏனையவை சிறு செடிவகுப்புக்குரியன.

இதன் மட்ட நிலத்தண்டுக் கிழங்கே மருத்துவத்தில் பயன்படுகிறது.

மஞ்சளை உடலுக்குப் பூசிக் குளிப்பதால் உடல் துர்நாற்றம் நீங்கும். அழகுண்டாகும். நுண்ணிய நச்சுக் கிருமிகளை மஞ்சள் அழிப்பதால் தோல் வியாதிகள் ஏற்படுவதும் தடுக்கப்படும்.

மஞ்சள் பூசிக் குளிக்கும் பெண்களின் முகத்தில் உரோமமும் முளைக்காது என்பர்.

வேப்பிலையுடன் மஞ்சளைச் சேர்த்தரைத்து சொறி, சிரங்கு, கரப்பனுக்குப் பூசிவர அவை மாறும். அட்டைக் கடி, புண் வீக்கத்தின் மேல் பச்சை மஞ்சள் சாற்றைப் பூசிவர மாறும்.

பச்சரிசிச் சாதத்துடன் மஞ்சளைச் சேர்த்தரைத்து மூட்டு வீக்கங்களுக்கு வைத்துக் கட்ட வீக்கம், மூட்டுவலி என்பன தணியும்.

புழுப்பிடித்த புண்களை வேப்பிலை,மஞ்சள் அவித்த நீரால் கழுவிவர மாறும்.

மஞ்சள்தூளை ½ தேக்கரண்டி வீதம் தேனுடன் சேர்த்து காலை, மாலை சாப்பிட்டு வர இரைப்பிருமல், நாள்பட்ட இருமல், கோழை என்பன நீங்கும்.

(தொடரும்...)



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடை மடமும் படை மடமும் உண்டென்று அறிமடமும் சான்றோர்க்கு அணி




இலக்கியக் காட்சி – 71

வையாவிக் கோப்பெரும்பேகன் என்று ஓர் அர சன், அவன் வரையாது வழங்கும் வள்ளல், அதேநேரம், தோல்வி அறியாத போர்வீரனும் ஆவான்.

அக்காலத்துப் பாணரும் புலவரும் வள்ளல்கள் வாழ்ந்த வளமனையை நாடிச்செல்வது வழக்கம்.

*''பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்*
*நயனுடை யான்கட் படின் ''* [குறள்]

தமிழ்நாடு, பயன்மரமாயும் ஊருணிக் கேணியாக வும் மருந்தாகித்தப்பா மரமாயும் நிழல் இல் நீள் இடைத் தனிமரமாயும் விளங்கிய காலம் அது.

வறுமை பின்னின்று தள்ள, யாழ் ஒன்றைத் தோளில் சுமந்து பாணன் ஒருவன் முன்செல்ல, அவ னது சுற்றம் அவனைத் தொடர்ந்து பின்னே சென்றது.

இவர்கள் செல்லும் காட்டுப்பாதையில் ஓர் ஆலமர நிழலில் ஒரு கூட்டத்தினர் சந்தோஷமாக இளைப் பாறிக் கொண்டிருந்தனர்.

அந்தக் கூட்டத்தினரும் தம்மைப்போல ஒரு பாணர் குழுவினராய் இருக்கக் கூடும் என எண்ணி, இவர்களும் அம்மர நிழலில் போய் ஒரு பக்கத்தில் அமர்ந்தனர்.

இவர்களின் வறிய தோற்றத்தைக் கண்ட அக் கூட்டத்திலிருந்த பாணன் ஒருவன், இவர்களை நோக்கி ''நாம் முன்பு உம்மிலும் வறியராய் இருந்தோம்; இங்கே பேகன் என்று ஒரு வள்ளல் அவனைக் கண்டு இப்பொழுது வறுமை நீங்கப்பெற்றோம். நீங்களும் அவனிடம் சென்று வேண்டுவன பெற்று, வறுமை நீங்கி, இன்முகத்தோடு திரும்புவீராக'' எனக் கூறி ஆற்றுப்படுத்தினான்.

*''எத்துணை யாயினும் ஈத்தல் நன்றென*
*மறுமை நோக்கின்றோ அன்றோ*
*பிறர் வறுமை நோக்கின்று, அவன் கை வண்மையே''*

என்பது பேகனைப் புகழ்ந்து பாணன் பாடிய பாடல். ஆனால் அந்தப் பேகன் என்ற வள்ளல், நீரற்ற குளத்திலும் நீருள்ள குளத்திலும் விளைநிலத்திலும் களர் நிலத்திலும் பெய்யும் மழையைப் போல கொடை வழங்கும்போது ''கொடை மடம்'' படுவான் என்றும் பிறரோடு போர் செய்ய நேர்ந்தால் ''படைமடம்'' படான் என்றும் பேகனின் கொடைத் திறனையும் படைத்திறனையும் வர்ணித்துக் கூறி னான்.

*''கொடை மடம் படுதல் அல்லது படை மடம் படான்,*
*பிறர்படை மயக்குறினே''*

எனப் பேகன் இரு வேறு தன்மை உள்ளான் எனப் புலவர் கூறினார்.

''கொடைமடம் என்றால், கொடையின் போது அறியாமையில் மூழ்கியிருப்பது. இல்லாதவர், இருப்பவர், நல்லவர், பொல்லாதவர் என இரப்பவர் யாரோ, எவரோ என்று பாராமல் (பாத் திரம் அறியாது) மாரி மழை பெய்வது போலக் கொடுப்பது.

பாரதக் கண்ணன், வல்லார்க்கும் அல்லார்க்கும் உள்ளார்க்கும் இல்லார்க்கும் கொடுக்கிறான். போர்க் களத்திலே வஞ்ச வேதியனுக்குப் புண்ணியத்தையே கொடுக்கிறான். அந்தவகையில் கண்ணன் 'கொடை மடம்' படுதல் காணலாம்.

அதேபோல முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி வள்ளல் கொடை மடம் படுகிறான்.

*''பாரி பாரியென ஒருவற் போற்றிப்*
*பலரும் புகழ்வர் செந்நாப்புலவர்*
*பாரி ஒருவனல்லன், மாரியும் உண்டு.*
*ஈண்டு உலகு புரப்பதுவே''*

எனக் கொடைத்திறன் கொண்டவன் பாரி என்பது நாம் அறிந்ததே.

இனி 'படை மடம் படுதல்' என்பது, தம்மை எதிர்க் காதவர்மேலும் புறமுதுகிட்டுப் போவார்மேலும், இளையோர், மூத்தோர் மேலும் போர் நியதி தவறி அம்பு விடுதல் ஆகும்.

எனவே தனது சபதத்தை நிறைவேற்ற வீமன் துரியோதனனுடைய தொடையில் அடித்ததும், இராமன் சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வாலியை மறைந்து நின்று கொன்றதும் படைமடம்படுதல் ஆதல் காணலாம்.

அதேநேரம், இராமன், வெறுங்கையனாய் நின்ற இராவணனை ''இன்றுபோய்ப் போர்க்கு நாளை வா'' எனப்போக விட்டமை, படைமடம் படாமைக்குச் சான்றாகிறது கவனிக்கத்தக்கது.

வையாவிக் கோமான் பேகன், கொடை மடம் படுவதற்கு அவனது அருள் நிறைந்த உள்ளம் காரணமாகிறது என்பர். அருள் மிகுதியால் சுய அறிவு தொழிற்படுவதில்லை. அருள் உணர்வு குறைந்த நிலையில் ஒரு வன் தனது செயல் சரியானதா? தவறானதா? என்பதை அறிகிறான்.

அருள் கூடிய நிலையில் பேகன் செய்த ஒரு செயல், பல புலவர்களால் புகழ்ந்து ரைக்கப் பெற்றிருப்பதைப் புறநானூறு என்ற இலக் கியம் நமக்குக் காட்சிப்படுத்துகின்றது.

கார்காலத்தில் ஒருநாள் பேகன் தனது நாட்டின் மலைப் பகுதியில் உலாவிக்கொண்டிருந்தான்.

**நல்லதம்பி,**
மட்டுவில்.

(20 ஆம் பக்கம் பார்க்க.....)

# அந்த நாளுக்காக....

சிறுகதை

எந்த வேலையுமே இப்போதைக்கு கிடைக்கப் போவதில்லை என்பது அவளுக்குத் தெரியும். இருந்தும் முயற்சித்துக் கொண்டிருந்தாள். இது வரையில் வேலைக்காகச் சிரமப்படுபவர்களைக் கண்டபோதெல்லாம் எப்படியாவது முயன்றிருந் தால் பெற்றிருக்கலாம் எனக் கருதியே பழக்கப்பட்ட அவளுக்கு இந்த நிலைமை சற்றே புதினமான ஒன்றாய்த்தான் இருந்தது. ஒவ்வொருவரது பாடங் களுக்கும் அவரவரது பாடத்துக்கேற்ப தற்காலிகமாக ஏதோ ஒரு வேலை கிடைத்து விட, இவளது பாடத் திற்கு மட்டும் ஏனோ தாமதமாகிக் கொண்டே போனது எப்படி ஒரு நிலை என்பது கேள்விக்குறி யாயிற்று.

''சீ....படிச்ச படிப்புக்கு ஒரு மதிப்பில்லை.

ஓ...எல், ஏ....எல் ஓடையே ஒரு வேலையை எடுத்திருக்கலாம்.''

என்பதுவாய் இவள் சலிக்கும் தருணங்களில் அண்ணா சிரித்துக் கொள்வான்.

''நாங்கள் எல்லாம் எவ்வளவு காலம் காவலி ருந்தம் உனக்கென்னடி? இப்பதானை கம்பஸாலை வெளிக்கிட்டனி...?''

அண்ணாவின் கேலியான வினாவில் இவளின் கோபம் பன்மடங்கு அதிகமாகும்.

''அப்ப உன்னைப்போல என்னையும் இருக்கச் சொல்லுறியோ?''

இவளின் வார்த்தைகளில் அனல் கிளம்பும்.

''இப்போதைக்கு வீட்டை நின்று ஒழுங்கா சமை யலையும் தையலையும் பழகனப்பா....'' அம்மா சமாதானம் சொல்லவர இது தான் தருணமென்று அண்ணா விலகி விடுவான். இப்படியே இவளைச் சமாளிப்பது எல்லோருக்கும் வழக்கமான ஒன்றாகிப் போனது. சமையலும் இவளுக்குத் தெரியும். தைய லும் தேவையான அளவுக்குப் பழகியாயிற்று, இதற்குமேலும் என்ன பழக வேண்டியிருக்கிறது எனச் சினந்து கொள்வாள்.

வீட்டாரைப் பொறுத்தவரை அவள் வேலை பார்த்துத்தான் வாழ வேண்டுமென்ற நிலை இல்லா விட்டாலும் அதற்காக வேலை எதுவுமே செய்யாமல்



இருந்து உண்பது அவளுக்குப் பிடிக்காத ஒன்று. சின்னவளாயிருக்கும் போதே தானும் உழைத்துத் தன் குடும்பத்தின் வளர்ச்சியில் பங்குகொள்ளத் துடித் தவள் அவள். அதற்காக முயன்றுபல்கலைக்கழகக் கல்விவரை கற்றுத்தேறியும் வேலை மட்டும் அவளி டம் அவ்வளவு சுலபமாய் கிடைத்துவிடாது என்ப தாகச் சொல்லி நகைப்பதாக ஓர் எண்ணம்!

முற்றத்துப் பூமரங்களிடையே உலாவிக் கொண்டே அமைதியாய் அவற்றை ரசித்துக் கொண்டிருந்தாள். பக்கத்து வீட்டிலிருந்து ரீ.வி சத்தம் அதிகமாய் கேட்டுக் கொண்டிருந்தது. அந்த வீட்டுக்காரரின் மகனும் படிப்பை முடித்த பின்னர் எவ்வாறோ, ஏதோவொரு வேலையைப் பெற்று விட்டான். பள்ளிப் பிள்ளை களுக்கு ரியூசன் கொடுத்தும் வருகிறான். இப்போது பொழுதைப் போக்குவதற்காக ரீ.வி பார்த்துக் கொண்டிருக்கிறான். ஆனால் அவளும் அப்படிப் பொழுதைப் போக்கி ரி.வீ பார்க்க இயலாது. தனது எதிர்காலத்தைக் கருத்தில் கொள்ள வேண்டிய பொறுப்பு அவளுக்கு இருக்கின்றது.

எல்லோராலும் ஒரேமாதிரி வாழ முடியாது என் பதை அவள் அறிந்துதான் வைத்திருந்தாள். அவ னைப் போல இவளால் ஒரு வேலையில் கண்ணை மூடிக் கொண்டு இறங்க முடியாது. அப்படித்தான் வீட்டிலும் எல்லோரும் கதைத்தார்கள்.

''ஆம்பிளையள் என்றா பயமில்லையம்மா பொம்பிளையள் வேலைக்குப் போறதென்டா கவ னமா இருக்க வேணும். உலகம் நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை....'' என்று தொடரும் மாமாவின் ஆலோசனைகளும்,'' நீ சின்னவ..... உலகம் விளங் கேல்லை, கொஞ்சம் பொறுத்து நல்ல ஸ்ரெடியான வளா வந்து போ..'' என்ற பெரியப்பாவின் ஆலோ சனைகளும் காலம் போகிற போக்கினைப் பார்த்தால் சரி என்றுதான் தோன்றியது.

அனைத்தையும் ஏற்றுக்கொண்டு ''சரி, பொறுத் திருப்பம்'' என்றும் எண்ண இயலாமல் அவளை பிரச்சினைகள் வேறுவிதமாக அணுகத் தொடங்கின. உறவென்றும் நட்பென்றும் சொல்லிக் கொண்டே வெளிநாட்டு மாப்பிள்ளைகளின் சாதகங்களைக் கொண்டு வந்து அவளது பெற்றோரிடம் பொருத்தம் பார்ப்பதும் கல்யாணம் செய்யச் சொல்லிக் கதை அளப்பதும் வழமையான அவளது வீட்டுச் செய்தி களாயின.

''இப்ப.... என்னம்மா இதுக்கு அவசரம்......?'' என்று அவள் கோபமாகக் கேட்ட போது?

''இப்ப பாக்காம எப்ப பார்க்கிறது நாங்களென்ன விசாரிக்காமலே உன்னத்தள்ளப் போறம்?'' என் பதுவாய்ச் சித்தி வெடுக்கெனப் பதில் சொன்ன போது அவள் திண றித்தான் போனாள்.

''அம்மா....வெளிநாடெல்லாம் வேண்டாம். எனக்குக் கல்யாணம் இப்ப வேண்டா மென்று சொல்லுங்கோவன்''

**தீட்சண்யா**

(20 ஆம் பக்கம் பார்க்க.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாவை உய்யவிடாது தடுக்க....

யாழ். குடா நாட்டில் எங்கும் ஊடுருவிப் படர்ந்திருக்கும் அச்ச உணர்வு மீள உயிர்க்க நினைக்கும் தமிழ் அரசியலையும் பொருளாதாரத்தையும் மூச்சடைக்க வைக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டதாகும்.

திட்டமிடப்பட்ட அவமானப்படுத்தல்கள் பயங்கரமான கொலைகள், ஆள்கள் கடத்தப் படுதல், காணாமல் போதல் போன்றவை உண்மையிலும் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து இருப்பதால் ஏற்பட்ட தனிநபர் நடவடிக்கைகள் அல்ல. பதிலாக இவை திட்டமிடப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நோக்கங்களைக் கொண்ட நடவடிக்கைகளாகும்.

அண்மைக் காலங்களாக நடத்தப்பட்டு வரும் இந்தத் தாக்குதல்களில் இரண்டு வகையான தொகுதியினர் இலக்கு வைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

### குறிவைக்கப்பட்டுள்ள இலக்குகள்

ஒரு தொகுதியினர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர். மறுதொகுதியினர் சமூக மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்.

போரினால் சிதிலமடைந்த தமிழ் பிரதேசங்களில் சமூக அரசியல் பொருளாதார வாழ்க்கை மீண்டும் துளிர்விடுவதற்கான அடிப்படையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மேற்குறித்த இரு தொகுதியினரும் அவசியமானவர்களாவர்.

> **பெரும் எண்ணிக்கையான இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் யாழ். குடாநாட்டுக்கு திரும்பியுள்ள போதும் மீண்டும் அவர்கள் சொந்த நிலங்களிலும் வீடுகளிலும் வாழ அனுமதிக்கப் படவில்லை. உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் அந்த மக்கள் தங்களின் சொந்த விவசாய நிலங்களில் பயிரிட்டு தமக்கான உணவுத் தேவையை நிறைவு செய்யவிடாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.**

இராணுவ மயமாக்கலாலும் போரினாலும் இருண்டிருந்த யாழ்ப்பாணம் (இந்தச் சிறிய குடாநாட்டில் தற்போது 40,000 துருப்புக்கள் நிலைகொண்டுள்ளனர்) மீள எழுவதற்கு, அடிப்படையான சமூக பொருளாதார நடவடிக்கைகள் அவசியமானவை. இது அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் அவசியமாகும்.

இங்கு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் யுத்த காலங்களிலும் குறிப்பாக நோர்வேயினால் வழி நடத்தப்பட்ட சமாதான கால கட்டங்களிலும் கூட மேற் குறித்தவாறான தாக்குதல்களே நிகழ்த்தப் பட்டிருந்தன. ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், மனிதாபிமான உதவிப் பணியாளர்கள் போன்றவர்கள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாகக் குறிவைக்கப்பட்டுத் தாக்கப்பட்டு கொல்லப்பட்டிருந்தார்கள். அப்பொழுதும் இப்பொழுதும் இந்த வகையான தாக்குதல்களின் பின் துணை இராணுவக் குழுக்களும் இராணுவ புலனாய்வுக் குழுக்களும் இருக்கின்றன.

### ஏன் இப்பொழுது?

யாழ்ப்பாணத்தில் சமூக அசைவியக்கமும் வர்த்தக சமூகத்தின் எழுச்சியும் அவதானிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் மீண்டும் இந்த அச்சமூட்டும் நடவடிக்கைகள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. தமிழ்ப் பகுதிகளில் சிங்கள ஆதிக்கம் நிறைந்த பொருளாதாரத்தை நிலைநாட்டுவதும் தனது அடியாள்களில் ஊடாக அதிகாரத்தை கட்டி எழுப்புவதுமான ராஜபக்ஷவின் தந்திரோபாயமே இதற்கு அடிப்படையான காரணமாகும்.

யுத்தம் நடந்த காலங்களில் இயங்கிய துணை இராணுவக் குழுக்களும் ராஜபக்ஷவின் கட்சியும் உள்ளூர் அதிகாரங்களுக்குள் நுழைய விரும்புகின்றன.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களின் பின்பும் இலங்கை இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றி பதினைந்து வருடங்கள் கடந்த பின்பும் யாழ். குடாநாடு அரச வளங்கள் எதுவும் அற்ற நிலையில் பட்டினி போடப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட வளங்களும் அரச ஆதரவாளர்களை வலுப்படுத்த மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டின் அரச அதிகாரமும் இன்று வரையும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

பெரும் எண்ணிக்கையான இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் யாழ். குடாநாட்டுக்கு திரும்பியுள்ள போதும் அவர்கள் சொந்த நிலங்களிலும் வீடுகளிலும்வாழஅனுமதிக்கப்படவில்லை. உயர் பாதுகாப்பு வலயங்கள்என்றபெயரில் அந்த மக்கள் தங்களின் சொந்த விவசாய நிலங்களில் பயிரிட்டு தமக்கான உணவுத் தேவையை நிறைவு செய்யவிடாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த வகையான உயர் பாதுகாப்பு வலயம், மற்றும் தொடர்ச்சியான் இராணுவ மயப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளாலும்; யாழ்ப்பாணம் தவிர ஏனைய நகரங்களிலும் கிராமங்களிலும் புறக்கணிக்கப்பட்டு வரும் சமூக கட்டமைப்புக்ளின் (வைத்திய சாலைகள், பாடசாலைகள்) வளர்ச்சியினாலும் குடாநாட்டு மக்கள் கடுமையான விரக்திக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

### அதிகரித்துவரும் எதிர்ப்பு

இந்த அதிருப்திகளும் விரக்திகளும் குறித்தளவில் சமூகத்தை அதற்கு எதிராக அசையவைத்துள்ளன. பயங்கரமான வழிகளில் இராணுவ மயப்படுத்தப்பட்ட ஆட்சியை கொண்டுவரமுயலும் அரசின் நிலைப் பாட்டுக்கு எதிராக மெல்லிய சமூக அசை வியக்கம் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல அது மிகச் சிறிய வெற்றியும் பெற்றுள்ளது. இது ஓரளவுக்கு உள்ளூரில் ஒழுங்கமைக்கப்பட்ட சமூக குழுக்களினாலும் சர்வதேச அழுத்தங்களாலும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை போருக்கு பின்னான சாத்தியங்களைப் பயன்படுத்த விரும்பும் தமிழ் வர்த்தக சமூகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள தடைகளையும் வரையறைகளையும் நீக்கும் இடையறாத முயற்சிகளையும் தமிழ் வியாபாரச் சமூகம் மேற்கொண்டு வருகிறது.

சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புவதற்கும் அபிவிருத்தி அடைவதற்கும் குடாநாட்டு மக்கள் மீண்டும் மீண்டும் செய்யும் முயற்சிகளை சர்வதேச சமூகமும் குறிப்பாக இந்தியாவும் ஊக்குவிக்கின்றன.

அதே நேரம் இலங்கை அரசும் அவர்களின் இந்த முயற்சிகளை திட்டமிட்ட நிர்வாகத் தடைகள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் தடுத்து வருகிறது.

அதுமட்டுமன்றி இராணுவ அரச அதிகாரங்களினால் பாதுகாக்கப்படும் சிங்கள வியாபார முயற்சிகளை யாழ். குடாநாட்டில் ஸ்தாபிக்க முயற்சிக்கிறது. ஆளும் அரச கட்சியில் உள்ளவர்கள் அவர்களின் ஆதரவாளர்களால் கட்டுப்படுத்தப்படும் வியாபார நடவடிக்கைகளையும் குடாநாட்டில் ஆரம்பித்துள்ளனர்.

### மூலவேர்களை எரித்தல்

ஆயினும் யாழ்ப்பாணத்தின் சமூக வளர்ச்சியை கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகள் மேற் குறித்த வழிகளில் அதிகம் சாத்தியப்படாமை யினாலேயே அச்சமூட்டும் இராணுவ பயங்கர வாதத்தை அரசு பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.



இந்த வன்முறைகளின் உடனடி நோக்கம் மிக விரைவில் நிகழவுள்ள உள்ளூராட்சி சபைத்தேர்தலையும் சர்வஜன வாக்கெடுப்பு நடவடிக்கையையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிப்பதாகும்.

அரசினால் மேற்கொள்ளப்படுவதாக பரவலாக நம்பப்படுகிற இந்த அரச பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக உருவாக்கப்பட்டுள்ள அச்சமூட்டும் சமூக உளவியல் காரணமாக அரசுக்கு எதிரானவர்களாலும் விமர்சகர்களாலும் அர்த்தமுள்ள எதிர்ப்பு நடவடிக்கைகளில் இணைந்து கொள்ள முடியவில்லை.

அதுமட்டுமன்றி அரச ஆதரவாளர்களைத் தவிர ஏனையவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தயங்கும் சூழ்நிலையே ஏற்பட்டுள்ளது. இதனால் எதிர்க்கட்சிகள் தமக்குரிய வேட்பாளர்களையோ செயற்பாட்டாளர் களையோ கண்டு கொள்வது கஷ்டமாக இருக்கும்.

விமர்சனங்களையோ, எதிர்ப்புக்களையோ எந்தவிதத்திலும் கணக்கில் எடுக்காது தான்தோன்றித்தனமாகச் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த முனையும் ஓர் அரசு நடத்தும் சர்வசனவாக்கெடுப்பு வெளிப் படையானதாகவோ நம்பத் தகுந்ததாகவோ எல்லா விதமான பிரச்சினைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு செய்யப்படும் ஒரு நடவடிக்கையாகவோ இருக்கப் போவதில்லை.

சாதாரண வாழ்க்கை நிலைமை திரும்பாமலும் லட்சக்கணக்கான தமிழ்மக்கள் இடம் பெயர்ந்து உள்ள நிலையிலும் அரசு இச் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவுள்ள தொன்றும் ஆச்சரியமான விடயமல்ல.

ஆனால் தற்போது உருவாக்கப்பட்டுள்ள, யாழ்குடாநாடெங்கும் ஊடுருவியுள்ள அச்சவுணர்வு அரசின் மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதையோ சவால் விடுவதையோ சாத்தியமில்லாது செய்துவிட்டது.

அரசாங்கத்தின் எல்லாவிதமான தடைகளையும் மீறி விடாமுயற்சியுடன் யாழ். குடாவை உய்யவிடாது தடுக்கும் அரசின் நடவடிக்கை களையும் வாழ்வாதாரத்துக்கான வருமானத்தை தரும் பொருளாதாரத்தையும் கட்டி எழுப்ப வேண்டிய நிலையில் குடாநாட்டின் எழுச்சியுற்று வரும் கூட்டம் இருக்கிறது.

துணை இராணுவ மற்றும் இராணுவக் குழுக்களால் உருவாக்கப்பட்டுள்ள பயங்கரவாதம் காரணமாக யாழ். குடாநாட்டில் பரவியுள்ள அச்சஅலை அங்கு சாதாரண வாழ்க்கை நிலைமைகளை வெளிக் கொண்டு வரமுனையும் சர்வதேச முனைப்புக்களையும் செயலிழக்கச் செய்து வருகிறது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்ததிலிருந்து நன்கொடை வழங்கும் சர்வதேசநாடுகள் நிலையான வளர்ச்சியையும் உறுதித்தன்மையையும் போர் நிகழ்ந்த பகுதிகளில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மேம்படுத்த துவதில் அவதானத்தைச் செலுத்திவந்துள்ளன.

1996 ஆம் ஆண்டில் இருந்து யாழ். குடா, அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற போதும் அது இன்னமும் போர் அறைந்த நகரமாக உடைந்த கட்டடங்களுடனும் குண்டு துளைத்த சுவர்களுடனும் காட்சியளிக்கிறது.

சர்வதேச நன்கொடையாளர்கள் இரண்டு முன் மொழிவுகளை முன்வைத்துள்ளனர். முதலாவது பெரிய அளவில் இடம்பெயர்ந்தவர்களை அவர்களது வாழிடங்களில் மீளக்குடியமர்த்துதல். இரண்டாவது சமூக பொருளாதார வளர்ச்சிக்கான சூழ்நிலைகளை உருவாக்குவது. இவை இரண்டும் மட்டுமே தொலை நோக்கில் உண்மையான அமைதியை கொண்டுவர முடியும் எனச் சர்வதேச நன்கொடையாளர்கள் கருதுகின்றனர்.

கடந்த இரண்டு வருடங்களில் உதாரணத்திற்கு அமெரிக்கா மில்லியன் கணக்கான நிதியுதவியை இலங்கைக்கு வழங்கியுள்ளது. மீளக்குடியமர்வு, உணவு வழங்கல் (75 மில்லியன்) மற்றும் கண்ணிவெடி அகற்றுவித்தல் (11மில்லியன்) போன்றவற்றிற்கு அமெரிக்கா உதவிகளை வழங்கியுள்ளது. மேலும் யாழ்ப்பாணத்திற்கு அருகில் நீளக்காற்சட்டைகளைத் (ஜீன்ஸ்) தயாரிக்கும் தொழிற்பேட்டை ஒன்றை ஆரம்பிப்பதற்கும் அமெரிக்கா முதலிட்டுள்ளது. கடந்த ஓகஸ்டில் யாழ்ப்பாண பெண்கள் வர்த்தக சம்மேளனத்தைச் சந்தித்து வடக்கின் பொருளாதாரத்தை மீளக்கட்டி அமைக்கும் நம்பிக்கையையும் அது வெளியிட்டதுடன் வேலை தேடும் பெண்களுக்கு தொழில்களை வழங்கமுடியும் எனவும் தெரிவித்திருந்தது.

**தேவ அபிரா**

ஜப்பானும் இவ்வாறான உதவிகளை வழங்கச் சம்மதித்திருந்தது.

### இந்தியத் தொடர்புகள்

போரினால் பாதிப்படைந்த யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்பும் பெரும்பாலான முயற்சிகளை இந்தியாவே தத்தெடுத்துக் கொண்டுள்ளது. இந்தியா ஒரு பில்லியன் டொலர்களை வடக்கை மீளக் கட்டுவதற்கும் வழமை நிலைக்கு திரும்புவதற்கும் வழங்க வாக்களித்துள்ளது. மீளக் குடியேறுபவர்களுக்கான 50,000 புதிய வீடுகளை அமைத்தல் (ஐக்கிய நாடுகள் சபை 160,000 வீடுகள் தேவை என அறிவித்துள்ளது) யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ரயில்பாதை இணைப்பு ஆகியவற்றைச் செய்யப்போவதாகவும் இந்தியா அறிவித்துள்ளது. யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திரு கோணமலை, மட்டக்களப்பு ஆகிய வையே தமிழர்கள் வாழும் முக்கிய நக ரங்களாகும்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் திட்டங்களை இழுத்தடிக்கும் போக்கு...!

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மில்லியன் பெறுமதியான இந்தியாவின் உதவித்திட்டத்தில் தமிழ் முதலீட்டாளர்களுக்கான கடன் வழங்குதல், அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையை இயக்குதல் என்பன அடங்குகின்றன.

இந்திய அரசவங்கி யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் கிளைகளைத் திறப்பதற்கு அனுமதி கோரியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக விவசாய முயற்சிகளுக்கு கடன்களை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நீண்டகால பொருளாதார ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இந்தியா வடக்கு, கிழக்குப் பிரதேசங்களையும் தமிழ் நாட்டையும் அதன் வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரத்தையும் தொடர்புபடுத்த விரும்புகிறது.

மேலும் புதுடில்லி காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவும் பலாலி விமானத்தளத்தை அபிவிருத்தி செய்யவும் நிதி அளிக்க ஒப்புக்கொண்டுள்ளதுடன் இராமேஸ்வரம் - மன்னார் கடற்போக்குவரத்தை ஆரம்பிக்கவும் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது.

கடந்த நவம்பரில் இந்திய வெளியுறவுச் செயலாளர் எஸ்.எம். கிருஸ்ணா இந்தியத் தூதுவராலயத்தின் கிளையொன்றை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்திருந்தார். இலங்கை அரசு இது தொடர்பாக தயக்கங்களை கொண்டிருந்த போதும் போர் முடிந்ததிலிருந்து புதுடில்லி தனது தூதுவராலயத்தின் கிளை ஒன்றை இலங்கையில் திறப்பதற்கு அழுத்தங்களை வழங்கி வந்தது.

இந்தியாவுடனான பாரம்பரியமான தொடர்பு களையும் இணைப்பையும் மீள கட்டியெழுப்பும் ஒரு முயற்சியே தமது தூதுவராலயத்தை இங்கு திறப்பதன் நோக்கமென கிருஸ்ணா அவர்கள் தெரிவித்தார். வரலாற்றில் இந்தப் பிராந்தியத்தின் வியாபார மையமான யாழ்ப்பாணத்தின் பங்கு முக்கியமானதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

### சிங்களம் விதிக்கும் விடாப்பிடியான தடைகள்

எவ்வாறாயினும் தமிழ்ப்பகுதிகளில் வழமை நிலைமையைக் கொண்டு வருவதற்கு சர்வதேசம் செய்துவரும் முயற்சிகளை இலங்கை விடாப்பிடியாக எதிர்த்து வருகிறது.

பலவருடங்களாக அரசு சர்வதேச உதவி நிறுவனங்கள் வடக்கு, கிழக்கில் செயற்படுவதற்கு மிக இறுக்கமான விதிகளை அறிவித்திருந்தது. இந்தக் கட்டுப்பாடுகள் மேலும் மேலும் அதிகரித்துச் சென்றனவே தவிர குறையவில்லை.

அண்மையில் கொழும்பு, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கிளையையும் ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிலையங்களையும் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு, கிழக்கின் பெரும் பகுதிகளில் இருந்து வெளியேற்றிவிட்டது.

இராணுவமானது, கடலில் மீன் பிடிப்பதற்கும் நிலங்களில் விவசாயம் செய்வதற்கும் உத்தியோகபூர்வமாக தடைகள் நீக்கப்பட்டிருந்த போதும் கண்மூடித்தனமாக மீண்டும் தடைகளை விதித்து வருகிறது.

சிவில் சட்டம் என்னும் முகத்திரையை அணிந்து கொண்டு அனேகமான தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ நிர்வாகிகளே நிர்வாகத்தை நடத்துகின்றார்கள். உதாரணமாக கிழக்கு மாகாணமானது முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவரினாலேயே ஆளப்பட்டு வருகிறது. கிழக்கு மாகாணசபை கொண்டு வரும் எந்தத் தீர்மானங்களையும் வீட்டோ செய்யும் அதிகாரம் அவரிடம் உள்ளது.



யாழ்.ஸ்ரான்லி வீதியில் இந்தியா வங்கிக் கிளை திறக்கப்பட்ட போது...

வடக்கு, கிழக்கை சாதாரண நிலைக்கு திருப்புவதற்கு சர்வதேசம் எடுக்கும் முயற்சிகளை இலங்கை அதிகரித்த அளவிலும் வெளிப்படையாகவும் எதிர்க்கத் தொடங்கியுள்ளது.

கடந்த மாதம் அரசானது தமிழ்ப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப்பணி ஒன்றைத் தடைசெய்திருந்தது. அது ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படிருந்த போதும் அது தடை செய்யப்படுவதாக அரசு பின்னர் அறிவித்தது. இது தொடர்பாக அரசு வெளியிட்டிருந்த சுற்றறிக்கை பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த போதும் இதையிட்டு வந்த பத்திரிகைச் செய்திகளையும் அரசு மறுத்திருந்தது.

இலங்கை அரசானது இந்திய அரசின் 50,000 வீடுகள் கட்டும் திட்டத்தையும் கூட 5,000 வீடுகளே புதிதாகக் கட்டப்படும் எனச் சுருக்கியுள்ளது. அதேவேளை டில்லியைத் திருப்திப்படுத்தும் நோக்கில் பெருமளவான கட்டிடப்பணிகள் புதிய வீடுகளாக அமையலாம் எனவும் கூறியுள்ளது.

பொதுவில் வடக்கு, கிழக்கில் வழமை நிலைமையைத் தூண்டும் இந்தியாவின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு பின்னடித்தே வருகிறது.

உதாரணமாக யுத்தம் முடிவடைந்து ஒன்றரை வருடங்களின் பின்பே இந்திய துணைத்தூதரகமும் இந்திய வங்கிக் கிளைகளும் யாழ்ப்பாணத்தில் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டன.

கொழும்புக்கும் தென்னிந்தியாவுக்கு மிடையிலான கடற்பாதைப் பயணம், மன்னார் - தென்னிந்தியக் கடற்பாதைப் பயணம் போன்றவை தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிவித்தல்களும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இழுத்தடிப்புச் செய்யப்படலாம்.

இந்திய விமானத்துறையினரால் அறிவிக்கப்பட்ட பலாலிவிமானத்தளப் புனரமைப்பும் கொழும்பின் நடவடிக்கைகளுக்காகக் காத்திருக்கின்றன.

சர்வதேசத்தினதும் இந்தியாவினதும் வடக்கு, கிழக்கில் சாதாரண நிலைமைகளைக் கொண்டுவரும் முயற்சிகளைத் தடுக்கும் நோக்கமும் வடக்கு, கிழக்கில் அரச பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குள் அடங்கி உள்ளது. நவம்பர் 27ல் இந்திய வெளிநாட்டு அமைச்சர் துணைத்தூதுவராலயத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து விட்டுச்சென்ற பின்பு எவ்வளவு கொலைகளும் கடத்தல்களும் நடந்தன என்பதைச் சொல்லத் தேவையில்லை. அதிகளவில் சமூக மற்றும் அரசியற் செயற்பாட்டாளர்களும் முதலீட் டாளர்களுமே பலிக்கடாக்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

**நவம்பர் 27இல் இந்திய வெளிநாட்டு அமைச்சர் துணைத் தூதுவராலயத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து விட்டுச் சென்ற பின்பு எவ்வளவு கொலைகளும் கடத்தல்களும் நடந்தன என்பதைச் சொல்லத் தேவையில்லை. அதிகளவில் சமூக மற்றும் அரசியற் செயற்பாட்டாளர்களும் முதலீட்டாளர்களுமே பலிக்கடாக்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.**

சமூகத்திற்குப் பயப்பிராந்தியை ஊட்டும் நோக்குடன் செய்யப்பட்ட முயற்சிகளே இவை.

வழமையாக வடக்கு, கிழக்கில் நிகழும் அத்துமீறல்களைச் சுயதணிக்கைக்கு உட்படுத்தும் கொழும்பு ஊடகங்கள்கூட யாழ்ப்பாணத்தில் நடந்த தொடர்ச்சியான இத்தகைய சம்பவங்களின் செறிவு காரணமாக அவற்றை அறிக்கையிட வேண்டிய நிலைக்கு உள்ளாகின. ஆயினும் சர்வதேச ஊடகங்களுக்கு இவற்றை அறியும் வாய்ப்பு கடுமையாகத் தடுக்கப்பட்டிருந்தது.

இக் கடத்தல்களுக்கும் கொலைகளுக்கும் முன்பதாக யாழ்ப்பாண வர்த்தகர்கள் பலர் புலிகளுக்கு உதவி செய்ததாக கூறப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். ஆனால் எவரும் முறைப்படி குற்றம் சாட்டப்பட்டிருக்கவில்லை.

எப்போது என்று சொல்லமுடியாது நிகழக்கூடிய அரச வன்முறைகளுக்கு உள்ளூர்த் தமிழ் முதலாளிகள் அச்சப்படும் அதேவேளை இந்திய முதலீட்டாளர்கள் உட்பட வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தமிழ்ப் பிரதேசங்களைத் தவிர்க்கவே விரும்புகின்றனர். அதுமட்டுமன்றி உதவி வழங்கும் நாடுகளினால் நிதி அளிக்கப்படும் கட்டுமானங்களும் சாதாரண நிலைக்கு திரும்பும் முயற்சிகளும் ஸ்தம்பிதம் அடையும்.

வெகு விரைவாக வளர்ந்து வரக்கூடிய அமைதிநிலையை - முதலீடுகளைச் செய்யவும் அபிவிருத்தி அடையவுமான சூழ் நிலையை - திட்டமிட்டு உடைக்கும் நோக்கிலேயே அரசு இந்தப் பயங்கரவாதத்தை அவிழ்த்து விட்டுள்ளது. அது தற்போது வேலை செய்கிறது என்பது தான் உண்மை. ✱

# இது தகுமோ...? இதுமுறையோ...?

“ஓகன் இசை அரங்கேற்றம்'' எனும் பெயரில் 16.01.2011 அன்று மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள கலையரங்கு ஒன்றில் ஓர் விந்தையான நிகழ்வு நடைபெற்றது. மூன்று குடும்பங்களின் பெண்பிள்ளைகள் நால்வர் இந்நிகழ்வை வழங்கினர். மழலைக் குஞ்சுகளின் பிஞ்சு மனங்களை நோகடிப்பது எனது நோக்கம் அல்ல. என்றாலும் தவறான எண்ணங்களும் பிழையான மதிப்பீடுகளும் எமது தமிழ்ச் சமூகத்தின் கலைச்சூழலில் உருவெடுப்பதைத் தவிர்க்கும் முயற்சியாகவே இதை எழுதுகிறேன்.

அரங்கேற்றம் என்றால் என்ன என்பதை நாம் தெளிவாகச் சிந்திக்க வேண்டும். ஏதாவதொரு கலையின் மரபுவழியான பயில் நெறியை முறையான ஆசானிடம் தெளிவுறக் கற்றபின் துறைசார்ந்த வல்லுநர்கள் அனுபவசாலிகள் நிறைந்த சபையில் முதன் முறையாகச் சிறப்புற நிகழ்த்திக் காட்டுவதே அரங்கேற்றம் ஆகும்.

ஓகன் என்பது மேலைத்தேசத்தவரின் இசைக் கருவி எனினும் எமது சாஸ்திரீய இசையைக் கருவியில் இசைக்க முடியும். மேற்படி அரங்கேற்ற நிகழ்வில் மேலைத்தேச இசையோ கீழைத்தேச இசையோ இசைக்கப்படவில்லை. நான்கு மாணவியரும் மேடையில் நின்ற வண்ணம் வாராயோ வாராயோ மோனலீசா, முகுந்தா முகுந்தா, வெண்மேகம் வெண்போல, நெஞ்சுக்குள் பெய்திடும் மாமழை, சுட்டும் விழிச்சுடரே, ஒவ்வொரு பூக்களுமே, காதல் சிறகை காற்றினில் விரித்தே, என்னடி ராக்கம்மா, சுராங்கனி சுராங்கனி போன்ற தமிழ்ச் சினிமாவின் பாடல்களுடன் சில பக்திப் பாடல்களையும் இசைத்தனர். பக்கவாத்தியங்களாக தபேலா, ட்ரம்ஸ், ஒக்ரோபாட் என்பன பயன்படுத்தப்பட்டன.

என்ன கொடுமை இந்த நிகழ்வுக்கு அரங்கேற்றம் என்று பெயர்வைத்து உற்றாரை, நண்பர்களை, ஊரவரை அழைப்பிதழ்கள் மூலமும் பத்திரிகை விளம்பரங்கள் மூலமும் அழைக்க எப்படி மனம் துணிந்தனர் என்று புரியவில்லை.

இராகம் கீர்த்தனை வாசித்து நிரவல் வாசித்து கற்பனாஸ்வரம் வாசித்து வயலின் மிருதங்கம் போன்ற துணைக் கருவியாளர்களுடன் தமது ஆற்றுகைத் திறன்களைப் பகிர்வதே அரங்கேற்றம் ஆகும்.

இவ்வாறான முறையில் மாணவர்களைப் பயிற்றுவிப்பதே சிறந்த குருவுக்கு அழகு. சினிமாப் பாடல்களை கற்றுக் கொடுப்பது தவறு என்றாகாது. ஆனால் அரங்கேற்றம் என்று வரும்போது சில நெறி முறைகள் அவசியம்.

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உரிய தகைமைகள் வரும் வரை கடினமான பயிற்சிகளை மேற்கொண்டு அதன் பின்னர் அரங்குக்கு வருவதே கலைகளின் வளர்ச்சிக்கு உதவும். இதுவே சங்கீதம் நடனம் போன்ற துறைகளில் மரபாகவும் இருந்து வருகின்றது.

வயாவிளான் ம.திருச்செல்வம்

எனவே, பணத்தையும் நேரத்தையும் செலவழித்து தமது பிள்ளைகளுக்குக் கலைகளைக் கொடுக்கும் பெற்றோரும் இது விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும். இல்லையேல் சினிமாப்பாடல்களைத் தொழில் மூலதனமாகக் கொண்ட எல்லோருமே இவ்வாறாக அரங்கேற்றப் புறப்பட்டுவிடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் ஏன் உன் போலில்லை?

பெரதெனியாவிலிருந்து "திஸர" வந்திருந்தான்
இம்முறை எம் வீட்டு மழைப் பொங்கலுக்கு!
கலைக்கழகத்தில் அருகருகே எம் இருக்கைகள்
ஆனாலும் "வெற்றியை" கொண்டாட "வெடி" வாங்க
வற்புறுத்தியதை இரண்டாண்டுகளாகியும் மறக்கவில்லை
இன்னமும் நான்!!
ஏ-9 இன் விளம்பரப்பலகைகளை விழுங்கியபடி விரைந்த
பேருந்தில்,
நாவற்குழிக்கு மிக அண்மித்தாய், கரும் சிவப்புப்
பெரும் பலகையொன்றில் பானத்துக்கானதொரு பதாகை.....
"இறுதித்துளி வரை லங்கன்".....
திரும்பி என்னைப் பார்த்த சாதாரண புன்னகையும்
அசாத்திய வெறிச் சிரிப்பாய் என் கண்களில்!!
....."நீங்கள் சொல்லும் "துளி" ஒன்றும் "இரத்தம்"
இல்லையே தோழா?".....
"அது சரி! "கிரிஷாந்தி"யை தெரியுமா உனக்கு?
அருகிலேதான் புதைந்து கிடந்தாள்!"....
வயிறெரிந்து வாய் வரை வந்து
நின்றுவிட்ட வார்த்தைகள் போல் இன்னமும் சில.....

நல்லூரின் மணலில் பாதம் புதைந்த போதில்
....பசியாயுதமேந்தி பகை போகக் கேட்டவனுக்கு
ஒற்றைக் "கொங்கிறீட் தூண்" கூடக் கொடுக்காத
வெட்கத்தின் மண்"....என்றும்

நிலாவரை நெடுங்குண்டு போகும் வழியில்
இராஜ பாதையில்.......
....."விதைத்ததெல்லாம் கிளறியெடுத்து வெற்று மண்ணில்
'வீர' வீடுகளின் அணிவகுப்புப் பார்!... என்றும்
இறுதிவரை உதடுகள் துப்பாத சில வார்த்தைகளுக்காய்
வருந்தப் போவதேயில்லை நண்பா!!
"வெறும்" முப்பதாண்டுக் கனவு" கலைந்ததற்காய்
முறைக்கவா முடியும் உன்னை- நீ எம் விருந்து!!
தாடி மூடிய என் 'முப்பாட்ட'னொருவன்
"பூ" முகமாய் "நின்முகம்" பார்க்கவென்று
சொன்ன வரிகள் அடிக்கடி உறுத்தியதே?
........."மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து,
..............................."
நாம் தமிழரடா தோழா!!

-அரிதவன்

## அனுபவிக்க முடியவில்லை

அகவு அறுபதைத் தாண்டிட
அனுபவிக்க முடியவில்லை
நோய்வந்து எம்முடலில்
நுளைந்ததுவே நாசூக்காய்

சின்னப்பராயத்தில் எமக்குச்
சின்னச்சின்ன ஆசைகள் எம்மட்டு
ஆதித்தியா கூல்பாரில்
ஐஸ்கீறீம் குடிக்க ஆசை
பட்டுப் பாவாடை கட்டி
பகட்டாய் சுற்றிவர ஆசை
காஞ்சிப் பட்டுடுத்தி
கெட்டிப் பூரான் அட்டியல் கட்டி
கை நிறைய வளையல் போட்டு
கலகலவென்று
கல்யாண வீட்டுக்குப் போக ஆசை
மகிழ் ஊர்திபிடித்து -நாம்
மகிழ்ந்து சுற்றுலாப் போக ஆசை
அத்தனை ஆசையும் உதிர்ந்து போனதேன்?
உதிர்ந்து போனதேன்?

பாழாய்ப்போன
பணப் பிரச்சினைதான்
வயோதிபம் தலை காட்ட
வசதி வந்தென்ன பயன்?
குளிர்சாதனப் பெட்டியில்
குவளையில் ஐஸ்கீறிம்
குடிக்க முடியவில்லை
அலுமாரியில் பட்டுச் சேலை
அனுபவிக்க மனமில்லை
கட்டிப் பூட்ட நகையிருந்தும்
கள்ளர் பயம் விடுவதில்லை

சுவையான இனிப்புப்பண்டங்களைச்
சுவைக்க முடியவில்லை
சுற்றுலாவுக்கு வெளிக்கிட்டால்
சுழற்றி விழுத்துகிறது கால்கள்
உண்மையைச் சொன்னால்
வசதி வந்தது
வைத்தியச் செலவுக்கே

சாந்தா குகதாசன்.

## அன்னை



ஈரைந்து மாதங்கள் என்னைச் சுமந்து
ஈன்றிட்ட என் அன்னையே- எனை
ஆரத்தழுவியே அணைத்திடும் உந்தன்
அன்புக்கு நிகரில்லையே!
பாலாக்கி உதிரத்தைப் பருகிடத் தந்து
பாசத்தை ஊட்டிய அன்னையே - எனை
ஆளாக்க நீயும் அடைந்திட்ட துன்பம்
அளவில்லை, அளவில்லையே!

தோள்மீது தாலாட்டித் துயின்றிட வைத்திடும்
தூய தாய் அன்புக்கு நிகரில்லை
நாள்தோறும் என்னை நலமாக வளர்த்திட்ட
நல்ல தாய் அன்புக்கு ஈடில்லை
பாடல்கள் சொல்லியே பற்றுற வளர்த்திட்ட
பாசத்தாய் அன்புக்கு நிகரில்லை- முகம்
வாடல் கண்டுவிடில் வருந்தித் துடித்திடும்
வாகான தாயன்புக் கீடில்லை.

ஆயிரங் கனவுகள் அகந்தனிற் சுமந்து- எனை
ஆசையாய் ஈன்றிட்ட அன்னையே!
தாயினிற் சிறந்த தாயாகி என்னைத்
தரமாக வளர்த்திட்ட அன்னையே - இந்தப்
பூமியில் உன்னைப் போலன்பு காட்டும்
புனிதமே யாருக்கும் இல்லையே- எந்தச்
சாமியும் உனக்குச் சரி நிகர் ஆகார்
சரித்திரம் உன் புகழ் சொல்லுமே!

போ.ஆன் பொளசிகா, கலைப்பிரிவு-2012,
யா/புனித திரேசாஸ் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.

## அன்பென்பது.....!

உயிர்வரை விழுதெறிந்து
விருட்சமாய்ப் பரவி
மூச்சாக என்றும்
எம்முள்ளே வாழும்
உணர்வொன்றே அன்பு...
நீ
பிழை செய்யும் போது
பொறுக்காது தடுக்கும்
புன்னகை மலர்த்தி
உன்னைப் பூவாக அணைக்கும்
நீ
கொடுஞ் சொற்கள் கோர்த்து
வெஞ்சினத்தை விரித்தாலும்
பாலமென அமைந்து
உனக்குப் பாதை செய்து
மகிழும்
ஏதும் எதிர்பாராது
எல்லாமும் உவந்து
தனை உயிர் மெழுகாக்கி
உருகும்
காயங்கள் சுமந்தாலும்
காலங்கள் கடந்தாலும்
மாறாத உணர்வாய்
என்றும் வாழுவதே அன்பு...
தினம் மாறும்
திகதியதாய்
உருமாறிக் கொள்வதல்ல
அன்பு.....
குறையாத நீரூற்றாய்
கொடை செய்யும் உணர்வே
அன்பு...
கோடி முறை கும்பிட்டு
காசு பணம் ஈந்து
நீ
கையசைத்தால் வருவதல்ல
அன்பு....
ஓடி விடு எங்காவது-நீ
நாடி இனி வரவேண்டாம் என்று
கோபங்கொண்டு வதைத்தாலும்
குன்றாத சூரியனாய்
தேடி வந்து ஒளிக்கீற்றாய்
உன்னைத் தீண்டி மகிழ்வூட்டும்
உறவே அன்பு...
நீ
புறந்தள்ளிப் புறப்பட்டால்
வெறுத்துமிழ்ந்து போவதல்ல
அன்பு
நிஜமாக இருந்தும்
உன் நிழலாக என்றும் தொடரும்
நிறை நிலவே அன்பு.......

பொன்நிலவன், மீசாலை

## உன்னை அறியேன்

வாய் மொழிந்த வார்த்தையினால்
வாழ்க்கை இழந்தேன்
பூசிக்கொண்ட பூச்சுகளினால்
புன்னகை இழந்தேன்
பிரியமே இல்லா உன்னை
பிரியமானவள் என்றேன்
அரிதாரம் பூசாமல் அசத்தும்
உன்னை அன்பானவள் என்றேன்
வெட்கமே இல்லா உன்னை
சொர்க்கமே என்றேன்
பெண்மையே இல்லா உன்னை
செல்லமே என்றேன்
பாசமே இல்லா உன்னை
தேவதை என்றேன்
ஏமாற்றிப் பிழைக்கும் உன்னை
என்னவள் என்றேன்
வீணாக்கிப் போனவளே விடை தருவாள் என்று
கேள்விக்குறியாய் வளைந்திருக்கேன்
இன்றும்.......

செ.சுசி,
குப்பிளான்.

## நிம்மதி

காய்ந்து போன
சருகுகளின் அடியில்
குப்பைக்குள் குதூகலமாய்
குடித்தனம் நடத்துகிறதே
எறும்புக் கூட்டம்....!
எளிமையாய்த் தன் வாழ்வை
அச்சமின்றித் தினமும்
நடத்திச் சென்றே
ஒய்யார வாழ்வினை
ஒற்றுமையாய்க் கழிக்கிறதே
குப்பைக்குள்!
சருகுகளில் மானிடச் சுவடு
ஒட்டாதது[illegible]



[illegible], நெல்லியடி.

## மனம் தளராதே!

இன்ப துன்பம்
வாழ்வில் சகஜம்
துன்பத்தைத் துணிவோடு
ஏற்பதே மனிதம்

மனை சாய்ந்தாலும்
மனம் சாயாமல் பார்த்துக்கொள்
உடைமை போனாலும்
உளம் தளராமல் பார்த்துக்கொள்

வளம் சிதைந்தாலும்
வாழ்க்கை உண்டென்று நம்பு

மனிதனால் முடியாதது
எதுவுமில்லை
மாற்ற முடியாதது
எதுவுமில்லை

கலங்கும் கண்ணீரைத்
துடைத்து எறி
துக்கத்தைத் தூரப்போடு
துணிந்தால் துயரமில்லை
விடிவுண்டு என்று நம்பு

S.மல்லிகா, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை பிறந்ததால் வழி திறக்குமா...?

**தமிழர் நிலப்பரப்பானது குமரிக் கண்டமெங்கும் பரவி விரிந்திருந்த காலமுதலே இவ்வழக்கம் நடைமுறையிலிருந்து வந்தது என்பதனைப் பின்னாளில் தனித் தமிழர் இயக்கத் தலைவர் மறைமலை அடிகளாரும் 500 இற்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்களும் புலவர்களும் வரலாற்றறிஞர்களும் ஒன்றுகூடி விவாதித்துத் தை முதலாம் நாளே தமிழ்ப் புத்தாண்டு தினம் என 1921 ஆம் ஆண்டில் அறிவித்தனர். இதற்கான தமிழக அரசின் அங்கீகாரம் 1971 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது.**

பூவுலகில் காலத்துக்குக் காலம் பல மகான்களும் ஞானிகளும் பிறப்பெடுத்து பல கோடிக்கணக்கான மக்களுக்கு நல்வழி காட்டியுள்ளனர். இவர்கள் அனைவரும் மக்களை மாற்றி, சீர்திருத்தி ஏற்கனவே உள்ள நிலைமையிலிருந்து மேலான ஒரு நிலையை உருவாக்க முயற்சித்துள்ளனர். எங்கெங்கே பழைய வழக்கங்கள் தவறான வழியில் சென்று எதிர்கால வளர்ச்சியைத் தடுத்து நின்றதோ அங்கெல்லாம் அவர்கள் அவதாரம் எடுத்து மக்களின் மீட்சிக்காக அயராது உழைத்தார்கள். இந்த உலகில் அவர்கள் நடத்திய உயரிய வாழ்க்கை முறை தலைமுறை தலைமுறையாகப் பல கோடிக் கணக்கான மக்களுக்கு உந்து சக்தியாக அமைந்துவிடுகின்றது.

இந்தியாவில் தோன்றிய புத்த பகவான், மகாவீரர்; சீனாவின் கன்பூஷியஸ், லௌ-ட்சே; பாரசீகத்தின் ஜோராஸ்டர், முகமது நபி என்போர் அவ்வகையில் தம் போதனைகள் மூலம் சாதனைகளை நிலைநாட்டிய அவதார புருஷர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

ஏரோது ராஜாவின் ஆட்சிக் காலத்தில் ரோம ராஜ்ஜியம் முழுவதற்கும் பரவி பல்வேறு துன்பங்களுக்கு ஆட்பட்டிருந்த யூதர்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க இற்றைக்கு 2010 ஆண்டுகளுக்கு முன்னர் இயேசுநாதர் பெத்தலகேமிலுள்ள ஒரு மாட்டுத் தொழுவத்தில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மானுட குலத்தின் மீட்சிக்காக அவதாரமெடுத்தமையும் அவ்வாறான நிகழ்வுகளுள் ஒன்றே. யூதர்கள் தமக்கென ஒரு நாடில்லாது, புகலிடமற்று, அளவிடற்கரிய துன்பங்களுக்கு ஆட்பட்டு, மரணங்களுக்குட்பட்டுங்கூட தங்களது ஒற்றுமையின் வலிமையாலும் செயற்றிறனாலும் தம் சிறப்பியல்பை இழக்காமல் 2000 ஆண்டுகள் கடந்த நிலையில் தமக்கென ஒரு தேசத்தை அமைத்துக் கொண்டமை உலக வரலாற்றின் விந்தைமிகு நிகழ்வுகளில் ஒன்றாகும்.

சுவிசேஷங்களில் கூறப்பட்டுள்ளவாறு இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டதன்பின்னர்; அதுவரை பலஸ்தீனத்திற்கு வெளியே வெளிக்கிளம்பாதிருந்த இவரது கீர்த்தி உலகெங்கணும் பரவத் தொடங்கிற்று. பல்லாயிரக் கணக்கில் மக்கள் இயேசுவை வணங்க, அவரின் போதனைகளைப் பின்பற்ற ஆரம்பித்தனர். இதனைத் தொடர்ந்து கிறிஸ்தவ மதம் உலக அளவில் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. பாலன் பிறப்பு (நத்தார்) அதனைத் தொடர்ந்து எட்டாவது நாள் ஜனவரி 01 புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் என்பன பின்னாளில் அவரது கோட்பாடுகளைப் பின்பற்றியவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டன. அந்த வகையில் கிறிஸ்துவின் பிறப்பிற்கு பிற்பட்ட காலத்தை நாம் கி.பி. எனவும் (கிறிஸ்து பிறந்த பின்வரும் 2011 ஆம் ஆண்டின் தொடக்க நாளே இன்றைய புத்தாண்டாகும்) கிறிஸ்துவின் பிறப்பிற்கு முற்பட்ட காலத்தை கி.மு எனவும் அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

ஏவ்வாறாயினும் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றமையையும் வரலாற்று வாயிலாக அறியமுடிகின்றது. கி.மு 600 இல் பண்டைய எகிப்தில் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இக்காலத்தில் இங்கு புத்தாண்டு பிறக்கும்போது குழந்தைகளைக் கூடையில் இட்டு பொது இடத்தில் வைத்து கடவுளை வழிபட்டுள்ளனர்.

உலகின் பல்வேறு இனங்கள் இவ்வாறே பல்வேறு விதமாக, வேறுபட்ட தினங்களில் புத்தாண்டைக் கொண்டாடும் நிலைமைகளை இன்றும் காணலாம். அந்த வகையில் இயற்கை வழிபாட்டுக்கு முக்கியத்துவம் தந்த தமிழர்கள்; இயற்கையின் காலநிலையைக் கணக்கிட்டு; அதில் துவக்கப்பருவமான இளவேனில் காலத்தில் வரும் தை மாதத்தின் முதல் நாளை உத்தராணய காலத்தின் தொடக்க வேளையை புதிய ஆண்டின் தொடக்கமாக வகுத்தனர். அந்த நாளின் உதய வேளையில் புதிய அரிசியை புதிய பானையில் இட்டுப் பொங்கலிட்டு இயற்கை தெய்வமாகவும் உலகை இயக்கும் சக்தியாகவும் விளங்கும் சூரியனுக்குப் படையலிட்டு புதிய ஆண்டின்தொடக் கத்தைத் தொன்று தொட்டுக் கொண் டாடி வருகின்றனர்.

தமிழர் நிலப்பரப்பானது குமரிக் கண்ட மெங்கும் பரவி விரிந்திருந்த காலம் முதலே இவ்வழக்கம் நடைமுறையிலிருந்து வந்தது என்பதனைப் பின்னாளில் தனித்தமிழர் இயக்கத் தலைவர் மறைமலை அடிகளாரும் 500 இற்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்களும், புலவர்களும், வரலாற்றறிஞர்களும் ஒன்று கூடி விவாதித்து தை 1 ஆம் நாளே தமிழ்ப் புத்தாண்டு தினம் என 1921 இல் அறிவித்தனர். இதற்கான தமிழக அரசின் அங்கீகாரம் 1971 இல் வழங்கப்பட்டிருந்தது.

அன்றிலிருந்து தமிழர்களின் ஆண்டு என்பது திருவள்ளுவரின் பிறப்பை மையப்படுத்திக் கணிக்கப்பட்டு, வருகின்றது. திருவள்ளுவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்கு 31 ஆண்டுகள் காலத்தால் முந்தியவர் என்பது வரலாற்றாய்வாளர்களின் முடிவாகும். தமிழக அரசின் அனைத்து ஆவணங்களிலும் திருவள்ளுவரின் ஆண்டும், தை முதல் நாளை மையப்படுத்திய புத்தாண்டு முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தை முதல் தமிழக அரசின் ஆணையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றிய இங்கிலாந்து தேசமானது சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியமாக உலகெங்கும் பரந்து தன் மதமாகிய கிறிஸ்தவத்தையும் ஆங்கில மொழியையும் பரப்பியதன் விளைவாக பல்வேறு கலாசாரப் பின்னணிகளைக் கொண்டு கரைகடந்த தேசங்களிலுள்ள மக்களால் ஜனவரி முதல் நாளைப் புத்தாண்டு தினமாகக் கொண்டாடும் ஒரு பொது வழக்கம் ஏற்பட்டு நடைமுறையிலிருந்து வருகின்றது. பிரமாண்டமான வாண வேடிக்கைகளுடனும், பட்டாசு வெடியோசைகளுடனும் மரியாதை வேட்டுக்களுடனும் புத்தாண்டு இன்று உலக மக்களால் வரவேற்கப்படுகின்றது. தமது அகத்தையும் புறத்தையும் தூய்மைப்படுத்தியவர்களாக புத்தாடைகள் புனைந்து புதிய நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகளுடன் இறைவனைத்தியானிக்கும் உன்னத கடமையில் அவர்கள் ஈடுபடுகின்றனர். நிலையான அமைதியும், சமாதானமும் பொருளாதார சுபீட்சமும் ஏற்பட்டுவிட வேண்டுமென்பதில் பெரும் எதிர்பார்ப்பு அவர்களிடம் காணப்படுகின்றது.



காலாவாரியாக வேறுபட்ட பிராந்தியங்களைச் சேர்ந்தவர்கள் தமது மரபுகள், நம்பிக்கைளுக்கு ஏற்றவகையில் இத்தினத்தைக் கொண்டாடி வருகின்றமையை வரலாற்று வாயிலாக அவதானிக்க முடியும். கொலம்பிய தேசத்தில் ஒவ்வொரு குடும்பத்தவரும் பழைய துணிகள் தமக்கு வேண்டாத பொருள்கள் என்பவற்றினால் பொம்மைகளைத் தயாரித்து டிசெம்பர் 31 ஆம் திகதி நள்ளிரவில் எல்லோரும் குழுக்கள் குழுக்களாகப் பொது இடங்களில் ஒன்றுகூடி அப்பொம்மைகளை எரியூட்டுகின்றனர். இதன் மூலம் தங்களைச் சுற்றியுள்ள தீயசக்திகள் எரிந்து சாம்பலாகின்றது என அவர்கள் நம்புகின்றனர். இதன் மூலம் தமது மனதைத் தூய்மைப்படுத்தி புதிய ஒளி மிகுந்த நம்பிக்கைகளை ஆண்டில் பெறுகின்றனர்.

ஸ்பெய்னில் நள்ளிரவில் 12 திராட்சைப் பழங்ளை உண்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இப்படிச் செய்வதால் புத்தாண்டில் வேளாண்மை சிறக்கும் செழிக்கும் என்பது அவர்களது நம்பிக்கை.

உலகின் பௌத்த நாடுகளிலொன்றான ஜப்பானில் டிசெம்பர் 31 ஆம் திகதி நள்ளிரவில் புத்த கோயிலில் 108 முறை மணியடிக்கும்போது அம்மணியொலியைக் கேட்டுக்கொண்டே தோஷி கோஷி சோபா என்னும் நூடில்ஸை உண்கின்றனர். இதனால் தமது ஆத்மா சுத்தமாகின்றது என்று இவர்கள் நம்புகின்றனர்.

வெனிசுவெலா, ஆர்ஜென்ரீனா, [illegible], மெக்சிக்கோ ஆகிய தென்னா[illegible] நாடுகளில் வீடுகளைச் சுற்றிப் பெட்டிகளைச் சுமந்து செல்கின்றனர். இவ்வாறு செய்வதனால் புதிய ஆண்டில் அப்பெட்டிக்குள் பணம் நிறைந்து தாம் செல்வச் செழிப்புள்ளவர்களாக மாறுவரென்பதில் உறுதியாக உள்ளனர்.

இலங்கையின் வட.கிழக்குப் பகுதிகளில் பெரும்பான்மையினராகச் செறிந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் பல்வேறு விதமான நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகள் இருந்து வருகின்றன. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது இவர்களது தளராத நம்பிக்கையாக இருந்து வருகின்றது. இதற்கென ஒவ்வொரு தை மாதத்திற்காகவும் காத்திருந்து அதனை வரவேற்கின்றனர். இருந்தபோதிலும் ஆண்டு தோறும் விரக்தியையும், வேதனைகளையும், ஏமாற்றங்களையும், துன்பங்களையும், அழிவுகளையும், இழப்புக்களையும் தருவனவாகவே ஒவ்வொரு ஆண்டும் அமைந்து விடுகின்றன.

தற்போது முப்பது ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட புறச் சூழலிலும் இவர்கள் முகம் கொடுக்கும் சவால்களும் புதுமெருகூட்டப்பட்டவையாகவே உள்ளன. காணமற்போனவர்களைத் தேடியலைபவர்கள், தடுப்பு முகாம்கள்; சிறைச்சாலைகளில் அல்லல்படுபவர்கள், வீடுகளை; சொத்துக்களை இழந்து நிர்க்கதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள், உடல் ஊனங்களை பெரியளவில் சுமந்தவர்கள் என யுத்தத்தின் அவலங்களைத் தாங்கியபடி புதிய தசாப்தமொன்றின் தொடக்க ஆண்டை எதிர்கொள்கின்றனர்.

**பாலசிங்கம் செவ்வேள்**

புதிய ஆண்டிலே தமது துயரங்களை நீக்கவும்; இங்குள்ள வீதிகளைப் போலவே நொருங்கியுள்ள தமது வாழ்வியலில் புதுமெருகேற்றவும்; நாளாந்தம் அச்சுறுத்தும் கொள்ளைகள், கொலைகள், கடத்தல்கள் நீங்கிய அச்சமற்ற சூழலுக்கு வழிதிறக்கவும் எல்லாவற்றிற்கு மேலாக தொலைந்து போகும் தமது இருப்பை உறுதிப்படுத்தவும் ஒரு மீட்பர் வந்து சேர்வார் என்பது அவர்களது தளராத; அசைக்க முடியாத நம்பிக்கை. அவனருளினாலே அவர்களின் வாழ்விலும் ஒளியேற்றப்பட்டு, புதியதோர் சமுதாயம் புதிய ஆண்டில் படைக்கப்படட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS இன்றி STUDY IN UK




O/L தகமை போதுமானது

## இறுதி சந்தர்ப்பம்

**ONLY 30 SEATS ARE AVAILABLE**

உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்!!!!

**DEC/JAN** மாதங்களில் விசா கிடைத்து பயணமான யாழ் மாணவர்களில் சிலர்



பதிவுகளுக்கு **COLOMBO - 0117 555511, JAFFNA - 021 7538395**
**HOTLINE - 0117 555514, FAX - 0117 555517**

விசா நடைமுறைகளுக்கு முன்னரும் பின்னரும் எவ்விதகட்டணங்களும் அறவிடப்படமாட்டாது*

**எமது சேவை முற்றிலும் இலவசமானது**

*Condition Apply

EXPONET
Overseas Consultants

Head office -
379-1/2, Galle Road,
Colombo 6, Sri Lanka.

Jaffna Branch -
102 2/2, Navalar Road,
Jaffna.

London Branch -
No:56,The Gradens
Harrow Middlessex
Ha1 4EY,UK

www... Email: nimal@expogroup.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழில் முயற்சியாளர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் வர்த்தகக் கண்காட்சி

JAFFNA International 2011 TRADE FAIR
உதயன்
ஊடக அனுசரணை



உதயன் ஊடக அனுசரணையுடன் இடம்பெறும் யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு என மக்கள் படையெடுத்துச் செல்வதைக் காணமுடிகிறது.

வியாபாரத்துக்கான உங்கள் நுழைவாயில் என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிய இந்தக் கண்காட்சியைக் காண்பதற்காக கடந்த இரண்டு தினங்களும் பதின்நான்காயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டதாக கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு கண்காட்சி நிகழ்விடத்தை நோக்கி மக்கள் படையெடுப்பதன் காரணமாகப் பிரதான வீதி சுப்பிரமணியம் பூங்காவை அண்மித்த பகுதிகள் விழாக் கோலம் பூண்டது போலக் காட்சியளிக்கின்றது. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் முயற்சியாளர்கள், பொதுமக்கள் என தினமும்




பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது.

மிகவும் நேர்த்தியான முறையில் அலங்கரிக்கப்பட்ட காட்சியறைகள் 250 இற்கும் அதிகமானவையை காணமுடிகிறது.

### இந்தியாவின் முன்னணி நிறுவனங்கள் பங்கேற்பு

இந்திய, கேரள மாநில காட்சியறைகள், இந்திய என்.எஸ்.ஐ.சி. என்ற பிரபல கூட்டு நிறுவனத்தின் காட்சியறைகள், தென்னிலங்கையின் முன்னணிக் கம்பனிகள், நிறுவனங்கள் ஆகியவற்றினது காட்சியறை மற்றும் வடபகுதி தொழில் முயற்சியாளர்களது காட்சியறைகள் என அவை வேறுபடுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன.

தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவரும் விளம்பரங்களில் பார்த்த நிறுவனங்கள் தொடர்பான விடயங்களை நேரில் அவதானிக்கக் கூயதாக இந்தியாவின் முன்னணி நிறுவனங்கள் தமது காட்சியறைகளைக் கொண்டிருக்கின்றன. ரி.வி.எஸ், மாருதி உள்ளிட்ட வாகன உற்பத்தி நிறுவனங்களது காட்சியறைகள் காணப்படுகின்றன. அவற்றினைப் பெருமளவான மக்கள் பார்வையிட்டு விவரங்களை அறிவதனையும் காணக்கூடியதாக இருந்தது. இதேபோல இந்தோனேசியாவின் காட்சியறைகள் இரண்டு காணப்படுகின்றன.

அவற்றில் உடுபுடைவைகள், காலணிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் அங்கு காட்சிப் படுத்தப்பட்டு விற்பனை செய்ய்யப்பட்டு வருகிறன.

அதேபோல கனடா அமெரிக்கா, உள்ளிட்ட நாடுகளின் தூதரக காட்சியறைகளையும் எனவும் காணமுடிந்தது. கனடா தூதரக காட்சியறையில் அரிசி, பருப்பு, பயறு உள்ளிட்ட சத் துணவுகள் பொதி செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு நிகராக தென்னிலங்கை கம்பனிகளதும் நிறுவனங்களதும் காட்சியறைகளை அவதானிக்க முடிந்தது. இரு நூற்றுக்கும் மேற்பட்ட காட்சியறைகளைக் கொண்டுள்ள இவை தமது உற்பத்திப் பொருள்களையும் விற்பனைப் பொருள்களையும் மக்களிடம் அறிமுகப் படுத்து வதிலும் விற்பனை செய்வதிலும் மிக ஆர்வமாக இருத்தன.

காட்சியறைகள் ஒவ்வொன்றையும் ஆர்வத்துடன் பார்வையிடுவதில் பொது மக்கள் அதிக நேரத்தைச் செலவிட்டதனையும் அவதானிக்க முடிந்தது.

### 10 வீத விலைக்கழிவுடன் விற்பனை

பெரும்பாலான நிறுவனங்கள் பத்து வீத விலைக்கழிவுடன் தமது பொருள்களை விற்பனை செய்து வருகின்றன. அத்துடன் ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசமாக வழங்கியும் வருகின்றனர். அத்துடன் அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக் குலுக்கி தெரிவு செய்யப் படுபவர்களுக்கு பெறுமதியான பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஹேலிஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நவீன இயந்திரங்களை இறக்குமதி செய்து காட்சிப்படுத்தியுள்ளன. குறிப்பாக அங்கு நெல் அறுவடை செய்து பொதியிடக்கூடிய ஜப்பான் நாட்டுத் தயாரிப்பான நவீனரக இயந்திரம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அதன் பெறுமதி 39 இலட்சம் ரூபா என குறிப்பிடப்பட்டுள்ளது.

முக ஒப்பனையை இலவசமாக மேற்கொண்டு வரும் காட்சியறை ஒன்றில் அதிகளவிலான பெண்கள் காத்திருந்து தமது முக அழகை மேலும் மெருகூட்டிக் கொள்வதனையும் அவதானிக்க முடிந்தது.

உயர் கல்வித் [illegible] மாணவர்களின் நலன் [illegible] காட்சியறைகள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 12 இற்கும் மேற்பட்ட தென்னிலங்கை நிறுவனங்கள் இவ்வாறு தமது காட்சியறைகளைக் கொண்டிருக்கின்றன.

அதேபோல இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம், நுகர்வோர் அதிகார சபை, இலங்கை ஏற்றுமதி சபை உள்ளிட்ட நிறுவனங்களும் பங்கேற்றிருந்தன.

வடபகுதி தொழில் முயற்சியாளர்களது காட்சியறைகள் பன்னிரண்டு அங்கு காணமுடிந்தது.

மாடிப்படிகள் ஏறிக் கண்காட்சியைக் காணவேண்டிய தேவை அங்கு இல்லாததன் காரணமாக வயது முதிர்ந்தவர்களும் நோயாளர்களும் அதிகளவில் கண்காட்சியில் பங்கேற்க முடிந்தது. உலகில் மூலை முடுக்குகளிலுள்ள தொழில் நுட்ப மற்றும் இயந்திர சாதனங்களை ஒரே வளாகத்தில் அறிமுகப்படுத்திய சிறப்பு இந்தக் கண்காட்சிக்குரியதாகும். கண்காட்சி நிகழ்விடத்திலுள்ள காட்சியறைகளைக் காண்பதற்கு நான்கு மணி நேரத்துக்கும் அதிகமான பொழுதை செலவழிக்க வேண்டியுள்ளதாக பொது மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இது போன்ற பயனுடைய மாபெரும் கண்காட்சி நிகழ்வுகள் தொடர்ந்தும் வருடா வருடம் நடத்த வேண்டும். அவை மூலம் எமது பகுதி தொழில் முயற்சியாளர்கள் பயனடையக் கூடியதாக



இருக்கும். குறைந்த பட்சம் ஐந்து தினங்களாவது இந்தக் கண்காட்சி இடம் பெற வேண்டும் எனவும் பொது மக்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

விவசாயம், உணவு பதனிடுதல், பொதியிடுதல் கட்டுமானத் துறை, மீன்பிடி, தகவல் தொழில் நுட்பம், சுற்றுலாத்துறை, மோட்டார் உபகரணங்கள், அழகுக்கலை, வங்கிச்சேவை, கல்வித் துறை ஆகியனவற்றை இந்தக் கண்காட்சி கொண்டிருந்தன.

இந்த மாபெரும் கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் புதிய முதலீட்டுக்கான வழிவகைகளைக் கண்டுகொள்ள முடியும். இதன் மூலம் வடபகுதி தொழில் முயற்சியாளர்கள் பயனடையக் கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிடுகிறார் யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவர் கே. பூரணச்சந்திரன்

### இன்றுடன் கண்காட்சி நிறைவு காண்கிறது

பல் வகைப்பட்ட காட்சியறைகள், பொழுதுபோக்கு அம்சங்கள், இன்னிசைக் கச்சேரிகள், மிகப்பயனுடைய கருத்தரங்குகளைக் கொண்டிருந்த இந்த மாபெரும் கண்காட்சி இன்றுடன் நிறைவு காண்கிறது.

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றமும் வரையறுக்கப்பட்ட இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த கண்காட்சி நிகழ்வை இன்றும் ஆயிரக்கணக்கான மக்கள் பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.



உதயன் ஊடக அனுசரணையுடன் இடம் பெற்று வரும் இந்தக் கண்காட்சி வடபகுதியின் அபிவிருத்திப் பாதைக்கான நுழைவாயிலாக இருக்கும் எனக் கருத முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 147

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| | ■ | 10 | | | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | ■ | 14 |
| ■ | | ■ | 15 | | ■ | 16 | |
| 17 | | 18 | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | ■ | |
| | ■ | 22 | | | | | |

அனுப்புபவர் பெயர்:................................................

விலாசம்:................................................

................................................

கையொப்பம்:................................................

### இடமிருந்து வலம்

1. சீதையை மணக்க இராமன் முறித்த வில்
5. பெரியோர் தரும் வாழ்த்து
7.நஞ்சு
8. கோமாதாவைக் கொல்வதை இப்படிச் சொல்வர்.
10.கனிதல்
11. புகழ்,கீர்த்தி, பெருமைக்கு இப்படியும் ஒரு சொல் உண்டு.
13. சாப்பிடு
15.மூப்புக்கு முன்னறிவிப்பது.
16. தூங்கு/துயில்கொள்.
17. முகத்துக்கு நேரே செய்யும் உபசாரம்.
19. களம்/இடம்/தளம்.
20. அணி/குழு
21. போன்று
22.கருங்கல் (கடவுள்) சிலை.

### மேலிருந்து கீழ்

1. உயர்ந்த மிருகம்.
2.ஒரு திசை.
3.கணவன்/மனைவி
4.அர்ஜுனன் மனைவி. அபிமன்யுவின் தாய்.
5.அவா.
6.பிரேதத்தை எரிக்க அடுக்கியுள்ள விறகுக் கும்பி.
9. மகன்.
14.சமூகத்தில் தனி ஆளுக்கு அடுத்த தனி அலகு.
15. நல்ல
16. சில அல்ல.
17.(கூரையின்/மலையின்) உச்சி.
18.இல்லாள்.
19.விடிய
20. இந்தியாவில் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 145இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)அருந்தப்பு. (6)மது. (7)தவிர. (9)பத்தொன்பது. (11)வசந்தன்.(13)திரிதல். (14)கம்பு. (16)பால். (17)எடை.(18) சாதி. (19) வழி. (20) உதி. (21)குடல்வளரி

### மேலிருந்து கீழ்

(1)அமராவதி. (2)ருத. (3)தரித்தல். (4)புதன். (5)யாரது(8)விவரம் (9)பந்தல். (10)தொன். (12)சரிபாதி. (14)கடை. (15)புத்திரி.(17)எழில். (18)சாவி. (19)வட. (20)உள.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 144 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **யேசுநேசன் மரியதர்ஷினி,** சென்.தோமஸ் ஒழுங்கை, பருத்தித்துறை.

**2 ஆம் பரிசு** — **அ-பூதத்தம்பி,** அம்மன்வீதி, துணுக்காய்.

**3 ஆம் பரிசு** — **சு-கோகிலா,** தேசிய கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை, மானிப்பாய்.

**4 ஆம் பரிசு** — **ர-சசிகலா,** 131, இரத்தினபுரம், கிளிநொச்சி.

**5 ஆம் பரிசு** — **K.க்ராஞ் சீலன்,** 127, இராமலிங்கம் வீதி, முடமாவடி, நல்லூர்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **வி.சதுபானன்,**
மானிப்பாய் வீதி, கைதடி மேற்கு, கைதடி.

(2) **ச.விபுலன்,**
கற்குளி வடக்கு,
சாவகச்சேரி

(3) **செல்வன் த.பிரகலாதன்,**
இரண்டாம் ஆண்டு கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*

*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*

*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*

*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*

*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*

*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 147**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 02.02.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.147 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 06.02.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# அந்த நாளுக்காக.....

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

என்று அவள் சொல்ல, அம்மாவும் சித்தியை ஏதோ சமாளித்து விடப் பார்த்தா- ஆனால் வந்தவர்களோ

''என்னம்மா...நீங்கள் ! உள்ளூரிலை மாப்பிளை சரி வர வேணுமே இந்தப் பொருத்தம் எப்படி?

இது வெளிநாடு தான்- பாருங்கோவன்'' என்று சொல்லியபடி அவளருகே ஒரு படத்தை நீட்டிய போது அதனைப் பார்த்த அவளால் கோபத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

''எனக்கு உள்ளூரும் வேண்டாம், வெளியூரும் வேண்டாம் இவனுக்கு அங்கை எத்தினை மனிசி என்று தெரியுமே?'' என்று சொல்லிச் சத்தமிட்டாள்.

வந்தவர் கோபத்துடன் அவளைப் பார்த்தார் ''சரி...எனக்கென்ன....'' என்று அலட்சியமாக நீண்ட அவரது வார்த்தைகளை முழுவதுமாய்க் கேட்காமலே அவள் ஓடிச் சென்று கட்டிலில் விழுந்தாள். அப்படிப் பேசியிருக்கக் கூடாது தான் . ஆனால் அந்த நேரத்தில் அவளுக்கு வந்த கோபத்தை அவளால் கட்டுப்படுத்த இயலவில்லை. இதற்குப் பின்னர் சில நாள்களாக அவர்கள் பெண்கேட்டு வராவிட்டாலும் மீண்டும் இப்பொழுது லண்டன், கனடா மாப்பிள்ளைகள் எனச் சொல்லிக் கொண்டு பலரது வர்ணப் படங்களைக் கொண்டு வருவது வழமையாகிப் போனது. வீட்டாரின் புரிதல் என்பது ஓரளவு இருந்ததால் இவளும் இப்போதைக்குக் கல்யாணம் வேண்டாம் என்ற கருத்தையே மனதில் பதித்திருந்தாள். ஆனால் மற்றையோர் அவளைத் தவறாகக் கருதுவதாகவே அவளுக்குத் தெரிந்தது.

''இவவுக்கும் பெரிய நினைப்புத்தான் என்ரை மகனின்ரை பிரென்ட் தேனுசன் நல்ல பெடியன், லண்டனிலை இருக்கிறான். அவனைப் பொருத்தம் பார்க்க வேண்டாமாம். இந்தக் காலப் பெட்டையள் நல்ல துணிச்சல்காரியள்தான் நாங்களெல்லாம் முந்தி என்ன இப்பிடியோ?'' என்பதுவாய்ப் பேசும் சிலரது வார்த்தைகள் இவளின் காதுகளிலும் விழுந்தன.

''ஏன் எதுவும் இப்ப வேண்டாமாம்? யாரையேன் பாத்து வச்சிருக்கிறாளோ? ஆருக்குத் தெரியும் நாலுவருசப் படிப்பெல்லே, அவ ஸ்ரைலா வெளிக்கிட்டு போகேக்கையே நினைச்சனான் ஏதும் நடக்குமென்று....? கம்பசைப் பற்றித் தெரியாதே?'' கதைகள் கூச்சமின்றிப் பல்வேறு வடிவம் பெற்றுச் சிலரது வாயிலிருந்து வெளிக்கிளம்பக் கேட்ட போது அவள் திகைத்துப் போனாள்.

என்றாவது ஒரு நாள் தன்னவனாகப் போகும் முகமறியா ஒருவனை மட்டுமே மனதார நேசிக்கக் காத்திருக்கும் அவளைப் பார்த்து இப்படிக் கதைக்கிறார்களே.

இவர்களுக்கு பதில் சொல்லலாம் ''நான் அப்பிடிப் பார்த்து வக்கேல்லை, நீங்கள் அப்பிடியோ'' என்றெல்லாம் கேட்கலாம்.ஆனால் அவர்களின் விதண்டாவாதத்தில் தலையிட அவள் விரும்பவில்லை.

படித்து முடிக்கும் முன்பும் படித்து வேலை ஒன்றுமே இல்லாத நிலையிலும் திருமணம் செய்து சிரமப்படுபவர்களை அவள் கண்டிருக்கிறாள். அப்போதேதான் ஒரு வேலையைத் தனதாக்காமல் திருமணம் எனும் சொந்தத்துள் நுழையக் கூடாது எனத் தீர்மானமெடுத்தவள் அவள். அது எல்லாம் இப்படி வெறும் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வோருக்குப் புரியாது தான். அதனால் அவர்கள் மேலும் மேலும் கதைத்தார்கள்- கதைக்கிறார்கள்.

''அவ அம்மாதான் செல்லம் குடுத்து வளத்திட்டா இல்லாட்டி இப்பிடியே பொம்பிளைப் பிள்ளையளை வச்சுக்கொண்டு என்ன செய்யப் போகீனை...'' இப்படி எத்தனையோ வார்த்தைகளை வாய்கூசாமல் கூறினர். அவள் பொறுமையாய் எல்லாவற்றையும் சகித்துத்தான் ஆகவேண்டியிருந்தது. அவள் கையில் ஒரு வேலை மட்டும் வந்துவிட்டால் இவர்களுக்குரிய பதில்களைக் கூறலாம். அந்தப் பொல்லாத வார்த்தைகளுக்குப் பதில் சொல்லும் தைரியம் வேலை மூலம் கிடைத்து விடும். அவளின் உண்மை எண்ணங்கள் வெளிப்படும். அதனால் தானோ என்னவோ எல்லாவற்றிற்குமாய் எல்லாமுமான ஒரு வேலையொன்று கிடைக்குமென நம்பினாள். நம்பிக்கொண்டிருக்கிறாள். ஆனால் வேலை கிடைக்கும் நாள் மட்டும் தாமதித்துக் கொண்டுஅவளிடம் வர ஏனோமுரண்டு பிடிக்கின்றது. ஆனாலும் என்றாவது ஒரு நாள் தனக்குரிய வேலை தன்னைத் தேடிவரும் என்ற நம்பிக்கையில் அவள் காத்திருந்தாள் அந்த நாள் எப்போதென அறியாமலேயே.

***

# கொடை மடமும்....

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

அப்பொழுது மழை முகிலைக் கண்ட ஆண் மயில் ஒன்று, மகிழ்ச்சி காரணமாகத் தனது தோகையை விரித்து ஆடியது கண்டான் பேகன்.

குளிர் மிகுதியால் மயில் நடுங்குகின்றது என எண்ணி, தான் போர்த்திருந்த பொன்னாடையைக் களைந்து அந்தக் கான மயிலுக்குப் போர்த்தினான். மயிலின் குளிரைப் போக்கிய களிப்போடு தனது மாளிகைக்குச் சென்றான்.

இந்தச் செயல் பல புலவர்களால் புகழப் பெற்றிருக்கின்றது. பரணர் என்ற புலவர்,

*''மடத்தகை மாமயில் பனிக்கும் என்றருளிப்*
*படாம் ஈத்த கெடா நல்லிசைக்*
*கடாஅ யானைக் கலிமான் பேக*
*உடாஅ, போரா ஆகுதல் அறிந்தும்*
*படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ''*

*[புறநானூறு]*

என அவனது செயலைப் பாராட்டிப் பாடியுள்ளமை காணலாம். மயில் உடாது, போராது என்பதைப் பேகன் அறியாதவனல்லன். இருந்தும் அருளுறு நெஞ்சத்தால் அதற்கு ஆடை அளித்து அதன் குளிரைப் போக்கக் கருதினான்.

இன்றைய உலகில் யானைக்கும் குதிரைக்கும் வேறு செல்லப்பிராணிகளுக்கும் ஆடை தைத்து அணிவிக்கிறார்களே! அந்தவகையில் பேகனின் செயல் ஒன்றும் நடக்கக் கூடாததல்ல. அந்த அறிமடமும் அவனுக்கு அழகைக் கொடுக்கிறது, புலவர்கள் பாராட்டுகின்றனர். அதனால் சான்றோர் சிறப்புப் பெறுகின்றனர். 'அறிமடமும் சான்றோர்க்கு அணியாக இருப்பதை இலக்கியங்கள் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 5

# மருத்துவத்துறையிலே நோயாளர் உரிமைகள்

தற்போதய காலகட்டத்திலே மனித உரிமைகள் பற்றியும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் அதிகம் பேசப்பட்டு வருகிறன. மேலைத்தேச நாடுகளில் விலங்கு உரிமை பற்றிக்கூட அதிக கரிசனை காட்டப்பட்டு வருகிறது. ஆனால் எமது நாட்டிலே பொது மக்களுக்கு மருத்துவத்துறையிலே தமக்கு இருக்கின்ற அடிப்படை உரிமைகள் பற்றிய அறிவு போதாமல் இருப்பது ஒரு வேதனையான விடயமாகும்.

பொதுமக்களிடமும் மருத்துவத்துறை சார்ந்தவர்களிடமும் இது சம்பந்தமான அறிவு மேம்படும்பொழுது அந்தப் பிரதேசத்தின் சுகாதார நிலை பலவழிகளிலும் மேம்படும். தேவையற்ற மனக்கசப்புகளும் மனக்குழப்ப நிலைகளும் தோன்றுவதற்கு இடம் இருக்காது.

நோயாளர்களின் உரிமை சம்பந்தமான விடயங்களைப் பல தலைப்புகளின் கீழ் ஆராயமுடியும். அவற்றில் முக்கியமான சில விடயங்களை இங்கு பார்ப்போம்.

நோய்நிலை சம்பந்தமான இரகசியத் தன்மை பேணப்படுதல் => 18 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்கள் அனைவரும் தமது சுகாதாரநிலை சம்பந்தமான விடயங்களை வேறு எவருக்கும் தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் உரிமை இருக்கிறது. 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரினதும் சுகாதாரம் சம்பந்தமான விடயங்களை அவரின் விருப்பத்துக்கு மாறாக யாருக்கும் தெரிவிக்கும் உரிமை மருத்துவத்துறை சார்ந்தவர்களுக்கு இல்லை. ஒருவர் தனது பெற்றோருக்கோ, கணவனுக்கோ, மனைவிக்கோ, பிள்ளைகளுக்கோ கூடத் தனது நோய்நிலை சம்பந்தமான விடயங்களை தெரிவிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் உரிமை இருக்கிறது. அந்த இரகசியத் தன்மையைப் பாதுகாக்கும் கடமை மருத்துவத்துறையினருக்கு இருக்கிறது.

வைத்தியசாலையிலே தனிப்பட்ட முறையில் வைத்தியரிடம் ஒரு நோயாளி பேச விருப்பப்பட்டால் அதற்கான சந்தர்ப்பத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளும் உரிமை நோயாளிக்கு இருக்கின்றது. வைத்தியசாலைகளில் ஆளணி பற்றாக்குறை நீங்கி கட்டட வசதிகளும் மேம்படும் பொழுது ஒவ்வொரு நோயாளியுடனும் மருத்துவக்குழு தனித்தனி அறையிலே உரையாடும் நிலை ஏற்படுத்தப் படவேண்டும்.

ஒரு நோயாளியினுடைய நோய் சம்பந்தப்பட்ட விடயம் ஒரு பொது விடயம் அல்ல பலரும் பேசி ஆராய்வதற்கு. இது ஒரு செய்தி அல்ல பத்திரிகையில் பிரசுரித்து அம்பலப்படுத்துவதற்கு. துயரமான விடயமல்ல பலரும்போய் துக்கம் விசாரிப்பதற்கு. ஒரு புதினம் அல்ல பலரும் போய் விடுப்பு கேட்பதற்கு. இது அந்த நோயாளி மட்டும் சம்பந்தப்பட்ட ஓர் உணர்வுபூர்வமான அந்தரங்க விடயம். அதனை அவரின் அனுமதியின்றி அறியத்தெண்டிப்பதோ, அம்பலப்படுத்துவதோ நல்லதல்ல என்பதை மனதில் நிறுத்துவோம்.

Dr.சி.சிவன்சுதன்,
*வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை*

தமது நோய்நிலை அம்பலப்படுத்தப் பட்டுவிடும் என்று அஞ்சி, பலர் தமது நோய் நிலையின் உண்மையான வடிவத்தை மருத்துவரிடம் வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். இதனால் பல பாரதூரமான விளைவுகளும் ஏன் இறப்புகளும்கூட ஏற்படுகிறது. இந்த நிலை மாற்றம்பெற வேண்டும்.

(தொடரும்)

# உடற்பருமன்

மிகவும் சாதாரணமாக அதிகரித்து வரும் உலகலாவிய பிரச்சினை இந்த உயர் உடற்பருமன். நீங்களும் அதில் பங்கெடுத்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உயர் உடற்பருமன் உடையவரெனின்...

சில தசாப்தங்களின் பின்னர் உயர் உடற்பருமன் உடைய சமூகம்தான் சாதாரண சமூகமாகக் கருதப் படவேண்டிய நிலையும் ஏற்படலாம். அவ்வாறான நிலையைத் தடுக்க நீங்களும் தயாராகுங்கள்.

**உயர் உடற்பருமன்**

இது உடலில் மேலதிக கொழுப்புச் சேமிப்பால் ஏற்படும் ஆரோக்கியமற்ற நிறையதிகரித்த நிலையாகும்.

**உயர் உடற்பருமனை அடையாளப்படுத்துதல்**

இதற்காக BMI என்ற கணிப்பீடு வழக்கத்திலிருக்கிறது.

$$BMI = \frac{\text{நிறை (Kg)}}{(\text{உயரம்})^2 \ (M^2)}$$

BMI 30 $Kgm^{-2}$ இனை தாண்டிய அனைத்து நபர்களும் உயர் உடற்பருமனுக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

**உயர் உடற்பருமனை ஏற்படுத்தும் காரணிகள்**

1. அதிக ஊட்ட நிலை

உடலானது சாதாரண உடலியல் தேவைகளுக்காக சக்தியை வேண்டி நிற்கின்றது. இதன்போது வழங்கப்படும் சக்தி மூலம் உணவானது, இது தேவைப்படும் அளவைவிடக் கூடிய அளவில் வழங்கப்படும் போது மேலதிக சக்தி கொழுப்பாக மாறி சேமிக்கப் படும். அது உங்கள் உடல் நிறையை அதிகரிக்க செய்யும்.

2. உணவுத் தேர்வும் உண்ணும் தடவைகளும்

நீங்கள் உங்களுக்குரிய உணவுகளாக பொதி செய்யப்பட்ட பண்டங்கள், மென்பானங்கள், fast foods (cakes, pizza) என்பவற்றைத் தெரிவு செய்வீர்கள் எனின் நீங்களே உடற்பருமனுக்கு வழிகோலுகிறீர்கள். அவை அளவில் கொஞ்சமானதாகிலும் உயர்சக்திச் செறிவு உடையவை. நீங்கள் அதிகம் உண்ணாவிடினும் போதுமான அளவே பாதகமாக அமையும். அவை சமிபாட்டையும் வீதமும் உயர்வானதாகையால் உண்ணும் தடவையையும் அதிகப்படுத்திவிடும்.

3. குறைந்துவரும் உடற்செயற்பாடுகள்

பெருகிவரும் வசதிகள் இறுதியில் உங்களை படிகளில்கூட ஏறவிடுவதில்லை. ஏன் நடக்கக்கூட விடுவதில்லை. சுழல் நாற்காலிகள் அதை செய்துவிடுகின்றன. உடலியக்கங்கள் குறைந்த நிலையில் நீங்கள் உண்ணும் சக்தி செறிவான உணவின் மிகையான சக்தி நிச்சயமான உங்கள் நிறையாகவே மாறும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

4. பரம்பரை

உங்களையும் தாண்டிக் குறிப்பிட்ட வீதத்தில் (25%) உங்கள் உயர் உடற்பருமனை மரபுரிமைகள் தீர்மானிக்கின்றன. அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட உயர் உடற்பருமனில் சூழலின் தாக்கம் குறைந்த அளவே செல்வாக்குச் செலுத்த முடியும்.

**உயர் உடற்பருமன் வழிகோலும் சிக்கல்கள்**

* உயர்குருதியமுக்கமும் இதய நோய்களும்
* மார்பகப் புற்றுநோய்கள்
* பெருங்குடல், நேர்குடல் புற்றுநோய்கள்
* நீரிழிவு (Type II Diabetes mellitus)

இவை எல்லாவற்றையும்விட உயர் உடற்பருமன் உடையவர்கள் அதிகமான மன உளைச்சலுக்கு உள்ளாகிறார்கள். அவை குடும்பம், சமூகம் என்பனவற்றுடனான இடைத்தொடர்புகளைப் பாதிக்கின்றன.

உங்கள் நிறையை முடிந்தளவில் நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

உணவுத் தேர்வுகளையும் உண்ணும் தடவைகளையும் சரிப்படுத்திக்கொள்ளுங்கள். fast foods, குருதியில் Glucose ஐயும் Insulin ஐயும் சடுதியாகக் கூட்டி விடுகிறது. நாளடைவில் Insulin இன் உணர்திறன் குறைந்து விடுகிறது. இது Diabetes இற்கு இட்டுச்செல்லும். இயலுமான வரை அவற்றை தவிருங்கள். கொழுப்பு நிறைந்த Cheese, Margarine, ground beet, pork chops போன்றவற்றை தவிருங்கள். நல்லெண்ணெயை உபயோகியுங்கள். நார் சத்து உணவுகளை உணவில் சேருங்கள். அவை சமி பாட்டை தாமதப்படுத்தி கடத்தல் நேரத்தை கூட்டும், உணவில் பருமனை கூட்டி உண்ணும் அளவை குறைக் கும். Brown rice, Papaw, Cauliflower, Carrots.

தவறாமல் 8 - 10 குவளை நீரை அருந்துங்கள்.

உணவு அட்டவணையைத் தயாரித்து அதன்படி செயற்பட தொடங்குங்கள். உங்கள் உடல் நிறை, உணவுப் பழக்கவழக்கம் என்பவற்றில் எவ்வேளையும் விழிப்பாக இருக்க உணவு நாள்குறிப்பினைப் பேணும் பழக்கத்தை ஏற்படுத்த முடிந்தால் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஏற்ற அளவில் உடற்பயிற்சிகளைத் தேர்வு செய்து செய்ய ஆரம்பியுங்கள். யோகாசன பயிற்சிகளும் சிறந்தவை. அன்றாட வீட்டு வேலைகளை செய்யுங்கள். சிறிய தூரங்களுக்கு போக வேண்டுமெனினும் சைக்கிளைப் பயன்படுத்துங்கள்.

**பி.திலீபன்**
*மருத்துவபீட மாணவன்.*

உங்களின் இறுதித் தெரிவாக

ஏராளமான நிறைகுறைக்கும் சிகிச்சைகளும், அறுவைச்சிகிச்சை முறைகளும் உள்ளன. ஆனால் அவற்றால் ஏற்படும் பக்கவிளைவுகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாவீர்கள். நிறை குறைக்கும் மாத்திரைகள் மைய நரம்புத்தொகுதியையோ, இதய வால்புப் பிரச்சினைகளையோ ஏற்படுத்தலாம்.

ஏன் நீங்கள் அவ்வாறான செலவு அதிகமான, பக்க விளைவுகள் உள்ள தெரிவுகள் வரும்வரை காத்திருக்க வேண்டும்?

இன்றே உங்கள் நிறை குறைக்கும் நடைமுறைகளை ஆரம்பியுங்கள்.

# நீர் மூலம் பரவும் நோய்கள்

உயிர்வாழ்வதற்கு நீர் மிகவும் இன்றியமையாததாகும். இவ்வாறு இன்றியமையாததாக உள்ள நீர்மூலம் பல வகையான நோய்கள் ஏற்படுகின்றன. நீரானது நேரடியாகவோ, மறைமுகமாகவோ மிருகங்களினதும் மனிதனதும் மலங்களில் காணப்படுகின்ற நோயைத் தோற்றுவிக்கின்ற கிருமிகளால் மாசடைகிறது. இந்த அசுத்தமான நீரை அருந்தும் போது அதிலுள்ள நோய்கிருமிகள் மனிதனது இரைப்பை, குடல் என்பவற்றிக்குள் சென்று பெருகிப் பல நோய்களைத் தோற்றுவிக்கின்றன. வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல், கொலரா, மஞ்சள் காமாலை, இளம்பிள்ளைவாதம் போன்றவை பொதுவாக நீர்மூலம் பரவும் நோய்களாகும். மழைகாலத்திலும், கோடைப்பருவத்திலும் நீர்மூலம் பரவும் நோய்கள் பொதுவாக வருகின்றன. எமது ஆரோக்கியமான வாழ்விற்கு இந்நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும். எனவே நீரை நாம் பயன்படுத்தும் போது பின்வரும் முறைகளை மனதில் கொண்டு செயல்பட வேண்டும்.

**செய்ய வேண்டியவை**

* மூன்று நாள்களுக்கொருமுறை உங்களுடைய நகங்களை வெட்டித் துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.
* வடிகட்டிய நீர் அல்லது பாதுகாப்பாகத் தயாரிக்கப்பட்ட போத்தல் நீரையே அருந்தவேண்டும்.
* சாப்பாட்டிற்கு முன்னரும் மலசலம் கழித்த பின்னரும் கைகளை நன்கு சவர்க்காரம் இட்டுக் கழுவவேண்டும்.
* உங்களிடம் தண்ணீர் வடிகட்டும் உபகரணங்கள் இல்லாவிடில், நீங்கள் கொதித்தாறிய நீரையே அருந்தவேண்டும்.
* நீரைச் சுத்தமாக வைத்திருக்க குளோரின், ... கிருமிநீக்கி ... அலுவலர்களின் ஆலோசனையுடன் பயன்படுத்த வேண்டும்.
* உங்களுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் உடனடியாக வைத்தியரை அணுகுவதுடன் உடலிலிருந்து நீர், உப்புகளினது இழப்பை ஈடுசெய்வதற்காக ஜீவனி (O.R.S) கரைத்து வயிற்றுப்போக்கு நிற்கும் வரை தொடர்ந்து அருந்தவேண்டும்.
* நீர் சேகரிக்கும் கொள்கலன்களை நன்றாகக் கழுவுதல் வேண்டும்.
* சமைத்த சூடான, புதிதான உணவுகளையே உட்கொள்ள வேண்டும்.
* அசுத்தமான நீர் கலந்துவிடாதபடி கிணறுகளைச் சுற்றி சிறிய சுவர் அமைக்க வேண்டும்.

**செய்யக்கூடாதவை**

* குடிநீருக்காகப் பயன்படும் குளங்களில் குளிப்பதையும், துணிகள் துவைப்பதையும் தவிர்ப்பதுடன் அசுத்தமான நீர் ...களில் கலந்துவிடாதபடி பாதுகாக்க வேண்டும்.
* அசுத்தமான நீர் தேங்கங்களுக்கு அருகிலுள்ள வீதியோரக் கடைகளில் விற்கப்படும் பாற்பானம், பழச்சாறு, வெட்டிய பழங்கள், எண்ணெய்யான வாசனை ஊட்டப்பட்ட உணவுப் பண்டங்களை வாங்கி உண்ணக்கூடாது.
* பண்ணைகளில் வளர்க்கப்படும் மிருகங்களின் மலசலங்கள், தொழிற்சாலைக் கழிவுகள் என்பன நீர் நிலைகளைச் சென்றடைவதைத் தவிர்க்க வேண்டும்.

செ.சோபிகா
*30ஆம் அணி, மருத்துவ மாணவி.*

* பயிர்களுக்கு இரசாயனப் பசளையிடுவதனால் நிலத்தடிநீர் மாசடைகின்றது. எனவே இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்த வேண்டும்.
* நகங்களைப் பற்களினால் கடிக்கக் கூடாது.
* இலையான்கள் மொய்க்கும்விதமாக உணவுகளைத்திறந்து வைத்திருக்கக்கூடாது.
* வைத்தியரின் தகுந்த ஆலோசனையில்லாமல் நீங்களாக மருந்து வாங்கி உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யா/இந்து கௌரவ குடும்பம், 07.11.1982 பூசம், 7 செவ்வாய், 51 பாவம், A/L. சித்தியுடைய பெண்ணிற்கு அரச உத்தியோக மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும்.

தொடர்பு:- 0775332379

## போலிகள் எச்சரிக்கையாக இருக்கவும்

ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர் வரதராஜன்
யாழ்.நகரில்

1. பொன்னான மேனியும்
2. பொலிவான கூந்தலையும் தந்து
3. சகல ரோக நிவாரணியாகத் திகழும்

போலியானது — சரியானது

**சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில்** போலிகள் நடமாடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலிகளின் நடமாட்டத்தைத் தடுக்க இன்றிலிருந்து தைலப் போத்தலின் மேல் மூடி கண்ணைக் கவரும் வர்ண மூடியாக அச்சிடப்பட்டு சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. போலிகளைக் களைவதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில் வைத்திய முத்திரை பொறிக்கப்பட்ட மூடிகளே, பிளேன் மூடித் தைலம் இனி உங்களுக்கு வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரி பார்த்து வாங்குங்கள்.

*Manufactured By:*
**Sithara Product**
Puttalam Road, Chilaw.
(Reg.No: 6382) ARPR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகத்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
குறிப்பு: சத்திரச் சந்திக்கு அருகில்

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ Aus.Citz. 1980 இல் பிறந்த Eng. மகனுக்கு தாயார் படித்த அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றார். அவிட்டம் 2ஆம் பாதம்,செவ்.O, கி.பா 57, உயரம் 5'11".
தொடர்பு:- 0717472050 G.Nathan,
19, 1/6, Milagiriya Are, Col-4.

## கடைகள் விற்பனைக்கு

யாழ். நகரின் மையப் பகுதியில் புதிதாகக் கட்டப்படும் கடைத் தொகுதியில் கடைகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0778995431, 0750434277

## மாபிள் பதித்தல்

வீடுகள், ஹோட்டல்கள், வைத்தியசாலைகள் போன்ற சகல கட்டடங்களுக்கும் தேவையான மாபிள்கள், மலசலகூட பொருத்துக்கள், பைப்லைன்ஸ் போன்றன எம்மால் தரமாகவும் மலிவாகவும் செய்து தரப்படும். ஹோட்டல், NIBM கட்டடம், யாழ்.பெரிய வைத்தியசாலை போன்றவற்றுக்கான மாபிள் பதிக்கும் வேலைகள் எம்மால் தரமாகவும் குறைந்த விலையிலும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.
தொடர்பு:- 0717[illegible]41244, 0723555955, 0711472262

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 27.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.


★சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★நெல்லியடி பல்பொருள் விற்பனை, நெல்லியடி - 0774656377
★முகுந்தன், பருத்தித்துறை - 0771392593
★துர்க்கா பாம், சுன்னாகம் - 0779346599

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே. 021 222 6944
(109460)


## நீங்காத நினைவுகளுடன்

13ஆம் ஆண்டு

மண்ணில் 10 ★ 09 ★ 1924 — விண்ணில் 12 ★ 03 ★ 1998



அமரர் அப்பாப்பிள்ளை சிதம்பரநாதன்
திதி: மாசி பூரணை

3ஆம் ஆண்டு

மண்ணில் 18 ★ 11 ★ 1934 — விண்ணில் 25 ★ 01 ★ 2008



திருமதி சிதம்பரநாதன் ஞானேஸ்வரி
திதி: சதுர்த்தி

பண்பின் உறைவிடங்களே பாசத்துடன்எம்மை வளர்த்தீரே!
என்றும் நின் நினைவுகள் எம்மைவிட்டு விலகாது
ஆறுமுகன் தாளடி அடைய நாம் இறைஞ்சுகிறோம்.

மஞ்சத்தடி, கோயில் வீதி,
இணுவில் கிழக்கு.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(109647)


## STUDY IN ABROAD

**OUR COURSES**
- CERTIFICATE
- DIPLOMA
- DEGREE PGD
- MASTERS
- MBA

HURRY MARCH & APRIL INTAKE

IELTS NOT REQUIRED

**OUR SERVICES**
- EXPERT VISA CONSULTANTATION
- ACCOMMODATION ARRANGEMENT
- PROFESSIONAL GUIDANCE FROM INTIAL
- LOW AIR TICKET
- FINANCIAL SPONSORS
- ASSESSMENT TO OBTAINING VISA

100% GUARANTEED Genuine Documents Only

Ameendoray (Director) — Conditions Apply

**OVERSEAS EDUCATIONAL CONSULTANT SERVICES**
CONTACT: T. Anantharajah No 783, Hospital Road, Jaffna.
TEL: +94(0)214904353 / +94(0)772773061, 718009336
EMAIL: oecs.thiyagarajah@hotmail.com

## 28 வருடங்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்ற

FINCO WATER PROOTING



இலங்கையில் புதுமையான நம்பத்தகுந்த தொழில் தீர்வு வழங்குநர்

நாங்கள் உங்களுக்கு அதியுயர் நீர் கசிவு தீர்வு தயாரிப்புக்களை சாதாரண விலைக்கு வழங்குகின்றோம்.
குளியலறைகள், நீர்த்தடாகங்கள், குளங்கள், மதில்கள், சுவர்கள், கூரைகள் மற்றும் முகப்புகள்.


*Finco (Pvt) Limited* இன்
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
*North & East Engineering*
யாழ் வீதி, மானிப்பாய்.
(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)

Finco (Pvt) Limited
Engineering Sales Directorate
No.291, Modara Street, Modara,
Colombo- 15.
E-mail- sales@fincoesd.com.
Web- fincoesd.com.

Hot Line: 0777568685 / Tel: 0217200290

அழையுங்கள்: 011 7513500, 011 2546052


## மரண அறிவித்தல்



ஆறுமுகம் பொன்னம்பலம் J.P
(புங்குடுதீவு சிற்றூர்தி உரிமையாளர்)

புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பொன்னம்பலம் (20.01.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியலட்சுமி (இராசலட்சுமி)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, சுப்பிரமணியம் மற்றும் செல்லத்துரை, முத்தம்மா, இராசம்மா காலஞ்சென்ற சின்னையா மற்றும் சின்னம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் சின்னம்மா ஆறுமுகம், மதியாபரணம் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புங்குடுதீவு கேரதீவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]ாரம்,
புங்குடுதீவு.

தகவல்:
பாக்கியலட்சுமி (மனைவி).

(109409)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் தேசிய கீதம் தேவையா?

தமிழர்களிடையே இப்போது ஒரு பெரிய கவலை. ஸ்ரீலங்கா தேசிய கீதத்தை தமிழர்கள் சிங்களத்தில் பாடிவிட்டார்கள். தமிழில் பாடியிருக்கக் கூடாதா என்று வினா எழுப்பிக் கலங்குகிறார்கள்.

இந்த வினா மிகவும் வியப்பைத் தருகிறது. ஏன் கவலைப்பட வேண்டும்? ஸ்ரீலங்கா தேசிய கீதம் சிங்கள காலனித்துவ ஆட்சியினரது. அதனால் அவர்களின் மொழியில் பாடுவது சரியே என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். இதில் எந்தக் குறையும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதற்கு வரலாறே சான்று. இரண்டாம் உலகப் போரின் பொழுது ஜப்பானியர் கிழக்காசியாவையும் தென் கிழக்காசியாவையும் கைப்பற்றிக் காலனித்துவ ஆட்சியை நடத்தினர். அவர்கள் 'கீமீ காயோ வா' என்று தொடங்கும் ஜப்பா

**கிருபனார்**

னிய தேசிய கீதத்தை எல்லாப் பள்ளிகளிலும் முக்கிய நிகழ்ச்சிகளிலும் கட்டாயப்படுத்தி மக்களைப் பாடவைத்தனர். ஜப்பானியர்களிடத்தே சிக்கியவர்களுக்கு வேறு எந்த வழியும் தெரியாமல் அன்னிய கீதத்தைப் பாடினர். அந்த மக்களுக்குக் கீதத்தில் எந்த உணர்ச்சியும் எழவில்லை. அதன் பொருளும் புரியவில்லை. பண் இசைப்பும் தெரியவில்லை. இருந்த போதிலும் தவறான உச்சரிப்பில் கரகரப்பான ஓசை- இசையில் பாடி முடித்தனர். காலனியாளர்களாகிய ஜப்பானியர்கள் தமது நாட்டுக் கீதத்தைப் பாடிய மக்களைப் பாராட்டினர்.

ஜப்பானிய தேசிய கீதத்தை காலனியாகிய நாடுகளின் மொழிகளில் பாடியிருந்தால் என்னவாகியிக்கும்? மொழிபெயர்ப்பில் ஜப்பானிய கீதத்தின் உட்கருத்து வெளிப்பட்டிருக்காது. பாடுபவர்கள் இசைக்காக மட்டும் பாடுவர்.

மேலும் சொந்த மொழியில் வேற்று நாட்டின் தேசிய கீதத்தைப் பாடுவதால் அந்தக் காலனித்துவ நாட்டை ஆதரிப்பதாகவும் காலனித்துவத்தை ஏற்றுக் கொள்வதாகவும் பொருள்படுமல்லவா? சிக்கிய மக்கள் மகிழ்ச்சி அடைந்திருப்பார்களா? குறிப்பாக சீனர்கள் ஜப்பானிய கீதத்தை வெறுத்தனர். அன்று தொடக்கம் இன்றுவரை சீனர்கள் ஜப்பானியரை அவநம்பிக்கையோடு தான் காண்கிறார்கள். இது உலகம் அறிந்ததே.

தமிழர்கள் சிந்திக்க வேண்டும். மேற்கண்ட வாதம் இலங்கை- ஈழத்தமிழர்களுக்கும் சாரும். தமிழர் நாட்டை அவர்கள் வென்று, கைப்பற்றிக் காலனித்துவ ஆட்சியை நிறுவி இருக்கிறார்கள். தமிழர்கள் சிங்களவர்களை அழைத்து தங்கள் நாட்டை ஆளும்படி கேட்கவும் இல்லை. அன்பளிப்பாகக் கொடுக்கவும் இல்லை. இந்த நிலையில் தமிழர்கள் தேடாது அடிமையாகி விட்டார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

மாற்றான் தேசிய கீதத்தை அவனுடைய மொழியில் பாடுவதில் என்ன தவறு? அப்படிப்பாடுவதால் தமிழர்கள் வேறு, சிங்களக் காலனியாட்சியினர் வேறு என்பதை வலியுறுத்த முடியும்.

அர்த்தமில்லாத பூச்சியக் கீதத்தை எந்த உணர்வு இல்லாது சிங்களத்தில் பாடுவதால் ஏதும் பிரச்சினை இல்லை. பாடுபவர்கள் சிலர் ஏனோ தானோ என்றும் பாடி இருப்பார்கள். காலனித்துவ ஆட்சியார்கள் கீதத்தைக் கேட்கும் வரையும் தான் மன நிறைவு. பின்பு தமிழர்களை அடிமையாக்கிய வெற்றியையும் அவர்களின் வெறுப்பையும் தான் உணர்ந்திருப்பார்கள். இது அவர்களுக்கு ஓர் காலியான வெற்றியல்லவா?

தமிழில் மொழிபெயர்த்த தேசிய கீதத்தைப் பாடுவதால் தமிழர்களுக்கு என்ன பயன்? ஒரு பலனைத்தான் காண முடிகிறது. தமிழ் என்ற மொழி ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் பேசும் மொழி என்று முகமன் காட்டுவதே. வேறு எந்த விளைவும் இல்லை.

தமிழர்கள் தமது புனிதத் தமிழ் மொழியில் மாற்றான் கீதத்தைப்பாடி அவனுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமா? செந்தமிழைக் கொடுத்து தாம் பற்றற்ற ஒரு நாட்டைப் போற்றித் துதிக்க வேண்டிய அவசியம் தமிழர்களுக்கு இல்லை. அப்படிச் செய்வதால் தமிழர்கள் தமது மொழியை அவமதிப்பதாக ஆகிவிடும்.

தமிழில் தேசிய கீதத்தைப் பாடுவதால் இங்கு தனிநாட்டுப் போர் என்ற ஒன்று நடத்தது என்பதற்கான அர்த்தமே அற்றுப் போய்விடவும் கூடும்.

இதைவிடப் பெரிய ஆபத்து ஒன்று உண்டு. புரியாத சிங்களத்தில் பாடும் போது வேண்டா வெறுப்பாக அதனைப் பாடுவார்கள். ஆனால் தமிழில் மொழிபெயர்த்த கீதம் தமிழர்களின் உணர்வுகளையும் மாற்றக்கூடும். ஸ்ரீலங்காவின் சிறப்பை அந்தக் கீதம் வழங்கும்போது தமிழர்களின் உள்ளம் கனிய வாய்ப்பும் உண்டு.

தமிழில் ஸ்ரீலங்காத் தாயை வணங்க முற்படுவது சிங்களத்தில் அவளை வணங்குவதைவிட ஆபத்தானது. அப்பொழுது ஈழத்தமிழர் என்ற உணர்வே அற்றுப் போய்விடும். உண்மையில் தமிழில் பாடுவதால் சிங்களவர்களின் சர்வாதிகாரத்துக்கு நாமும் கைகொடுக்க முயல்கின்றோம்.

சிங்கள ஸ்ரீலங்கா தேசிய கீதத்தைத் தமிழ் மொழிப்படுத்திப் பாடும் அவாவையும் கோரிக்கையையும் கைவிடுவதே தமிழர்களின் நன்மதிப்பை வலுப்படுத்தும்.

தமிழர்கள் ஓர் தேசிய இனம். எனவே தனியான கீதத்தை இயற்ற வேண்டும். அது இக்கால கட்டத்தில் சாத்தியமாவது கடினம் போல் தோன்றலாம். இருந்தாலும் முயற்சி எடுப்பது வருங்காலத்துக்கு உகந்தது. கீதத்தை வெளிப்படையாகப் பாடினால் சர்வாதிகாரர்கள் தடைசெய்வார்கள். இதற்கு நல்ல உபாயம் ஒன்றைக் காணவேண்டும். தமிழர்களின் சமூக அமைப்புக்கள் நம்பிக்கையுடனும் ஒற்றுமையாகவும் ஒன்றுபட்டால் இது சாத்தியமாகும்.

மனிதனின் உடலை உடைக்கலாம். ஆனால் அவனது உள்ளத்தை எந்த சர்வாதிகாரத்தாலும் நசுக்க முடியாது.

## தேசிய கீதம் எவ்வாறு உருவானது

நாட்டின் தலைவருக்கு ஒக்ஸ்போட் சங்கத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தின் பின் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்படுத்தப்படும் என எதிர்பார்த்தார்கள். அதேபோல் தேசிய கீதம் சிங்களத்தில் மட்டும் பாடப்பட வேண்டும் என்ற சர்ச்சை எழுப்பப்பட்டு அரச சார்புடையவர்களும் சில ஊடகங்களும் அதை ஊதிப் பெரிதாக்கியுள்ளார்கள். இந்த நிலையில் அதைப்பற்றி அறிதல் அவசியம்.

முதலில் டொமினியன் அதன் பின் ''காந்தர்வ சபா'' (Gandharava Sabha) எனும் அமைப்பு தேசிய கீதம் உருவாக்க அமைக்கப்பட்டது.

இதில் அங்கம் வகித்தவர்கள் எஸ். ஐ. பி. கப்புக் கொட்டுவ, டாக்டர் ஒ. எச். டீ.விஜயசேகர, லயனல் எதிரிசிங்க, முதலியார் ஈ.ஏ.அபயசேகர, டபிள்யூ. கே. குணதுங்க, பீ.பி.இலங்கசிங்க ஆகியோர்.

அங்கத்தவர் பீ.பி.இலங்கசிங்க இனால் எழுதப்பட்டு லயனல் எதிரிசிங்க இன் இசையில் ஒரு பாடல் உருவாக் கம் பெற்றது. பாடல் ஸ்ரீலங்கா மாதா பால யச மொகின ஜெய ஜய என முடி வுற்றது. இப்பாடல் இலங்கை வானொ லியில் தேசியப் பாடலாக ஒலிபரப்பா னது. ஆனால் முதலாவது சுதந்திர தினத் தில் பாடப்படவில்லை. இப்பாடலுக்கு பொது மக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியது.

இதன்பின் ஆனந்த சமரக்கோனின் ''தேசிய கீதம்'' உருவானது. இவர் 13.06.1911 ஆம் ஆண்டு கிறிஸ்தவ குடும்பத்தில் வட்டரெக்க என்ற கிராமத்தில் பிறந்து ரவீந்திரநாத் தாகூரின் படைப்புகளால் கவரப்பட்டு வங்காள மொழியில் உள்ள ''சாந்தி நிகேதனில்'' இணைந்து கற்றார். இலங்கை திருப்பும் போது விமானத்தில் இருந்தபடி எழுதத் தொடங்கி வீட்டுக்குச் சென்று இரவு 10 மணியின் பின் எழுதி உருவாக்கப் பட்டதுதான் ''நமோ நமோ மாதா'' என்ற தேசிய கீதம்.

முதலில் இந்தப் பாடலை அவர் படிப்பித்த காலி மகிந்தா கல்லூரியில் பதிவுசெய்து அதை அவரின் படைப்பான கீதா குமுதினி என்ற பாடல் தொகுப்பில் புகுத்தினார். அந்த நாளில் அவரிடம் பணவசதி இல்லாத தால் ஆர். கே. டபிள்யூ. சிறிவர்த்தனா என்ற பதிப் பாளரிடம் பதிப்புக்கான பணம் கொடுக்க முடியா[illegible] கொடுத்தார். இதைப் [illegible] அவர்களின் அரசு, ரூபா 2500 கொடுத்து வாங்கி உரிமத்தைப் பெற்றது. இவரின் இப்பாடல் 50 உறுப்பினர்களைக் கொண்ட மாசியன் கல்லூரி, கொழும்பு இசைக் குழுவால் ஒரு பொது வைபவத்தில் இசைக்கப்பட்டபோது பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

பின்னர் டி.எஸ்.சேனநாயக்கா அரசில் 1950 ஆம் ஆண்டில் உள்நாட்டு அமைச்சராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. தேசிய கீதம் உருவாக்க அதைத் தொடர்ந்து சேர்.ஈ.ஏ.பி.விஜயரட்ணவின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. தேசிய கீதத்தை தெரிவு செய்து பரிந்துரைக்க இக்குழு ஆனந்த சமரக்கோனின் கீதத்தை சில திருத்தங்களுடன் பரிந்துரைக்க அதுவே ஏற்றுக் கொள்ளப்பட்ட உத்தியோகப் பூர்வ தேசிய கீதமாக சிங்களத்தில் உருவானது டி.எஸ்.சேனநாயக்காவின் அரசில் அன்றிருந்த இரு தமிழ் அமைச்சர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம், சி.சிற்றம்பலம் ஆகியோர் தமிழிலும் தேசிய கீதம் வேண்டும் என கேட்பதற்கு முன்னதாகவே தேசியகீதத்தின் இசை, கருத்து வேறுபடாமல் தமிழில் தேசிய கீதத்தை மொழி பெயர்க்க உத்தரவிட்டார். முது தமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி தேசிய கீதத்தை தமிழில் தந்த மகான்.

தேசிய கீதம் உத்தியோகப் பூர்வமாக இலங்கை சுதந்திரமடைந்து 4 வருடங்களின் பின் 04.02.1952 இல் முதல் முதலாக சுகந்திர தினத்தில் இசைக்கப்பட்டது சிங்களத்தில். அதேநாளில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு கச்சேரிகளில் தமிழ் மொழியில் இசைக்கப்பட்டது. அன்று தொட்டு இன்று வரை தமிழிலும் இசைக்கப்படுகிறது.

ஒவ்வொருவர் ஒவ்வொரு பாணியில் இசைத்ததால் 1953 ஆம் ஆண்டு ஆனந்த சமரக்கோன் உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு சீரான ஒரே பாணியில் இசைக்க ஏற்பாடுகள் செய்யப் பணிக்கப்பட்டது.

தமிழில் தேசிய கீதத்தை முதலில் பாடியவர்கள் சங்கரியும், மீனாவும் ஆவர்.

1956 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அரசு வெள்ளம், மக்கள் எதிர்ப்பு, தீ, மண்சரிவு ஆகிய பிரச்சினைகளை எதிர்கொண்ட போது, இவற்றுக்கெல்லாம் காரணம் "தேசிய கீதத்தில் உள்ள குறைபாடு'' என ஒரு புரளி கட்ட விழ்த்து விடப்பட்டது. 1959 இல் அவர் கொலை செய்யப்பட்ட பின் னர் அவரது மனைவி ஸ்ரீமாவோ 1960 இல் பிரத மராகப் பதவி ஏற்றார். அவரது அரசின் அமைச்சரான மைத்திபால சேனநாயக்க ஒரு ''நிபுணர் குழுவை'' நியமித்தார் தேசிய கீதத்தை மீளாய்வு செய்ய. இந்தக் கமிட்டி ''நமோ நமோ மாதா'' என்ற பதத்தை ''ஸ்ரீலங்கா மாதா'' என மாற்ற சிபாரிசு செய்து மாற்றம் பெற் றது 1961இல் தான்.

இதைப்பற்றி பத்திரிகைக்கு பேசும் போது அவரது மைத்துனர் சுனில் சமரக்கோன் கூறினார் தனக்கு 11 வயதாக இருக்கும் போது ஆனந்த சமரக்கோன் தனது தந்தையைக் காண ஒரு நாள் ஒஸ்ரின் காரில் வந்தாராம். தான் காரை அடைந்தபோது அவர் கூறியது'' புத்தே மகே ஒழுவ கலவலா வென எக்க கைக்கரலா''என ''மகனே எனது தலையைக் கழற்றி விட்டு வேறொன்றைப் பொருத்தியுள்ளார்கள்'' என்று.

அவர் இறக்க முன்பு 'ரைம்ஸ் அன்ட் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் ரைம்ஸ் மான் பத்தியில் எழுதியவை, எழுதியவர் அதனைச் சேதமடையச் செய்யவில்லை. ஆனால் ளளஅதற்று இசையமைத்தவரின் செய்கையினால் நான் மனமுடைந்துள்ளேன் - கவலை அடைந்துள்ளேன். இத்தகைய ஒரு நாட்டில் வாழ்தல் என்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும்.

05.04.1962 இல் அவர் பூட்டிய அறையில் இறந்து காணப்பட்டார். கதவை உடைத்துப் பார்த்தபோது அன்றைய எதிர்க்கட்சி தலைவரான டட்லி சேனநாயக்கவிற்கு தனது மனக்குறையை உள்ளடக்கிய கடிதம் ஒன்று அருகில் உள்ள மேசையொன்றில் வைக்கப்பட்டிருந்தது. ஆனந்த சமரக்கோனின் பிறந்த தினம் 13 ஆம் திகதி ஜனவரி 2011 இல் ஆகும்.

1978 இல் உருவான அரசியலமைப்பின் Claus 7இல் தேசிய கீதம் சிங்களத்தில் இருப்பதாகவும், அதே Claus 7 தொகுப்பு (Schedule) 3 இல் தமிழிலும் இசைக்கப்படலாமெனவும் கூறப்பட்டுள்ளது. அன்று தேசிய மொழி அந்தஸ்து பெற்றது தமிழ்.

அரசியலமைப்புத் திருத்தம் 13 இல் தமிழும், சிங்களத்துடன் உத்தியோக பூர்வ மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அரசியலமைப்புத் திருத்தம் 13 இல் தமிழ் நிர்வாக மற்றும் சட்ட ரீதியான மொழியாக வடக்குக் கிழக்கில் பாவிக்க அனுமதிக்கப்பட்டது.

இப்போது இந்தப் பிரச்சினையைக் கிளப்ப வேண்டிய காரணம் என்ன வெனக் கேள்வி எழுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


கிளிநொச்சி புன்னை நீராவி மகா வித்தியாலயம் (18.01.2011)

எமது நிறுவனத் தலைவர் திரு. க. செவ்வேள்
அவர்களின்

23.01.2011

# பிறந்த தினவாழ்த்துக்கள்

அவரது மக்கள் சேவை தொடர வாழ்த்துகின்றோம்...


பொங்கல் தினத்தன்று கிளிநொச்சியில்


முல்லை அரச அதிபருடன் செம்மலையில் (21.12.2010)


வற்றாப்பளையில் (21.12.2010)


புன்னைநீராவி மாணவர்களுடன் (18.01.2011)


வற்றாப்பளையில் (21.12.2010)


கொக்கிளாய் மக்களுடன் (16.01.2011)


கொக்கிளாயில் (16.01.2011)


வற்றாப்பளையில் (16.01.2011)


கிறிஸ்மஸ் தினத்தன்று கொக்கிளாயில்


உப்புமாவெளி மக்களுடன் (16.01.2011)


வற்றாப்பளையில் (16.01.2011)


கொக்கிளாயில் (16.01.2011)


வாழ்த்துவோர் : AAA Ventures (Pvt) Ltd, AAA Movies International, பனைமரக்காடு படக்குழுவினர்

No : 92, Brown Road, Jaffna Tel : 0213207386, 0213734742

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வைத்தி சந்தியாப்பிள்ளை சுந்தரம்



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தி சந்தியாப்பிள்ளை சுந்தரம் 20.01.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் நீற்றம்மா (ராணி) வின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தோமஸ் கென்றி - மரியமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் பாலன், ராயு, பவி, பொலின், ஜெனவி, மேசி, டல்சி, சின்னத்தம்பி, வப்சி ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்திய குமாரன், சுதன், றெமியன், பிரேமா, பவானி, றோஸ்மலர் ஆகியோரின் அன்பு மாமனும் மவுன் பேட்டன், நிரோஷி, டிலான், பிரவீன், மதுசிறி, பிரதீபன், பிருந்திகா, பிரதீபன், நிரோஷன் ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யா/புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 54/5, சந்தனமாதா லேன்,*
*பாண்டியன் தாழ்வு,*
*கொழும்புத்துறை.*

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## யாழ். திறந்த பல்கலையின் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் 2011/2012ஆம் கல்வியாண்டுக்கான சமூகவிஞ்ஞானச் சான்றிதழ் கலைமாணிப்பட்ட பதிவுகள், மீள் பதிவுகள் எதிர்வரும் 26ஆம் திகதிவரை யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இதேவேளை சமூக விஞ்ஞானப் பீடத்தின் கீழ் சுற்றுலாத்துறையும் விடுதிச் செயற்பாடுகளும் எனும் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் இன்று முதல் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

- இவ்வாறு திறந்த பல்கலைக்கழக இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-10)


# தேவை

**கடற்கரையை அண்மித்த காணி, காரியாலய இடவசதி மற்றும் யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துள்ள காணி உடனடியாகத்தேவை.**

ஹோட்டல் செயற்றிட்டங்கள் மற்றும் காரியால்ய இடவசதிக்கான கடற்கரைக்கு முகப்பாக அமையப்பெற்ற காணி மற்றும் யாழ்குடா நாட்டின் மத்தியில் அமையப்பெற்ற காணி ஆகியன உடனடியாக தேவைப்படுகின்றன. தங்களின் காணி பற்றிய விபரங்களை அறியத்தரவும். மேற்படி இடங்களை பார்வையிடும் பொருட்டு ஜனவரி 21ஆம் திகதி முதல் 23 வரை ஹோட்டல் 'டில்கோ' மற்றும் யாழ்ப்பாண சர்வதேச சந்தையில் இல.149 மற்றும் 150 இல் அமைந்துள்ள 'மெக்வூட்' காட்சியறையிலும் நாம் பிரசன்னமாயிருப்போம்.

**தொடர்புகளுக்கு :**
**சுதீன் : 0778424248**
**வித்யா : 0774632726**
**தொலைநகல் : 0115338024**
**மின்அஞ்சல் :** projects@mackwoods.com


# மரண அறிவித்தல்கள்

## *செல்வன் தங்கராசா கஜன்*



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா கஜன் நேற்று (22.01.2011) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் நாகலிங்கம் தங்கராசா (இளைப்பாறிய முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய்) - கணேஸ்வரி தம்பதியரின் ஏக புதல்வனும் கஜனி (யாழ். இராமநாதன் நுண்கலைப்பீடம்), ருஷானி (A/L மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகரத்தினம், நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் பேரனும், கதிர்காம ஈஸ்வரன், காலஞ்சென்ற சிவ ஈஸ்வரன் மற்றும் ஞானேஸ்வரன்- சர்வேஸ்வரன் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"செல்வறங்கம்",*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

தகவல்:
செ. கதிர்காமஈஸ்வரன்,
செ. சர்வேஸ்வரன் (H.N.B)
(மாமன்மார்).

## *மயில்வாகனம் ரவீந்திரன்*



(ஆசிரியர், விபுலானந்தா கல்லூரி, திருகோணமலை)

அராலியைப் பிறப்பிடமாகவும், தற்போது திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் ரவீந்திரன் 21.01.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம - பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மக னும், காரைநகர் வேதரடைப்பைச் சேர்ந்த கனகேந்திரம் (ஓய்வு பெற்ற அதிபர்) - சரஸ்வதி (ஓய்வு பெற்ற ஆசிரியை) தம்பதியரின் மருமகனும், சிவசொரூபியின் (சிரேஷ்ட எழுதுநர், கட்டடத் திணைக்களம், வடமாகாணம்) பாசமிகு கணவரும், மீரா, றஜனி, தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயசீலன் (வர்த்தகர்), மோகனதாசன் (வர்த்தகர்), உமை பாகன், உமைநேசன் (கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர், வவுனியா), குகநேசன் திருமகள் தேவி (முகாமைத்துவ உதவியாளர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை - காரைநகர்) ஆகியோரின் மைத் துனரும், சிவனடியான், தர்மகுலசிங்கம் (குணம்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், டினோசன், சாரங்கன் ஆகியோரின் பெரியப்பாவும் தனுஷா, நிருசன், கீதவஞ்சன், சாருகா, பானுகா, அபிஷன் அஜெய் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.*
*தொ.பே. 0714471790.*

தகவல்:
குடும்பத்தினர்.


# MARKETING EXECUTIVES REQUIRED

Reputed VISA Consultancy firm in Colombo is looking for marketing executives from Jaffna.
Job Role : Promoting Educational and Business Opportunites available in Europe.

**Earn Over 50,000/- per month**

Requirements:
☑ 20 - 40 Years Old
☑ Good PR Skills
☑ Must be Able to Communicate in English
☑ Selected Individuals will have to visit Colombo when required

Attractive remuneration package will be offered to the right Candidate
Please forward your CV To: chamalka@eduzone.lk

**☎ 0715 60 7333 (Chamalka) - 22 1/4, Galle Rd, Dehiwala.**

# தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் பதவிகளுக்கு வேலை ஆள்கள் தேவை.

* கணினியில் கணக்கு வேலை செய்யக் கூடியவரும், கணினி சம்பந்தமான வேலைகள் செய்யக்கூடிய வருமான பெண் தேவை.
* சிட்டை எழுதுநர் (பெண்) (அனுபவம் விரும்பத்தக்கது)

*ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்*
இல.344, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.இல:- 0777768835

சாவகச்சேரியில்

# சிங்கள வகுப்புக்கள்

*அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க சாவகச்சேரியில் சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்*

யாழ்.பிரபல சிங்கள ஆசிரியர்

*ஸ்ரீ மாஸ்டர்*

ஆரம்பம்:- 28.01.2011 (வெள்ளிக்கிழமை) மாலை 4.30 மணி (அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளை இத்திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்)

இடம்:- லண்டன் ஸ்ரீ துர்க்கை அம்மன் கணினிப் பயிற்சி நிலையம்.
114, டச்சு வீதி, சாவகச்சேரி.

# வாடகைக்கு

நாவலர் வீதியில் கடையும், விலாசமான வீடும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:-0212223479, 0215670313

# Web Design / Graphic Design / E-Commerce Solutions/ Type Setting செய்யத் தெரிந்தவர்கள் தேவை

* Web design செய்பவருக்கு உதவியாளர் தேவை.
* இதை முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ வீட்டில் இருந்தவாறே செய்யலாம்.
* இதில் சேர விரும்புபவர்கள் தமது புகைப்படத்துடன் கூடிய சுயவிவரக் கோவையையும் நீங்கள் உருவாக்கிய ஆக்கங்களையும் (Projects / Sample Image ) ஐயும் உடன் எமது இணையத்தள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**nath**
**nath@Jaffnavoice.com**

# தேவை

கொழும்பிலிருந்து வேலை செய்யும் யாழ். தம்பதியினரின் இரு சிறு குழந்தைகளைப் பராமரிக்கவும், வீட்டு வேலைகளில் உதவி புரியவும் 18-35 வயதில் நற்குணமுள்ள பெண்ணொருவர் தேவை.
சம்பளம் 8,000-10,000/=

தொடர்பு:-0773819855, 0773456779

# வீடு, காணி விற்பனை

சுதுமலை தெற்கில், மாவடி ஒழுங்கையில் (மில்லுக்குப் பக்கத்து ஒழுங்கை) 4¾ பரப்பு, காணியில் தனிக் கிணற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

No:-33, மாவடி ஒழுங்கை,
[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைப்படுத்தல் பயிற்சி நெறி

சந்தைப்படுத்தல் துறையில் (Sales Representative) தொழில் வாய்ப்புப் பெற புதிய பிரிவு ஆரம்பம் (After O/L or A/L) அடிப்படை சந்தைப்படுத்தல் அறிவுடன் கூடிய பயிற்சி நெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

1. Sales Presentation
2. Sales Planning & Forcasting
3. Target US achievement (Modern Marketing Concept, Marketing System,Marketing Mix and Marketing Planning)

3 மாதகால பயிற்சி- பயிற்சிக் கட்டணம் Rs.3000/-
New Keen Marketing உப்புமடம் சந்தி, கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில் மேற்கு
T.P. 0774710002

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
10 * 05 * 1937



மறைவு
24 * 12 * 2010

### அமரர் ஐயாத்துரை சின்னத்தம்பி

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்தும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் ஆறாத் துயரிலிருந்த எமக்கு தொலை தூரத்திலிருந்து தொலைபேசி, தந்திகள் மூலமாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எம்மோடு உடனிருந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பனை,
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.
தொ.பே:- 0779491525 (சி/575048)

நீங்கா நினைவுடன் :
குடும்பத்தினர்.

## உடுப்பிட்டியில் கும்பாபிஷேகம்

நெல்லியடி, ஜன. 23

உடுப்பிட்டி துவாளி அருள்மிகு வீர கத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.09 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதற்கான கிரியை வழிபாடுகள் கடந்த வியாழக் கிழமை முதல் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கும்பாபிஷேகக் கிரியைகளை கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ வே.பால சந்திரக்குருக்கள், ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ அப்பாத்துரைக்குருக்கள் ஆகியோர் நடத்த வுள்ளனர். (319)

## பருத்தித்துறையிலிருந்து மட்டக்களப்புக்கு நிவாரணம்

மட்டக்களப்பில் வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிவாரணப்பொருள்கள் எதிர்வரும் திங்கட்கிழமை அனுப்பிவைக்கப்படவுள்ளன.

சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான இந்த அத்தியாவசிய நிவாரணப் பொருள்கள் லொறிமூலம் யாழ்.மாவட்ட செயலகத்தின் ஊடாக மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகப் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ம-319)

## இறப்பர் திருட்டு

இறப்பரின் விலை கிலோவொன்றுக்கு 550 ரூபாவரை அதிகரிக்கப்பட்டதையடுத்து இறப்பர் உற்பத்திப் பிரதேசங்களில் இறப்பர் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக அயகம மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் இறப்பர் திருடர்கள் அதிகரித்துள்ளனர் என்று இறப்பர் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் கள்ளத் தனமாக மரங்களில்பால்வெட்டும் இத்திருடர்களால் தோட்ட உரிமையாளர்கள் பெரும் நட்டத்துக்கு முகம் கொடுக்கின்றனர்.

## அறிவித்தல்
### ஹோம் பினான்ஸ் லிமிட்டட்

(தற்போது கலைப்பிலுள்ளது)
கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இல.91/CO
வைப்பாளருக்கான அறிவித்தல்

**வைப்பு மீளளிப்புக் கோரலுக்கான இறுதித் திகதி**

ஹோம் பினான்ஸ் லிமிட்டட் கம்பனியின் வைப்பாளர்கள் தமது பணவைப்புக்களின் மீளளிப்புக்கான விண்ணப்பங்களைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கம்பனிக் கலைப்பாளரிடம் 1982ஆம் ஆண்டு 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவுகளுக்கமைய எதிர்வரும் 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மீளளிப்புக்கான விண்ணப்பப்படிவங்களை வேலை நாள்களில் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை கீழ்க் காணும் முகவரியில், உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். நேரில் வரமுடியாதோர் தமது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும், தபால் மூலம் உரிய ஆவணங்களின் பிரதிகளை அனுப்பியும் மேற்படி படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே எமக்கு விவரங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் தபால் மூலம் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

உரிய முறையில் நிரூபிக்கப்பட்ட வைப்பாளருக்கான மீளளிப்புகள், மேற்படி கம்பனிகள் சட்டத்திற்கமைவாக கம்பனியின் சொத்துக்களை விற்றொதுக்கிப் பெறும் நிதிக்கமைவாக, கம்பனிக் கலைப்பாளரினால் வழங்கப்படும்.

2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியின் பின் கிடைக்கப்பெறும் மீளளிப்புக்கான விண்ணப்பங்கள் கம்பனிக் கலைப்பாளரினால் வழங்கப்படக்கூடிய மீளளிப்புக்களில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேலதிக விவரங்களுக்கு கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**The Liquidators**
**Home Finance Ltd**
**C/O, SJMS Associates,**
**No.30-2/1,(2nd Floor) Galle Road,**
**Colombo - 06. T.P. 2508874**

(சி/575127)

## விலைகோரல்களுக்கான கோரிக்கை

### உத்தியோக விடுதியை வாடகைக்கு விடுதல் - ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்

ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் யாழ்ப்பாண நிலையத்தில் பணிபுரியும் ஒரு உயர் அதிகாரிக்கு உத்தியோக விடுதியை வழங்குவதற்காகக் யாழ் மாநகரசபைச் சுற்றுவட்டாரத்தில், **கிட்டத்தட்ட 1750 சதுர அடிக்கும் 2500 சதுர அடிக்கும் உட்பட்ட, குறைந்தது இரண்டு படுக்கை அறைகளுடனான, எல்லா நவீன வசதிகளும் கொண்ட, கார் தரிப்பிடமுள்ள** ஒரு வீட்டை வாடகைக்கு விடுவதற்கான விண்ணப்பங்கள் உரிமையாளர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

விலாசம், வீடு இருக்குமிடம், கட்டிட அமைப்பு, உறுதியின் பிரதி, பணக்கொடுப்பனவு மற்றும் வாடகைக்கான நியதிகள் நிபந்தனைகள் உள்ளிட்ட விலைகோரல்கள் போன்றவற்றை ஒரு காகித உறைக்குள் இட்டு, **"பிரிவின் தலைவர் (ஊழியர் தொடர்பு), ஸ்ரீலங்கா ரெலிகொம், லோட்டஸ் வீதி, கொழும்பு-01"** என்ற முகவரிக்கு 31.01.2011 மாலை 3 மணிக்கு முன்னர் கிடைக்குமாறு, பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

ஒட்டப்பட்ட காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில், **"ஸ்ரீலங்கா ரெலிகொம் உத்தியோக விடுதி- யாழ்ப்பாணம்"** என்று எழுதப்பட்டிருக்கவேண்டும்.

**பிரிவின் தலைவர்/ மனித வளங்கள்**
**ஸ்ரீலங்கா ரெலிகொம்**

www.slt.lk

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
05 . 11 . 1948



உதிர்வு
03 . 02 . 2010

### அமரர் கார்த்திகேசு சிவபாலன்

(பிரபல சமூகசேவையாளர்- நீர்வேலி)

*திதி: சதுர்த்தி (23.01.2011)*

பன்முக ஆளுமை கொண்ட எங்கள் குலவிளக்கு இவ்வுலகை நீத்து ஓராண்டு நிறைவுறும் இந்நாளில் அவர்பால் உள்ளன்பு கொண்ட உள்ளங்கள் யாவரும் அவர்தம் சேவைகளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

இன்று (23.01.2011) ஞாயிறு எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] நீர்வேலி. (109240) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கா நினைவில்

**9ஆம் ஆண்டு** — **15ஆம் ஆண்டு**

மலர்வு 27.04.1938
உதிர்வு 01.02.2002





அன்னை மடியில் 21.02.1977
அமரன் அடியில் 13.06.1996

**அமரர் வெ.வேலு (கந்தையா)**
(ஓய்வுபெற்ற மின்கம்பி இணைப்பாளர்)
திதி:23.01.2011

**செல்வன் வேலு சனகன்**
(முன்னாள் மாணவன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள் இருவரினதும் நினைவுகளோடு கலந்து வாழும்

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்


### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.23

கீரிமலை முத்து மாரியம்மன் ஆலய புனருத்தாரண சபையொன்று அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய முன்றிலில் நடை பெறவுள்ளது. அன்றைய தினம் அனைவரையும் கலந்து கொள்ளு மாறு ஆதீன கர்த்தா கேட்டுள்ளார்.

(த-126)


## அறிவித்தல்

**காரைநகர் சிவன்கோயில் பாலஸ்தாபனம் பற்றிய பகிரங்கப் பொதுக்கூட்டம்**

*இடம்: காரைநகர் சிவன் கோயில் முன்றில்*
*காலம்: 23.01.2011 ஞாயிற்றுக்கிழமை (இன்று) பிற்பகல் 2.00 மணி.*

(1092236)

காரைநகர் சிவன் கோயிலின் பாலஸ்தாபனம் பற்றி ஆராய்வதற்காக காரைநகர் சிவன் கோயில் அடியார்கள் சபையின் ஆதரவின் கீழ் இந்துப் பொது மக்களின் பகிரங்கப் பொதுக்கூட்டம் காரைநகர் சிவன்கோயிலின்முன் 23.01.2011 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (இன்று) பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்

அடியார்கள் யாவரும் திரண்டு வந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

செயலாளர்,
காரைநகர் சிவன்கோயில் அடியார்கள் சபை (வரை)

பிரபல TOFEL,IELTS பயிற்சியாளர் A.K.Nathan, திருமணமாகி Sponsor முறையில் வெளிநாடு செல்பவர்களுக்கான தகுதிகாண் பரீட்சை KET, (Key English Test) ESOL Cambridge பாடங்களையும் சிறந்த முறை யில் விளக்கமாக நடத்தி வருகின்றார். March மாதத்துக்கான பரீட்சையின் விண்ணப்பத்துக்கான இறுதிநாள் 28 January.

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

Call us for more details 0712251190/2559573
No. 309- 3/2,Galle Road, Colombo - 06
(Little Asia Building)
www.aknathan.com

**GENUINE FINANCIAL SPONSORSHIP**

From Trusted and Recognised Banks
Reasonabale Interest
UK / CANADA / AUSTRAILIA
Contact Now : 100% Visa Guaranteed
**0777113777**

**TOTAL SOLUTION OF BUILLDIG REPIARING**

சகல விதமான கட்டத் திருத்த வேலைகள்

ஒரே கூரையின் கீழ்

- கட்டடம்
- மேசன் வேலை, மாபிள் பதித்தல்
- தச்சுவேலை
- பெயின்டிங்
- வயரிங், பிளம்பிங்
- வெல்டிங்
- ஏசி பிற்றிங், பழுது பார்த்தல்



தொடர்பு:
ப.செந்தூர்க்குமரன் (செந்தூரன்)
0776647464
884, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

உங்களின் தேவையே எங்களின் சேவை

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தொழில்புரியும் 28 வயது மணமகனுக்கு (கார்த்திகை 2 ஆம் பாதம், பாவம்-14) தொழில் புரியும் அழகிய மணமகள் தேவை.

தொடர்பு:- 0712124021

### வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

இல.11, கதிரவேலு ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணத்தில் 4 ¾ பரப்புக் காணியும் 4 அறைகள், குளியல் அறை, களஞ்சிய அறை, வரவேற்பு அறை (டவடிவ அறை) வாகன தரிப்பிடம் நல்ல தண்ணீர் கிணறு ஆகியன அடங்கிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0770557486, 0750427160

### வீடு வளவு விற்பனைக்கு

சுழிபுரம் பறாளாய் வீதியில் தபாற்கந்தோருக்கு அருகில் விக்ரோறியாக் கல்லூரிக்கு மிகவும் அருகில் 6 ½ பரப்புக் காணியுடன் வீடு விற் பனைக்கு உண்டு.

தொடர்பு:001 416265 8455, 0779258934, 0774747209.

## மிஸ்டர் கொங்கிறீட்

உங்கள் சகல கொங்கிறீட் தேவைக ளுக்கும் Mr.Concrete

- ★ கொங்கிறீட் கற்கள்
- ★ நிலப்பதிப்புக் கற்கள்
- ★ கொங்கிறீட் வேலித்தூண்கள்

பலமானது! தரமானது!

SLSI இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துக்கு அமைய நவீன இயந்திரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டவை. ISO அங்கீகாரத்தில் உள்ளது.

- ★ வீட்டுக்கு வீடு விநியோகம் செய்யப்படும்
- ★ விநியோகக் கட்டணங்கள் அறவிடப்படும்
- ★ எங்களுடைய பொருள்கள் யாழ்ப்பாணம் வர்த்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

Factory:
புலோலி தெற்கு, பருத்தித்துறை.

www.mrconcrete.lk / Tel: 021 7222 333

### இலங்கை சட்டக் கல்லூரி அனுமதி - 2011
### நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்

கடந்த காலங்களில் மேற்படி பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகளை நடத்தி வரும் சட்ட ஆசிரியர்களால் விரிவுரைகள். கடந்த கால விடைத்தாள்களை உள்ளடக்கிய மாதிரிப் பரீட்சைகள். மதிப்பீடுகள் நடத்தப்படும்.

தகைமை :

01. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் (தமிழ் C ஆங்கிலம் C) உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தி
02. க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பழைய பாடத் திட்டமெனில் 04 பாடங்களில் சித்தி
    புதிய பாடத்திட்டமெனில் 03 பாடங்களில் சித்தி
03. வயதெல்லை : 35 வருடங்கள்

பதிவுகள் : சட்டவள நிலையம் (S.V.R. என்ரபிறைசஸ்), கண்டி வீதி, கிளிநொச்சி.
தொடர்பு: 021 321 2682, 0777705963.

### தவறிவிட்டது

மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு [6664] மருதனார் மடத்திற்கும் தாவடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 0774064153.

### வீடு விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு, முதலாம் ஒழுங்கையில் 3¼ பரப்பு காணியுடன் 3 அறை, சமையல் அறை கோல், போட்டிக்கோ கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: T.P. 0770293801, 0779906064

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதியில் உள்ள வன்னியசிங்கம் வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் [illegible]

**Study & work in UK**

Have you completed A/L ??? What next ???
April / May Intake 2011

COURSES ARE FROM £ 2950 AT HIGHLY TRUSTED & "A" RATED COLLEGES IN LONDON

BA (Hons) Business Administration
(Awarded by University of Wales)

BSc - Technology & E-Commerce
MSc - Innovative Technology
(Awarded by University of East London)

BA - Innovative Business
MBA - Innovative Management
(Awarded by Conventry University)

BA (Hons) Accounting & Finance
BSc (Hons) Computing Science
(Awarded by University of Staffordshire)

BSc (Hons) Hospitality Management
(Awarded by University of Sunderland)

Health and Social Care & Many more...

LONDON 100% VISA GUARANTEED

SPONSOR
வசதியில்லாதவர்களுக்கு வழிகாட்டி ஆலோசனை தரப்படும்.

Offer letter will be arranged within 3 working day's
Minimum deposit required...

NO IELTS REQUIRED

Hotline : 077 155 3323


UK சென்று உங்கள் உயர்கல்வியை தொடர மிகக்குறுகிய காலத்தில் குறைந்த செலவில் ஒழுங்குகள் செய்து தரப்படும்.

BIBM

BRITISH INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (PVT) LTD.
(Member of e2P Allied Group - UK, India, Pakistan)
# 81, 1/1, W.A.De Silva Mawatha, Colombo 06. (Opposite to Royal Hospital, Wellawatta.)
Tel. 011 2586894 / 011 2586895
E-mail : info@bibm.lk | Web : www.bibm.lk

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம்பொடி இளையதம்பி



களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும்,தெருமூடி மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் பொடி இளையதம்பி கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் பொடி - பொன்னமா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பேரின்பநாதன், பவளநாயகி, மகேந்திரராசா (யாழ். கலட்டி றோ.க.த.க.பாடசாலை), கிருஷ்ணராசா (சமுர்த்தி முகாமையாளர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), திருலோகராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தி, நேசராசா, சிறீரஞ்சினி, சத்தியபாமா (பாசையூர் சென். அன்ரனிஸ் றோ.க. ம.வித்தியாலயம்), பாமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சரஸ்வதியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.01.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தெருமூடி மடத்தடி,
புலோலி வடமேற்கு, புலோலி. (சி/575079)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிறீஸ்கந்தராசா வேதநாயகி
(வவா)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிறீஸ்கந்தராசா வேதநாயகி (20.01.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா மாணிக்கத்தின் மகளும் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் சிறீஸ்கந்தராசாவின் மனைவியும் இலங்கேஸ்வரன், காலஞ்சென்ற இலங்கேஸ்வரி மற்றும் சக்தி, அனுசியா, கிருஸ்ணா, ஜெயந்தராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும் மகாலட்சுமி, சரவணபவன் ஆகியோரின் மாமி யாரும் அருணேஸ், சரணா ஆகியோரின் பேர்த்தியும் சுசிலா தேவி, கமலவேணி, ஜெயந்தி ஆகியோரின் சகோதரியும் சிவகந்தராசா, காலஞ் சென்ற மனோகரராசா மற்றும் சிவனேசராசா, மங்கையர்க் கரசி, மல்லிகாதேவி, நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்து னியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக கொக்கு வில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

முருகேசர் வளவு, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி. (109242)

தகவல்:
பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 400 மாணவர் பங்கேற்கும் உடற்பயிற்சி கண்காட்சி

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கை ஆசிரியர்களுக்கானவிளையாட்டுவிழாவையொட்டி யாழ் மாவட்டப் பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 400 மாணவர்களை உள்ளடக்கிய உடற்பயிற்சிக் கண்காட்சி ஒன்று விசேட நிகழ்வாக நடத்தப்படவுள்ளது.

இந்தக் கண்காட்சியை நடத்துவதற்கு எட்டுப்பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றிலிருந்து தலா ஐம்பது மாணவ, மாணவிகள் குறிப்பிட்ட கண்காட்சியில் உள்வாங்கப்படவுள்ளனர்.

இந்த மாணவர்கள் மாணவிகளுக்கான பயிற்சிகள் அடுத்த மாதம் கொழும்பில் இருந்து வரும் பயிற்றுவிப்பாளர்களினால் பாடசாலைகள் ரீதியாக வழங்கப்படவுள்ளன.

இக் கண்காட்சிப் போட்டிப் பயிற்சிகளுக்கு கடந்த ஆண்டு இடம்பெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில் முன்னிலை பெற்ற பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை புனித கன்னியர் மடம் மகாவித்தியாலயம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (86)

# குறுக்கறுத்து ஓடும் போட்டி வெற்றி பெற்றோர் விவரம்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான குறுக்கறுத்து ஓடும் போட்டியில் வெற்றியீட்டியோரின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

ஆண்களுக்கான 12 கிலோ மீற்றர் தூர ஓட்டத்தில் முதல் மூன்று இடங்களை பெற்றோர்:-

கே. ஜெயந்தன் (யாழ். மாவட்டம்) முதலாமிடம், வி.லோகதரன் (கிளிநொச்சி மாவட்டம் இரண்டாம் இடம், கே.நவநீதன் (வவுனியா மாவட்டம்) மூன்றாமிடம்-

பெண்களுக்கான எட்டு கிலோ மீற்றர் தூர ஓட்டத்தில் முதல் மூன்று இடங்களை பெற்றோர்:-

பி.விமலாதேவி (கிளிநொச்சி மாவட்டம்) முதலாமிடம்,எஸ். எழிலரசி (வவுனியா மாவட்டம்)இரண்டாமிடம், ஆர்.காவேரி (யாழ். மாவட்டம்) மூன்றாமிடம்-

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வட மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் தி.இரசாநாயகமும் கலந்துகொண்டனர். (த-23)



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே 'ரைக்கொண்டோ' கலையை பிரபல்யம்படுத்தும் முகமாக நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பயிற்சி முகாமுக்கு வருகை தந்த கொரியா நாட்டுப் பயிற்றுநர் மற்றும் குழுவினர். (த-23)

# மாகாண மட்டத்தில் மூன்று போட்டிகள்

வலி.வடக்கு, ஜன.23

அகில இலங்கை ஆசிரியர்களுக்கு இடையே நடைபெறவுள்ள விளையாட்டு விழாவில் மூன்று பெரு விளையாட்டுப் போட்டிகள் மட்டும் மாகாண மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் அணிகளிடையே நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் மற்றும் ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி ஆகியவையே மாகாண மட்டத்தில் ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு போட்டிக்கும் தலா இரண்டு அணிகளை மட்டும் அனுப்பி வைக்க வேண்டும்.

அகில இலங்கை ஆசிரியர்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டு நான்காவது ஆண்டை எட்டியுள்ள போதிலும் தற்போது நடைபெறும் போட்டி மூன்றாவது போட்டி என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-86)

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை பெப்ரவரியில்

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை திட்டமிட்டபடி பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும். என்று யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் மு.பிரான்சிஸ் தெரிவித்தார் அவர் மேலும் கூறுகையில்-

யாழ். உதைபந்தாட்ட லீக் ஊடக பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பம் அனுப்பிய பரீட்சார்த்திகள் அனைவருக்மான விசேட வகுப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இதில் விண்ணப்பதாரிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டும் என்றார். (த-23)

# பயிற்சி முகாம்

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையே 'ரைக் கொண்டோ' கலையினை பிரபலபடுத்துமுகமாக இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஒரு நாள் பயிற்சி முகாம் இடம்பெற்றது.

இதில் 100 இற்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கு கொண்டனர். இவர்களுக்கான பயிற்சிகளை கொரியாவைப் சேர்ந்த கீ. சூலி வழங்கினர்.(23)

# விலகுகிறார் சிமித்

உலகக்கிண்ணப் போட்டியுடன் ஒருநாள் அணித் தலைவர் பதவியிலிருந்து விலகவுள்ளதாக தென்னாபிரிக்கக் கப்டன் சிமித் அறிவித்துள்ளார்.

இதற்கான முடிவை ஏற்கனவே எடுத்துள்ளதாகவும் உலகக்கிண்ணம் முடிந்ததும் அறிவிக்கவுள்ளதாகவும் சிமித் கூறியுள்ளார்.

இதனால் அவருக்கும் 35 வயதை எட்டியுள்ள கலீஸுக்கும் தென்னாபிரிக்காவுக்கு கிண்ணத்தை பெற்றுக் கொடுக்க நல்லவாய்ப்பு என்பதோடு கடைசி வாய்ப்பும் இதுவேயாகும்.

அதேநேரம் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் விளையாடும் 15 பேர்கொண்ட தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. புதுமுக வீரரும் லெக்ஸ் பின்ருமான இம்ரான் தாஹிர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் இதுவரை சர்வதேச போட்டியில் விளையாடியதில்லை. இவர் பாகிஸ்தானில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

போட்டி நடைபெறவுள்ள இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் மைதானங்கள் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்பதாலேயே தென்னாபிரிக்க அணியில் தாஹிர் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேசமயம் 1999, 2003, 2007 உலகக் கிண்ணத்தில் விளையாடி வரும் சிரேஷ்ட விக்கெட் காப்பாளருமான மார்க் பவுச்சர் அணியில் சேர்க்கப்படவில்லை, சகலதுறை வீரரான அல்பி மோர்கலும் அணியில் இடம்பெறவில்லை. (த)

# கொச்சி அணியில் கங்குலி



இந்திய முன்னாள் கப்டன் கங்குலி ஐ.பி.எல். போட்டிகளில் கொல்கத்தா அணி கப்டனாக செயற்பட்டு வந்தார். ஆனால் வருகிற ஐ.பி.எல். போட்டியில் அவரை கொல்கத்தா அணி தேர்வு செய்யவில்லை.

அதுமட்டும் அல்ல. மற்ற அணிகளும் கூட அவரை ஏலம் எடுக்க வில்லை. இது கொல்கத்தா வீரர்களை கொந்தளிக்க செய்தது. கங்குலி இல்லாமல் கொல்கத்தா அணியா? என்று கொந்தளித்த அவர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதையடுத்து கொல்கத்தா அணி உரிமையாளர் நடிகர் ஷாருக்கான், கங்குலி இல்லாமல் கொல்கத்தா அணி இல்லை என்று கூறினார். கங்குலியை கொல்கத்தா அணி நிர்வாகியாக சேர்க்க முயற்சித்தார். ஆனால் இதற்கு கங்குலி சம்மதிக்கவில்லை.

கொல்கத்தா அணி நிர்வாகியாகவோ அல்லது வீரராகவோ இடம்பெற மாட்டேன் என கூறி விட்டார். இந்த நிலையில் கொச்சி அணி கங்குலியை தங்கள் அணியில் சேர்த்துக் கொள்ள முயற்சிக்கிறது.

இதற்காக கங்குலியிடம் ரகசிய பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. இது சம்பந்தமாக கொச்சி அணி ஆட்சி மன்றகுழு உறுப்பினர் ஒருவர் கூறும் போது கங்குலியை சேர்த்துக் கொள்ள கிரிக்கெட் சங்கம் எதிர்ப்பு தெரிவிக்காது. மற்ற அணிகளும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதால் நாங்கள் கங்குலியை சேர்த்து கொள்வோம்.

இதற்கு விதி முறைகளும் விதி விலக்கு அளிக்கும் என கருதுகிறோம் என்றார். ஆனால் கங்குலி என்ன மனநிலையில் இருக்கிறார்? என்று தெரியவில்லை. அவர் கொச்சி அணியில் [illegible] விடுவாரா? என்பது இனிமேல் தான் தெரியவரும். (த)

# இன்றைய ஆட்டம்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் கடந்த வருடம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் தொடர்ச்சி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

திக்கம் இளைஞர் விக. எதிர் சக்கோட்டை சென்.சேவியர் விக. மோதவுள்ளது. (23)



வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கிடையே யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி 12 வயதுப் பிரிவு பெண்கள் பிரிவினருக்கான போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி அற்றியா சாந்தனாவுக்கு இலங்கை மேசைப் பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் சந்தனப் பெரேரா சான்றிதழ் வழங்குகிறார். (த- 23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கியது நியூசிலாந்து; அடிபணிந்தது பாகிஸ்தான்



பங்களாதேஷிடமும் தோல்வி; இந்தியாவிடமும் அடி மேல் அடி; போதாதற்கு சொந்த மண்ணிலும் பாகிஸ்தானிடம் டெஸ்ட்டை பறி கொடுத்து, துவண்டு போயிருந்தது நியூஸிலாந்து . தீடீரென வெகுண்டெழுந்தது. கண்டதொரு பெருவெற்றி நேற்று. அடங்கியது பாகிஸ்தான். சவுத் லீ சரித்தார் விக்கெட்டுக்களை. பாகிஸ்தான் ஆட்டம் கண்டது அத்திபாரத்துடன்.

சுழற்றினர் நாணயத்தை. வென்றனர் பாகிஸ்தானியர். வந்தனர் களத்துக்கு துடுப்பெடுத்தாட. ஆரம்பிக்க இறங்கினர் கம்ரான் அக்மல்- மொகமட் ஹவீஸ்.சீரான இடைவெளியில் ஒவ்வொருவராகப் பவிலியன் திரும்பினர். அவர்கள் நிலைக்க இடம் கொடுக்கவில்லை நியூஸிலாந்து. பிரித்தெடுத்தார் சவுத் லீ. ஹவீஸ் ஓட்டமே எடுக்கவில்லை. அக்மல் எட்டுடன் முடித்தார். யுனிஸ்கான்தான் நம்பிக்கை. இருந்தாலும் மறுமுனையில் சரிவு. வந்தவர்களும் நிற்கவில்லை. விடைகொடுத்தனர் தமது ஆட்டத்துக்கு. அஷ்டாஸ் சவீக் நான்கு மட்டுமே பெறுதி. சிறியதொரு இணைவு யுனிஸ்கான்-மிஸ்பா உல் ஹக். யுனிஸ்கான் வெளியேறினார் பெனட் பந்தில். 24 ஓட்டங்கள்; சிறியதொரு கௌரவம் யுனிஸ்க்கு. நிலைத்து விட்டார் மிஸ்பா. விடவில்லை பெனட், சவுத் லீ பந்து வீச்சு. ஒரு முனை இழப்பு. மறுமுனை பொறுப்புடன் தொடர்கை. பூம் பூம் அப்ரிடி கைவிட்டார் அதிரடியை. நிலைக்க முடியவில்லை அவராலும். 15 ஓட்டத்துடன் நடையை கட்டினார். பின்வரிசையையும் குலைத்தார் ஓரம். இறுதியில் 125 நியூஸிலாந்துக்கு இலக்கு.

பாவம் பாகிஸ்தான் எதிர்கொண்டதோ 37.3 ஓவர். அதற்குள் சகலரும் சுருண்டனர். கொஞ்சம் ஆறுதல் மிஸ்பா. அவராலும் முடிந்தது 50 மட்டுமே. சிக்ஸர் ஒன்றும் பவுண்டரி மூன்றும் சொல்லும் படியாக இவருக்கு.

மிரட்டி எடுத்த சவுத் லீ சிறப்புப் பெறுதி. 33 கொடுத்து. பெற்றது 5 விக்கெடுகள். பெனட் 3, ஓரம் இரண்டு. இது பந்து வீச்சு முடிவு.

இலக்கோ இலகு; வெற்றியோ உறுதி; இந்த நிலையில் வந்தனர் குப்தில்-ரைடர். விளாசி அடித்தனர் பந்து களை. எகிறியது ஓட்ட வேகம். அள்ளிக் கொடுத்தார் அக்தர். ரைடர் அடித்தார் அரைச்சதம் . எதிர் கொண்டார் 34 பந்துகள். இரண்டு சிக்ஸர் ஆறு பவுண்டரி. இவர் மட்டுமே ஆட்டமிழப்பு நீயூஸிலாந்து சார்பில். 55 ஓட்டம் இவரது சான்று. பவிலியனுக்கு அனுப்பியவர் சொகைல் ரன்வீர். இலகுவில் வெற்றி வந்து வீழ்ந்தது நீயூஸிலாந்திடம். இழப்பு ஒரு விக்கெட். எஞ்சியது 32.4 பந்துப் பரிமாற்றம். நீயூஸிலாந்தின் எழுச்சிக்கு இதுவே சாட்சி. ஆட்ட நாயகன், பாகிஸ்தானுக்கு சிம்ம சொப்பனம் கொடுத்த சவுத் லீ. (15)

## ஹெனின் பரிதாபம்

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் நேற்று நடை பெற்ற மூன்றாவது சுற்று ஆட்டம் ஒன்றில் தரவரிசையில் 13ஆவது இடத்தில் இருக்கும் பெல்ஜியம் வீராங்கனையான ஜஸ்டின் கெனின், தரவரிசையில் 26ஆவது இடத்திலிருக்கும் ரஷ்ய வீராங்கனையான குஸ்னெட் சோபாவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

ஆட்டம் ஆரம்பமாகியது முதல் சிறப்பாக ஆடிய குஸ்னட்சோபா, முதல் செற்றை 6-4 என்ற கணக்கில் விரைவாகக் கைப்பற்றினார்.

இரண்டாவது சுற்றில் சுதாரித்து ஆடி ஜஸ்டின் கடைசிவரை போராடினார். எனினும், தனது அதிரடி மூலம் ஜஸ்டினின் ஆட்டத்தை முறியடித்து ஆடிய குஸ்னெட் சோபா, இரண்டாவது செற்றை 7-6 என்ற செற் கணக்கில் வென்றார்.

இறுதியில் 6-4, 7-6 என்ற செற் கணக்கில் சோபா வென்று நான்காவுது சுற்றுக்கு முன்னேறினார்.

அதேவேளை, ஜஸ்டின் ஆஸ்திரேலிய டென்னிஸ் தொடரைவிட்டு பரி தாபமாக வெளியேறினார்.

## இலங்கை வீரர்களை பணயக் கைதிகளாக்க தீவிரவாதிகள் முயன்றிருந்தமை அம்பலம்!



லாகூர், ஜன.22

இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்களைக் கடத்திச் சென்று பணயக்கைதிகளாக்க தீவிரவாதிகள் முற்பட்டிருந்தமை தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

2009ஆம் ஆண்டு பாகிஸ்தானின் லாகூர் நகரில் இலங்கை கிரிக்கெட் அணி மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள லக்ஷர் ஈ ஜாங்கி தீவிரவாத அமைப்பின் உறுப்பினர் அப்துல் வஹாப் உமர் இத்தக வலை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு எதிரான இத்திட்டம் பாகிஸ்தானின் வஸிரிஸ்தான் பகுதியில் திட்டமிடப்பட்டது எனவும் அவர் கூறியுள்ளார்.

இத்தாக்குதலின்மூலம், இலங்கைக் கிரிக்கெட் வீரர்களை பணயக் கைதிகளாக்கி, ஏற்கனவே கைதாகியிருந்த தமது உறுப்பினர்களை விடுவிப்பதே நோக்கமாக இருந்தது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். மேற்படி தாக்குதலில் 5 இலங்கை வீரர்கள் காயம டைந்த அதேவேளை, பாகிஸ்தான் பொலிஸார் 6 பேருடன், வான் சாரதியொருவரும் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிண்ணம் வெல்ல இந்திய அணிக்கு வாய்ப்பு



உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பு இந்திய அணிக்கு அதிகமுள்ளதாக முன்னாள் அவுஸ்திரேலிய வீரர்மைக்கேல் பெவன் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் இணைந்து 10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை நடத்துகின்றன. இதற்கான 15 பேர் கொண்ட அணியை ஒவ்வொரு அணிகளும் அறிவித்துள்ளன.இந்திய அணியில் கப்டன் டோனி,சச்சின்,சேவக்,காம்பிர் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

இதுகுறித்து முன்னாள் அவுஸ்திரேலிய வீரரும் ஐ.பி.எல். தொடருக்கான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைமை பயிற்சியாளருமான மைக்கல் பெவன் கூறியதாவது;

சமீபகாலமாக இந்திய அணியின் செயல்பாடு சிறப்பாக உள்ளது.அடுத்த மாதம் தொடங்கவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் சம்பியன் பட்டம் வெல்லும் தகுதி இந்திய அணிக்கு உள்ளது. டெஸ்ட் அரங்கில் நம்பர்1 இடத்திலுள்ள ஒரு நாள் அரங்கில் நம்பர்2 இந்திய அணி சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நீண்ட நாள்கள் ஆதிக்கம் செலுத்துமென நம்புகிறேன்.

போட்டியில் இந்திய வீரர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவது வெற்றிக்கு பலம் சேர்க்கிறது.உலகக் கிண்ணத் தொடருக்காக சிறந்த வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.இவர்கள் சொந்த மண்ணில் நிச்சயம் சாதிப்பார்கள்.ஒரிசாரஞ்சி அணி [illegible] லெவன் பஞ்சாப் அணியின் தலைமை பயிற்சியாளராக நியமித்தது [illegible] தேவையான பயிற்சியளித்து அணியின் வெற்றிக்கு நிச்சயம் கைகொடுப்பேனெனக் கூறினார்.



27 நாள்களே

உதயன் உலகக்கிண்ண கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள். எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை. பார்த்த அனுபவங்கள். ரசித்த போட்டிகள். எழுந்த எண்ணங்கள். எழுதுங்கள்.... எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள். சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தியப்பிரமாணம் செய்ய மறுக்கிறார்

ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பின் சரத்பொன்சேகாவின் வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் லஷ்மன் நிபுணாரச்சி சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்ததையடுத்து நாடாளுமன்ற ஆசன வெற்றிடத்தை நிரப்ப ஒருவரை நியமிக்கும் படி நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக கித்துல்கொட தேர்தல் ஆணையாளரை எழுத்து மூலம் கோரியுள்ளார்.

ஏற்கனவே விருப்பு வாக்குகளின் அடிப்படையில் பொன் சேகாவுக்கு அடுத்ததாகவிருந்த லஷ்மன் நிபுணாராச்சியின் பெயரை தேர்தல் ஆணையாளர் முன்மொழிந்தார். சட்டத்தின் பிரகாரம் தேர்தல் ஆணையாளரால் முன்மொழியப்பட்டவர் சபாநாயகர் முன்னிலையில் மூன்று மாதத்திற்குள் சத்திய பிரமாணம் செய்ய வேண்டும். எவ்வாறாயினும் கடந்த ஜனவரி 14ஆம் திகதியு டன் மூன்று மாதம் கடந்துவிட்ட நிலையில் நாடாளுமன்ற ஆசனத்திற்கு வெற்றிடம் உள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க கித்துல் கொட தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

### வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிக்குள் அறை வாடகைக்குத் தேவை
தொடர்பு-0750451950

### விற்பனைக்கு

லான்மாஸ்டர் (குவாட்டா) யப்பான் (புதியது)- கலப்பை, டிஸ் உடன் விற்பனைக்கு
0777750391

### வீடு விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் இருபாலை வீதியில் 3¼ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. 3 அறை, 2கோல், இணைந்த குளியலறை, வெட்டுக் கிணறு ஆகியவற்றுடன் நல்ல நிலையில் வீடு உள்ளது. பின்னாலுள்ள 1½ பரப்புக் காணி இன்னொரு வீடு கட்டுவதற்கான வசதியுடன் உண்டு. நியாயமான விலையில் வழங்கப்படும்.
தொடர்பு:-0775464033

### தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் என்ற முகவரி கொண்ட இரத்தினவேற்பிள்ளை கேதீஸ்வரநாதன் என்பவரது இல.672602530V கொண்ட தேசிய அடையாள அட்டை யாழ்ப்பாணத்துக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் மேற்காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

### விற்பனைக்கு / குத்தகைக்கு

பாட்டு வாள் பட்டடை, றோதை வாள் பட்டடை மற்றும் இரண்டு இயந்திரங்களும் உடன் விற்பனைக்கு / குத்தகைக்கு உண்டு.
தொடர்பு:- 0750429711

### Italy Employment Work Visa

பெற்றுத் தரப்படும் விசா கிடைத்த பின்பே கட்டணம் அறவிடப்படும்.

வெளிநாட்டுக்கார விட்டிற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.

தொடர்பு:0779941915
email: ddevlop@yahoo.com

### தவறிவிட்டது

கடந்த 20.01.2011 அன்று கல்வியங்காட்டிற்கும் கைதடி அ9 வீதிக்கும் இடையில் VF 2054 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம் வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், கைய டக்கத் தொலைபேசி என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0773760575 அல்லது 2228200 என்ற இலக்கத் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

### தவறிவிட்டது

கிருஸ்ணர் கமலசிங்கம் என்பவருடைய தே.அ. அட்டை (413152216V) திருநெல்வேலி சந்தையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.
தொடர்பு:
பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்.
0776273374, 021 3207330.

## மரண அறிவித்தல்



### செல்வரெத்தினம் சுதாகரன்

வேலணை கிழக்கு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.65/6, வாசல வீதி, கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்வரெத்தினம் சுதாகரன் நேற்று (22.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரெத்தினம் மற்றும் முத்துலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் அன்ன லெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், மதனிகாவின் அன்புக் கணவரும், சுதாந்தினி, சுதாகுமார், சுதர்ஷன், சுயந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஷ்பராஜா (நோர்வே), ஐங்கரன் (ஜேர்மனி), இரஞ்சிதமலர், வனதா, சுரேந்தினி ஆகியோரின் மைத்துனரும், பிரகாஷ், விந்துஷா, விஷ்னுகா ஆகியோரின் தாய்மாமனாரும் விதுரனின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை 65/6, வாசல வீதி, கொட்டாஞ்சேனையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மாலை 6 மணியளவில் வேலணைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நாளை (24.01.2011) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் கிரியைகள் நடைபெற்று மாலை 4 மணியளவில் சாட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(ஒ/575088)

## கண்ணீர் அஞ்சலி



21.01.2011 காலமான எமது பணிமனை அலுவலகப் பணியாளர்

### அமரர் அந்தோனி சகாயதாசன்

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், இரங்கல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
உதவி அரசாங்கஅதிபர் பணிமனை,
நெடுந்தீவு.

உதவி அரசாங்க அதிபரும்,
உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.
(109903)




### மணமகள் தேவை

கௌரவ குடும்பம் R/C 77ஆம் ஆண்டு B.Com ஆசிரியருக்கு மணமகள் தேவை. NON R/C யும் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 0213216119, 0212221448. T.வசந்தி

### Visa சேவை

UK.Canada போன்ற நாடுகளுக்கு வேலையுடன் கூடிய கற்கைநெறி 100% உத்தரவாதத்துடன் சேவை
தொடர்பு:- 0779218444, 0113042949

### காணி விற்பனை

யாழ். மாநகர எல்லை பிரதேசத்துக்குள் K.K.S வீதிக்கருகில் வீடு கட்டுவதற்கு தேவையான பொருள்களுடன் கிணறு, தண்ணீர் தாங்கி, மலசல கூடம், போக்குவரத்துப் பாதைகளுடன் 02 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விலை, பொருள்கள், இடம் பார்வையிட்டு தீர்மானிக்கலாம். தரகர்கள் தேவையில்லை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்
தொ.பே.இல:- 0770555760

### வாகனம் விற்பனைக்கு

ரொயாட்டா ஹைஎஸ் பசஞ்சர் (கைறூப்ஃ) 61-XXXX இலக்கமுடைய வான் விற்பனைக்குண்டு.
0771566661

### விற்பனைக்கு

பெரிய ஜப்பான் லேத் (கற் கழற்றும் மொடல்) விற்பனைக்குண்டு.
தொடர்பு 0779182717, 0214900974

### பிரத்தியேக வகுப்புக்கள்

MATHEMATICS
* ENGLISH MEDIUM Grade 06 to O/L
* தமிழ் மொழி மூலம் தரம் 05 முதல் O/L வரை

T.P:- 0776253876

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Mitsubishi lancer 14Sriகார் (White) உடன் விற்பனைக்குண்டு.
T.P:- 0775343401

### காணி விற்பனை

சுன்னாகம் பிரதேசத்தில் K.K.S வீதி, சந்திக்கு அருகில் நிறுவனம், வங்கி, களஞ்சியம், வியாபாரஸ்தாபனம் அமைக் கக் கூடிய கிணற்றுப் பங்குடன் கூடிய 01 பரப்பு அளவிலான காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொ.பே.இல:- 0750484976

### அருள் முருகன் திருமணசேவை

ஆசிரியர்கள், அரச வங்கி உத்தியோகத்தர்கள், Doctors, Engineers, Lecturers உட்பட பெருமளவிலான உள்நாட்டு/வெளிநாட்டு மணமக்களில் விரும்பிய மணமக்களை தெரிவு செய்யலாம். முன்னறிவித்தலுடன் வருவது வசதியானதாகும். T.P:- 2229334

03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன், (Cosy Restaurant lane) (ஆரியகுளச் சந்திக்கு, சரிமாகூச ஸ்ரீவ லேன்) ஸ்ரான்லிறோட் யாழ்

### THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில
By:-N.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426, (302)
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம், ரீளக் வீதி, சங்கானை.
T.P:- 0776751649

### ஆட்டுக்கடா விற்பனைக்கு

ஆட்டுக்கடா விற்பனைக்கு உண்டு. சினைப் படுத்தலுக்கும் ஏற்றது.
தொடர்பு-0213007974




### திருமுருகன் கொம் நெற்

இல–259, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
இல–2b நெல்சன் பிளேஸ் கொழும்பு
இல– 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல– 5, திருநகர் ...
இல– 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல– 44, மில் றோட் ,வவுனியா.




### பிறவுண் அன்ட் கம்பனி பிஎல்சி - PQ 25

வருடாந்தக் கையிருப்புக் கணக்கெடுப்புப் பற்றிய அறிவித்தல்

பிறவுண் அன்ட் கம்பனி பிஎல்சியின் எல்லாப் பிரிவுகளும் விற்பனை நிலையங்களும் பிறவுண் கம்பனிகள் தொகுதியின் பின்வரும் துணை நிலைக் கம்பனிகளும் வருடாந்தக் கையிருப்புக் கணக்கெடுப்பின் நோக்கத்திற்காக 2011 ஜனவரி 29 (சனி), 30 (ஞாயிறு) ஆகிய தினங்களில் மூடப்பட்டிருக்கும் என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

நிளவன் பேர்க் (பிறைவேட்) லிமிட்டெட்
பிறவுண்ஸ் குறூப் இன்டஸ்ரீஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
பிறவுண்ஸ் ரேடியேட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
(முன்னர் பிறவுண்ஸ் ஈமோ இன்டஸ்ட்ரியல் புரோடக்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் என அறியப்பட்டது.)
சியாங் லங்கா (பிறைவெட்) லிமிட்டெட்
ஈஸ்ட் வெஸ்ட் டெக்ஸ்டைபில்ஸ் லங்கா லிமிட்டெட்

பிறவுண்ஸ் விற்பனை நிலையங்கள் 2011 ஜனவரி 29 (சனி), 30 (ஞாயிறு) மற்றும் 31 (திங்கள் ஆகிய தினங்களில் மூடப்பட்டிருக்கும்.

481, டி.பீ.ஜயா மாவத்தை,
கொழும்பு 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

க்ரோவ்லி இவ்வாறு கூறினார்.

"இலங்கை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நாம் ஆதரிக்கிறோம் என்பதைத் தெரியப்படுத்தி உள்ளோம். இச்செய முறை இன்னும் இடம்பெற்று வருகிறது. சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறியவர்கள் அவற்றுக்குப் பொறுப்பாளிகளாக்கப்பட வேண்டும் என நாம் திடமாக நம்புகிறோம். இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்களுக்கு பதில் கூறும் நிலைமை இலங்கையின் தேசிய நல்லிணக்கத்திற்கு அவசியமானதென நம்புகிறோம்'' என க்ரோவ்லி கூறினார்.

ஐ.நா. நிபுணர் குழுவுக்கான எதிர்ப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு கைவிட வேண்டும் என அமெரிக்கா கருதினால் ஏன் அமெரிக்க ராஜதந்திரிகள் அவரை சந்திக்கக் கோரவில்லை என க்ரோவ்லியிடம் கேட்கப்பட்டது. "இலங்கையின் நடவடிக்கைகள் எவ்வாறானவை அறிய நாம் காத்திருந்து பார்ப்போம். குறைபாடுகள் இருப்பின் அதைக் கூறத் தயங்க மாட்டோம்'' எனப் பதிலளித்தார். (உ)

## பொலிஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

✱ சப் இன்ஸ்பெக்டர் தலைமையிலான புலனாய்வுப் பொலிஸ் குழுவொன்று யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டு விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றது.

✱ காங்கேசன்துறை, பலாலி பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸார் சிவில் உடையில் கிராம மக்களுக்குச் சென்று மக்களிடம் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர்.

வன்முறைச் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வருவதில் பொலிஸ்மா அதிபர் அக்கறையாக உள்ளார். இதற்காகப் பல்வேறு அறிவுறுத்தல்களை அவர் எமக்கு விடுத்து வருகின்றார்.

இங்கு இயல்பு நிலையைக் குழப்புவதற்குச் சிலர் சாதாரண சம்பவங்களையும் பெருப்பித்துக்காட்ட முனைந்துள்ளனர். இந்தச் சம்பவங்களைப் பயன்படுத்தி குடாநாட்டு நிலைமை மோசமானது என்று காட்ட முனைகின்றனர். சுமுகநிலையைக் குழப்புபவர்கள் முன்பு இருந்தது போன்று இன்றும் இருக்கின்றார்கள்.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது குறைவான சம்பவங்களே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளன. அந்தச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்தி விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம்.

பொலிஸாரும் படையினரும் நட்புடன் செயற்படுகின்றனர். அவர்களுக்கு இடையிலான நல்லுறவு சீராக உள்ளது. இரு தரப்பினரும் இணைந்து குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார் அவர். (ஒ-ஐ)


### ஈஸ்வரன் போக்குவரத்து சேவையில் பொருள் ஒப்படைத்தோர் கவனத்துக்கு

கடந்த 19ஆம் திகதி இரவு 7.00 மணியில் இருந்து 20ஆம் திகதி இரவு 7.00 வரை கொழும்பு டாம் வீதியில் அமைந்துள்ள ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவைத் தலைமைக் காரியாலயத்தில் பொருள்களைக் கையளித்தவர்களை நாளை (24.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு போக்குவரத்துச் சேவையின் உரிமையாளர் அறிவித்துள்ளார்.

அந்தப் பொருள்களில் சில தீ அனர்த்தம் ஒன்றில் சிக்கியுள்ளதால் அதற்கான பணப் பெறுமதியை வாடிக்கையாளருக்கு வழங்க வசதியாக அவற்றின் சிட்டைகளை யாழ்ப்பாணத்தில் அல்லது கொழும்பில் உள்ள தமது காரியாலயங்களில் ஒப்படைக்குமாறும் அவர் அறிவித்துள்ளார்.

201 பி, டாம் வீதி, கொழும்பு | இல.1, கரடிப்போக்கு, கண்டிவீதி, கிளிநொச்சி. | 69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


### மரண அறிவித்தல்



#### இரங்கநாதன் குணமணி

மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரங்கநாதன் குணமணி 20.01.2011 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - பூரணம் தம்பதியரின் மகளும் இரங்கநாதன் (கிளி) அன்பு மனைவியும் சிந்துஜன், சிந்துஜா, மோனிஷா (யா/வீர.மா.வி.) ஆகியோரின் அன்புத் தாயும் சுப்பிரமணியம், கிளி, ராணி, சுமதி, மணி, தேவி, நந்தினி (பிரான்ஸ்), கமலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஸ்ணபிள்ளை - காலஞ்சென்ற இலட்சுமி தம்பதியரின் மருமகளும் ஜெகநாதன் (U.K.) புஸ்பநாதன் (Swiss), யோகநாதன் (U.K.), இலங்கேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

தகவல்:
மருமக்கள் பேரப்பிள்ளைகள்,
(இ. நிசாந்தன், சர்மிளன்)

## ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம் வடகிழக்கு கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தின் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மூலமூர்த்தி பூசையும், வசந்த மண்டப பூசையுடன் சுவாமி வீதி வலம் வருவார். (311)

## ஐ.நா. நிபுணர் குழுவுடனான பேச்சை துண்டித்தது அரசு

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவுடனான நேரடி பேச்சுக்களை இலங்கை துண்டித்துள்ளதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு தலைமை தாங்கியவரும் தற்போது ஐ.நாவுக் கான பிரதி இலங்கைத் தூதுவராகவும் உள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, ஐ.நா.செயலாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு எழுதிய கடிதமொன்றில், இலங்கை அரசாங்கம் பான் கீ மூனின் ஆலோசகர்களுடன் பேசும் எனவும் போர்க்குற்றங்களுக்கான விசாரணைக் குழுவுடன் பேச்சு நடத்தாது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கையானது ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பப்பதற்கான காலம் முடியும் வரை கடத்துவதற்கானதாக இருக்கலாம் என ஐ.நா. அதிகாரிகள் கருதுவதாக டர்டில் பே இணையத்தளம் தெரிவித்துள்ளது.

## மிகப் பழமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானத்தின் ஒரு பகுதி, ஒருபக்க தேவ கோஸ்டம், கர்ணக்கூடு, தூபி என்பவற்றையும் அடையாளம் காணக்கூடியதாக உள்ளதுடன் ஏனைய பகுதிகள் அழிவடைந்த நிலையிலேயே இந்த ஆலயம் காணப்படுகின்றது.

கடலில் இருந்து எடுக்கப்பட்ட கோறல் கற்கள், சுதை, சுண்ணாம்பு என்பவற்றைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ள இவ்வாலயத்தில் காணப்படும் சிற்பவேலைப்பாடுகள் அதன் பழமையை எடுத்துக் காட்டுகின்றன.

சுற்றுமதில்களையும், பரிவாரத் தெய்வங்களையும் கொண்டிருந்தமைக்கான ஆதாரங்களும் அங்கு காணப்படுகின்றன.

அவற்றில் கோயிலின் முன் மண்டபத்தில் இருந்து 70 அடி தொலைவில் அமைந்துள்ள பரிவார தெய்வத்துக்குரிய ஆலயம் ஒன்று முழுமையான தோற்றத்துடன் காட்சியளிக்கின்றது.

சிறுகுடிசைகளையும், அரிதான சிமெந்து வீடுகளையும் கொண்ட இப்பிரதேசத்தில் இந்த ஆலயம் பிற்காலத்தில் தோன்றியிருக்கும் என கூறமுடியாதுள்ளது எனவும் ஆனையிறவுப் பாதை பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்னர் ஆதிகால, இடைக்கால வரலாற்றில் யாழ்ப்பாணத்திற்கு - தென்னிலங்கைக்கும் இடையிலான தொடர்பு இந்த ஆலயம் அமைந்துள்ள பிரதேசத்தின் ஊடாக இருந்தமைக்கு உறுதியான ஆதாரங்கள் உண்டு.

1450 ஆம் ஆண்டில் கோட்டை மன்னன் செண்பகப்பெருமாளின் படை இப்பிரதேசத்தின் ஊடாகவே யாழ்ப்பாணம் வந்ததாக 15ஆம் நூற்றாண்டில் எழுந்த குயில்விடு தூதுப் பிரபந்தம் கூறுகின்றது என்றும் ஆய்வுக்குழுவினர் குறிப்பிடுகின்றனர்.

தற்போது ஆலயத்திற்கு அருகில் சென்று ஆய்வுகளை மேற்கொள்வதில் பாதுகாப்புப் பிரச்சினைகள் இருப்பதால் முழுமையான விவரங்களை அறியமுடியாதிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்.பல் கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் க.புஸ்பரட்ணம், வடமாகாணத் தொல்லியற்துறைப் பொறுப்பாளர் ஜெந்தா ரஞ்சித் வியேவர்த்தன, யாழ். கோட்டைப் புனர்நிர்மாணத் தொல்லியல் ஆய்வு உத்தியோகத்தர் பாலசுப்பிரமணியம், கபிலன் ஆகியோர் ஆய்வுகளை மேற்கொள்ளச் சென்றிருந்தனர். (ஒ-10)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன. அதன் ஒரு கட்டமாக இன்று (நேற்று) முதல் குடாநாடு முழுவதும் இராணுவத்தின் இரவு ரோந்து நடவடிக்கை நடைமுறைக்கு வருகின்றது'' - என்று. யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க.

குடாநாட்டில் தொடரும் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் போன்ற சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் யாழ். செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலர்கள், பாதுகாப்பு பொலிஸ் அதிகாரிகள், சமயப்பெரியார்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தளபதி பேசுகையில் மேலும் கூறியதாவது:-

### ஜனாதிபதி கரிசனை

அண்மையில் - யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒருநாள் எம்முடன் தங்கியிருந்தார். அப்போது யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்செயல் சம்பவங்கள் குறித்து விவாதித்தார். அத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெற அனுமதிக்கக்கூடாது என்று எம்மிடம் தெரிவித்தார். வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவருவதில் அவர் கரிசனையுடன் இருந்தார். அவரின் வழிகாட்டலில் நடவடிக்கை எடுக்கவிருக்கிறோம்.

### தகவல் தர ஏற்பாடு

கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்வங்களை ஒப்பிடும் போது, தற்போதைய சம்பவங்கள் பெரிய விடயமாக இல்லை. குடாநாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சம், பீதியை முடிவிற்குக் கொண்டுவர நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

எங்கு எந்தவொரு சம்பவம் நடந்தாலும் உடன் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ, இராணுவ முகாமுக்கோ மக்கள் தகவல் தரலாம். அது குறித்து உடன் நடவடிக்கை எடுக்கப்படும். 24 மணிநேரமும் தகவல் தரலாம். குறிப்பிட்ட பிரதேச தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொள்ள வேண்டிய அதிகாரிகளின் பெயர்விவரங்களை அறிவித்துள்ளோம். அதேநேரம் பொலிஸ் அவசரப்பிரிவுக்காக 119 இலக்கத்திற்கும் தொடர்பு கொண்டு தகவல் கொடுக்கலாம்.

### படையினர் சோதனை

படையினர் சோதனை நடவடிக்கைகளையும், ரோந்து நடவடிக்கைகளையும் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டார்கள். இன்று (நேற்று) இரவு முதல் இரவு ரோந்துப் பணிகளில் படையினர் ஈடுபடுவர். குடாநாடு முழுவதும் இந்தப் பணி இடம்பெறும்.

படையினரால் மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்பாட்டிற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மக்களின் நன்மைக்காக முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைக்கு மக்களின் பங்களிப்பு அவசியம்.

இராணுவம் எவரையும் கைதுசெய்வதில்லை. சிறுவர்களைப் படையினர் கைதுசெய்வதாகக் கூறப்படுவது உண்மையில்லை. சிறுவர்களைக் கவனமாக, ஒழுக்கத்துடன் வளர்க்கவேண்டிய பொறுப்பு பெற்றோர்களின் கைகளிலேயே உள்ளது. பெற்றோர் தமது பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும்.

### மன்னிப்பு ஏதுமில்லை

குடாநாட்டில் இடம்பெறும் சம்பவங்களில் படையினர் சம்பந்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்கு எந்தவித மன்னிப்பும் வழங்கப்பட மாட்டாது. நீதியின் முன் அவர்கள் நிறுத்தப்படுவார்கள்.

மக்கள் மத்தியில் படையினர் நல்லுறவுடன் செயற்படுகிறார்கள். மக்களுக்கு எதிராக செயற்படும் படையினர் தொடர்பாக எந்நேரமும் எனக்கு முறைப்பாடு செய்தால், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். என்றார் அவர் (ஒ-ஐ)

### மரண அறிவித்தல்



#### திருமதி மோகனேஸ்வரி பாலசுப்பிரமணியம்

(Mohana Teacher - ஓய்வுபெற்ற ஆசிரியை, கொழும்பு இந்துக்கல்லூரி)

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்துவந்தவருமான திருமதி மோகனேஸ்வரி பாலசுப்பிரமணியம் லண்டனில் 20.01.2011 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சட்டத்தரணி பாலசிங்கம் பாலசுப்பிரமணியத்தின் (ராதா) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன் (சின்னத்தம்பி மாஸ்ரர்) - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், பாலவேணி (ராஜி, Barrister), பாலகஜந்தன் (கஜன், Engineer) ஆகியோரின் பாசமிகு தாயும் பவானியின் ஏகசகோதரியும், பாலகாந்தன், பாலகுமாரன், பாலச்சந்திரன், பாலசறோஜினி, பாலஜெயந்தி, பாலஜீவனி, பாலசுலோஜினி, பாலராஜாவின் அன்பு மைத்துனியும், செந்தூரனின் அருமை மாமியும், கீரனின் பாசமிகு அம்மம்மாவும், விக்னா, நீலன், சரணி ஆகியோரின் அன்பு பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 26.01.2011 புதன்கிழமை காலை லண்டனில் நேரம் 11.20 மணிக்கு Putney vale மயானத்தில் (Stag Lane, Rochampton, London, Swi53DZ) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"பாலகிரி",*
*கல்லடி ஒழுங்கை,*
*சாவகச்சேரி.*

தகவல்:
மகள் : ராஜி - 07917226002 (U.K.)
மகன் :கஜன் - 07727284129 (U.K.)
தங்கை : பவானி - 07944598052 (U.K.)
மைத்துனி: ஜெயந்தி - 0776153076 (S.L.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை வருகையுடன் சாட்சியப் பதிவுகள் முடிவு

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அம்பாறை மாவட்டத்துக்கான பயணத்துடன் பொது மக்களிடமிருந்து சாட்சியங்களை பதிவுசெய்யும் நடவடிக்கையை ஆணைக் குழு நிறைவு செய்யவுள்ளதாக ஆணைக் குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஷ்மன் விக்ரமாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

பொதுமக்களிடமிருந்து சாட்சியங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கையை எதிர்வரும் 31ஆம் திகதியோடு நிறைவு செய்யத் தீர்மானித்திருந்தோம். எனினும் கிழக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக அம்பாறை மாவட்டத்துக்கான பயணம் ஒத்தி வைக்கப்பட்டதனாலேயே சாட்சியப் பதிவுக்கான காலம் நீடிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களால் வழங்கப்பட்ட சாட்சியங்களைக் கொண்டு இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்காக நீண்ட காலம் தேவையென்பதனாலேயே அம்பாறை மாவட்டத்துக்கான பயணத்துடன் சாட்சியங்களை பதிவு செய்யும் நடவடிக்கையை நிறைவு செய்யவுள்ளதாக லக்ஷ்மன் விக்ரமாராய்ச்சி கூறியுள்ளார்.

வெள்ள அனர்த்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் அம்பாறை மாவட்ட பயணம் எதிர்வரும் பெப்ரவரிமாத நடுப்பகுதியில் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஆணைக்குழுவின் சாட்சிய பதிவு நடவடிக்கை நிறுத்தப்படுவதன் காரண மாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் போன்ற பல முக்கிய தலைவர்கள் சாட்சியமளிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போகலாம் என ஆணைக்குழுவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை மே மாதமளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

2002ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாட்டில் இடம் பெற்ற சம்பவங்கள் மூலம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக முன்னாள் சட்டமா அதிபர் சீ.ஆர்.டி. சில்வா தலைமையில் எட்டு பேர் கொண்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை ஜனாதி பதி மஹிந்த ராஜ பக்ஷ கடந்த வருடம் நியமித்தமை குறிப்பிடத் தக்கது.

**INDIVIDUAL & SMALL GROUP CLASSES**

ECONOMIC for A/L & CIMA
History for O/L
(Tamil & English Medium)
COUNTACT :- T.P - 0770554634

**வாகனப் பெயின்ற்**

30 வருட தொழில் அனுபவமுடையவரால் தங்கள் வாகனங்களுக்கு தரமான முறையில் பெயின்ரிங் செய்து கொடுக்கப்படும்.

பெயின்ரர் துரை,
இல.05, சென்.செபஸ்ரியன் றோட்,
நருநகர், யாழ்ப்பாணம்.
(108754)

**வீடு வாடகைக்கு**

இல.25, பொன்னப்பா லேன், (Bankcrவளவு) வண்ணார் பண்ணையில் 5 அறைகள் சுற்று மதில் கொண்ட வீடு வாடகைக்குண்டு. முதல் வருபவர்களுக்கும் முற்பணம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். ஜனவரி - 25ஆம் திகதி முதல் திருத்திக்கொடுக்கப்படும்

தொடர்பு - அட்சயாகுமார் - 0718246941, 0112203460

**கடையும் வீடும் விற்பனைக்கு**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள கடையுடன் சேர்ந்த வீடும் காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு:- Te. No - 0718454025

AT
Athavan Technology
Security camera, Door phone system,
Finger print attandance, Burgler alarm
No. 111/2, Brown Road,
Kokuvil East, Jaffna.
Tel - 021 222 1875
0750 421 776
Trade Fair
Stall No: 249

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புகளும் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**
**(Centre for International Language Studies)**
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117
(வி/573707)

## சாவகச்சேரியில் கைதான சந்தேகநபர் 15 சம்பவங்களுடன் தொடர்புடையவர்

யாழ்ப்பாணம், ஜன.23

சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் திருட்டுச்சம்பவம் ஒன்று தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நபர் 15 சூறையாடற் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

வடபிராந்திய பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுசில் பெரேரா இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்தவை வருமாறு -

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட ஒருவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டு எம்மிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

அவரை விசாரனை செய்தபோது அவர் 15 சம்பவங்களுடன் சம்பந்தப் பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணைகள் தொடர்வதால் மேலும் பல தகவல்கள் வெளியாகும் என நம்புகிறோம் என்றார்.

யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிவர்த்தன தகவல் தெரிவிக்கையில் குடாநாட்டில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் குறித்து பல்வேறு மட்டங்களில் விசாரணைகள் இடம் பெற்றுள்ளன. 80 சதவீதமான விசாரணைகள் பூர்த்தியடைந்துவிட்டன.

சங்கானையில் குருக்கள் கொலை தொடர்பாக இருபடையினரும் இரு பொதுமக்களும் கைதுசெய்யப்பட்டதைத் தவிர வேறு எவரும் இது வரை கைதுசெய்யப்படவில்லை என்றார் அவர்.

(ஒ-ஐ).

**VACANCIES**
**for**
**CIVIL ENGINEERS / CAD TECHNICIANS in Colombo**

To prepare structural steel shop and erection drawings using x-steel and Auto CAD must have minimum of two years drafting experience in Auto CAD.

Fresh Civil Engineers /
NDT /
NCT holders
can apply for trainee.

Send your CV To e-mail
careerse@weengineers.com
resume on or before 24/01/2011

ESOFT
The Leader in Professional ICT Education
**Esoft Computer Studies**
The Srilankan No 1 for ICT and Business Education

JAFFNA
International 2011
TRADE FAIR
2nd Edition

ஜனவரி 21,22,23 திகதிகளில்
சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக (பிரதான வீதி,துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகில்)
மு.ப 10.00 தொடக்கம் பி.ப 7.00 வரை
Esoft நிறுவனத்தின் சலுகைகள்,பரிசில்களையும்
பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள்.
Stole no-242

**மரண அறிவித்தல்**

*திருமதி ஸ்ரீசோமஸ்கந்தர் பரமேஸ்வரி*

தெல்லிப்பழை, யானைக்குட்டி வளவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஸ்ரீசோமஸ்கந்தர் பரமேஸ்வரி நேற்று (22.01.2011) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

வி.காலநாதன் (தம்பி)
யானைக்குட்டி வளவு, தெல்லிப்பழை.

தகவல்
குடும்பத்தினர்

**அட்சயா அழகுக் கலை பயிற்சியகம்**

(1) பேசியல் - 10 விதமானவை (2) மேக்கப் - 7 விதமானவை (இந்து கிறிஸ்தவ, குப்தாஸ், குஜராத், மொடன், சிங்கள, மடிசார் மணப்பெண் அலங்காரம்) (3)கெயாஸ்டைல் - 30 விதமானவை (4) ஐசிங் - 25 விதமானவை பூக்கள் 20 (5) தலைமுடி அயன்பண்ணுதல் (6) தலைமுடி சுருட்டுதல் (7)சாறிவேக் - 6 விதானவை (8) பிளவுஸ் கட்டிங் - 6 விதமானவை. அவரவர் முகத்திற்கேற்ற * பேஸ்வோஸ் *சோப் கிறீம்வகை ஓரியினல் வைத்நிங் கிறீம் விற்பனைக்கு உண்டு.

* றிச்கேக் - (1) 30ரூபா
* ஐசிங் இடப்பட்ட றிச்கேக் - (1) 45 ரூபா ஓடருக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
* உடல் எடை குறைக்கும் பால்மா
* உடல் எடை கூட்டும் பால்மா விற்பனைக்கு உண்டு
* உடல் எடை, நீரிழிவு, மூட்டுவலி, பிரஷர், மலச்சிக்கல் தீர்க்கும் மெஷின் விற்பனைக்கு உண்டு.

அட்சயா (அரவிந்தன்ஸ்ரூடியோவிற்கு அருகில்)
461, நாவலர் றோட்,
அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
(109215)

**சுன்னாகம் சிங்கர் கிளையின் ஒரு வருட பூர்த்தியும் அதிர்ஷ்ட வாடிக்கையாளர் தெரிவும்**

Singer Plus சுன்னாகம் கிளை புதுப் பொலிவுற்று ஒருவருட பூர்த்தியினை இன்று ஞாயிறு பி.ப 4.00 மணியளவில் கொண்டாடும் அதேவேளை "சுன்னாகம் சிங்கர் வாடிக்கையாளர் அதிர்ஷ்டம்" மூலம் அதிர்ஷ்ட வாடிக்கையாளர் தெரிவும் இடம்பெறும் வாடிக்கையாளர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

SINGER PLUS சுன்னாகம் கிளை, இல.136, K.K.S. வீதி, சுன்னாகம். T.P: 021 2240555

**வேட்பு மனு...**
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என்று ஆளும் கட்சி நிபந்தனை விதித்துள்ளது. இதன் காரணமாக ஒவ்வொரு பிரதேசங்களிலும் செல்வாக்குப் பெற்ற அரச ஆதரவாளர்களுக்கு உள்ளூராட்சித் தேர்தலில் இடம் கிடைக்காது.

இதனால் ஆளும் கட்சி ஆதரவாளர்களிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் எதிக்கட்சிக்கு தாவ முயன்று வருகின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**மரண அறிவித்தல்**



*மேரி ஜேமின் ஆரோக்கியசாமி (லில்லி)*

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மேரிஜேமின் ஆரோக்கியசாமி (லில்லி) நேற்று (22.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு புனித தோமையார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இம்மனுவேல்லொ்,
பிரதான வீதி,
மாதகல்,
(109710)

தகவல்:
ஓாக் குடும்பத்தினர்
தொ.இல - 0776410401, 0779907134

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் ஏழு அதிசயங்கள் முதலிடத்தில் தாஜ்மஹால்


உலகின் புதிய ஏழு அதிசயங்கள் பட்டியலில் இந்தியாவின் பெருமை மிகு தாஜ்மஹால் முதலிடத்தைப் பிடித்து இந்தியர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது.

ஆதிகாலத்தில் அறிவிக்கப்பட்ட 7 அதிசயங்கள் அனைத்துமே 2000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவை. அவற்றில் இப்போதும் இருப்பது எகிப்தின் பிரமிட்டு மட்டுமே.

இந்த உலக அதிசயங்களைக் கிரேக்க எழுத்தாளர் ஆன்டிபேட்டர் என்ற தனிநபர் ஒருவரே தேர்வு செய்ததாக நம்பப்படுகிறது. இந்த ஏழு உலக அதிசயங்களில் பாபலோனின் தொங்கும் தோட்டம் உள்ளிட்டவையும் அடங்கும்.

இந்த நிலையில், தற்போதுள்ள கால கட்டத்தின் அடிப்படையில் உலகின் புதிய ஏழு அதிசயங்களைத் தேர்வு செய்வதற்காகப் புதிய கருத்துக் கணிப்பு உலகம் தழுவிய அளவில் நடத்தப்பட்டது.

இதற்கான முயற்சிகளை சுவிட்சர்லாந்து நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட கனடா நாட்டவரான பெர்னார்ட் வெப்பர் என்பவர் தொடங்கினார்.



இந்த உலகளாவிய வாக்கெடுப்புக் குறித்து ஆரம்பத்தில் பெரும் சர்ச்சைகள் எழுந்தன. யுனெஸ்கோ அமைப்பு இந்த வாக்கெடுப்புக்குக் கண்டனம் தெரிவித்தது. உலக அதிசயங்களை ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுப்பது சரியல்ல என்று அது கருத்துத் தெரிவித்தது.

மேலும் இந்தக் கருத்துக் கணிப்பு மூலம் பெருமளவில் பண முறைகேடுகள் நடப்பதாகவும் மக்களின் பணத்தைச் சுரண்டும் முயற்சி என்றும் சர்ச்சைகள் கிளம்பின.

இருப்பினும் இதைப் பொருள்படுத்தாமல், உலகின் புதிய ஏழு அதிசயங்களைத் தேர்வு செய்வதற்காக உலக அளவில் இணையத்தளம் மூலமாகவும், எஸ்.எம்.எஸ். மூலமாகவும் வாக்கெடுப்பு நடந்து வந்தது. இந்தப் பட்டியலில் ஆரம்பத்தில் ஏராளமானவை போட்டியில் இருந்தன.

இந்தியாவிலிருந்து தாஜ்மஹால், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உள்ளிட்ட பல கட்டட அதிசயங்கள் இடம்பெற்றிருந்தன. இறுதியில் தாஜ்மஹால் உள்ளிட்ட 21 கட்டடங்கள், அதிசய சின்னங்கள் இறுதிப் பட்டியலுக்குத் தேர்வு செய்யப்பட்டன.

இவற்றிலிருந்து ஆறு மட்டுமே உலக அதிசயங்களாகச் சேர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டது. எகிப்தில் உள்ள பிரமிட்டுக்களின் காலம், பெருமை உள்ளிட்டவற்றைக் கருத்தில் கொண்டு அது உலக அதிசயமாக வாக்கெடுப்பின்றித் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதன்படி உலகின் புதிய ஏழு அதிசயமாக அறிவிக்கப்பட்டவற்றின் பட்டியல் வருமாறு-

இந்தியாவின் தாஜ்மஹால், சீனப் பெருஞ்சுவர், ஜோர்டானின் பெட்ரா, பிரேசிலின் ரியோ டி ஜெனீரோ நகரில், மலை உச்சியில் உள்ள பிரமாண்ட இயேசு நாதர் சிலை, பெருவின் மச்சு பச்சு, மெக்ஸிகோவின் மயன் கட்டடங்கள், ரோம் நகரின் கொலோசியம்.

நவீன ஏழு அதிசயங்களில் ஐரோப்பாவிலிருந்து இடம் பெற்றுள்ள ஒரே இடம் ரோம் நகரின் கொலோசியம் தான். இந்தப் போட்டியில் பிரான்ஸின் ஈபிள் டவர், அக்ரோபோலிஸ் ஆகியவையும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ரியோ டி ஜெனீரோவில் உள்ள பிரமாண்ட இயேசு நாதர் சிலை உலக அதிசயமாக அறிவிக்கப்பட்டதைப் பிரேசில் மக்கள் பெரும் உற்சாகத்துடன் கொண்டாடினர். ரியோ நகரின் தெருக்கள் எல்லாம் மக்கள் தலைகளாகத் தென்பட்டன.

பண்டைய உலக அதிசயங்களாக அறிவிக்கப்பட்டவற்றில் இப்போதும் இருப்பது எகிப்தின் பிரமிட்டுக்கள் தான்.

பண்டைய உலக ஏழு அதிசயங்கள் பட்டியல்,

எகிப்து மன்னர் பாரோ கூபுவின் சமாதி அடங்கியுள்ள கிஸா பிரமிட், பாபிலோனியா நகரில் அமைந்திருந்த தொங்கும் தோட்டம், ஆர்ட்டிமிஸ் கோவில், ஒலிம்பியாவில் அமைந்திருந்த ஜீயஸ் கடவுளின் சிலை, மாசோலஸ் மசோலியம், ரோட்ஸ் சிலை, அலெக்சாண்ட்ரியா கலங்கரை விளக்கம் ஆகியன.


3M Sri Lanka




3M நிறுவனத்தின் வாகன பராமரிப்பு உற்பத்திகள் மற்றும் அதன் பாவனை முறைகள் தொடர்பான விளக்கமளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 23ம் திகதி ஜனவரி 2011 பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள IIS City Campus மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு எமது நிறுவனத்தின் வாகன பராமரிப்பு உற்பத்திகள் மற்றும் பாவனை முறைமைகளை அறிந்து கொள்ளுமாறு அன்புடன் வரவேற்கின்றோம்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் அதற்கான அழைப்பிதழ்களை பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

Mobile: 0712797894 (G.Sunderesh)

3M





குழந்தைகளே! கார் சவாரிக்கு தயாரா?



யாழ்ப்பாண வர்த்தகச் சந்தையிலுள்ள எமது காட்சியரங்கிற்கு வருகை தாருங்கள்.. நம்பமுடியாத ஆச்சரியங்களைக் காணலாம்

- ஈ. எஸ். பி. நாகரத்தினம் அன் கம்பனி
- ஈஸ்வரன் ட்ரேடர்ஸ்
- வி. வெங்கடேஸ்வரா ஸ்டோர்ஸ்
- ஸ்ரீ மாதவன்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

பைசல் ஹார்ட்வெயார் ஸ்டோர்ஸ்

74,டாம் வீதி கொழும்பு 12, தொலைபேசி : 011-2433727

FLEX Graphic


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## 23.01.2011 முதல் 29.01.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வழக்கமான சில வேலைகளில் மாற்றம் ஏற்படலாம். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். எதிர்பாராத பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்டலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்குக் கூடும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் அகன்று பாசம் அதிகரிக்கும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. இழுபறியாக இருந்த சில வேலைகள் முடிவுக்கு வரும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத் தேவைகளைக் குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். பெண்கள், சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு..திடீர்ப் பயணம் செல்லலாம்.

### இடபம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். சந்தோஷமான அனுபவங்களைப் பெற வாய்ப்பு உண்டு. பணவரவுகளைப் பெறலாம். நெருக்கடிகளால் அவதிப்படலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகள் வராமல் இருக்க எச்சரிக்கை அவசியம். அவசரப்பட்டு சிலருக்கு வாக்குக் கொடுத்து விட்டு வம்பில் மாட்டிக் கொள்ளலாம். கணவன், மனைவி உறவிலும் சச்சரவு உண்டாகலாம். பெண்கள், பயணங்கள், ஆடம்பர ஈடுபாடுகள், விருந்து விசேடங்கள் போன்றவற்றால் செலவுகள் அதிகரிக்கலாம். தந்தை தொடர்பான வகையில் திடீர்ச் செலவுகளைச் சந்திக்கலாம். சகோதரர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. நீண்ட நாள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பு உருவாகும். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றிப் புதிய பொருள்கள் வாங்கலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். எதிர்பாராத வகையில் பணவரவுகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். காரிய வெற்றி உண்டு. வெறுப்பு, விரக்தி உண்டாகும்.

### மிதுனம்

செலவுகளால் பணப் பற்றாக்குறையைச் சந்திக்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். சிலரிடம் கடன் வாங்கலாம் அல்லது சிலருக்கு கடன் கொடுக்கலாம். தயக்கம் இல்லாமல் சில காரியங்களைத் துணிச்சலாகச் செய்வீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும். சக ஊழியர்கள் அல்லது நண்பர்கள் சிலரின் செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். எதிர்பாராத சில காரியங்கள் நடக்கலாம். தொழில் ரீதியான நெருக்கடிகள் அதிகரிக்கலாம். பணிபுரிவோர் எவ்வளவு தான் சரியாக செயற்பட்டாலும் சில நேரங்களில் விமர்சனங்களுக்கு ஆளாகலாம். மற்றவர்கள் குற்றம், குறை சொல்லலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். ஆடம்பரச் செலவுகளால் சிரமங்களுக்கு ஆள்படலாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம்.

### கடகம்

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். விருந்து, விசேடங்களால், கேளிக்கை கொண்டாட்டங்களால் சந்தோஷம் அடைவீர்கள். நண்பர்கள் சந்திப்பு நிகழும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சில வேலைகளைச் செய்ய மறப்பதன் மூலம் அவதிகளுக்கு ஆளாகலாம். எதிர்பாராத முக்கிய செய்திகளைக் கேட்கலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். உங்களை நம்பி மற்றவர்கள் பணப் பொறுப்புகளை ஒப்படைப்பதாலோ, உபரி வருமானத்தாலோ செல்வாக்கான நிலை காணப்படும். பிள்ளைகளின் விருப்பங்களை குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். முக்கியமான விடயங்களில் பெரிய மனிதர்கள் நல்ல வழிகாட்டலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், விருந்து, விசேடங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். வங்கிகளில் கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. கணவன், மனைவி இடையே அடிக்கடி எரிச்சல் உணர்வுகள் உண்டாகலாம். ஒருவரை ஒருவர் குறை சொல்லி விமர்சிக்கலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். எதிர்பாராத செலவு நேரும்.

### சிங்கம்

பரபரப்பாகப் பல வேலைகளைச் செய்யலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்திற்கு நடக்கும். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். கடனாக, கைமாத்தாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசு ஒப்பந்த அடிப்படையில் சலுகைகள் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மருத்துவ காரியங்கள் சாதகமாக அமையும். அரசியல்வாதிகள் மூலம் வேலைகளை முடிக்க மேற்கொண்ட முயற்சிகளில் சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்விற்கு வரும். சகோதரிகள், மனைவி வழி உறவுகள் வழியில் உதவி கிடைக்கும். அடிக்கடி குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். உங்களை நீங்களே குறைவாக மதிப்பிட்டு, தாழ்வு மனப்பான்மை அடையலாம். மாமன், மைத்துனர்கள் வகையிலும் தொல்லையே. ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல், தண்டச் செலவு நேரும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

### கன்னி

சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். திட்டமிட்ட வேலைகளை, மற்ற சில வேலைகள் காரணமாக மாற்றம் செய்யலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். குடும்பத்தில் கலகலப்பு, சந்தோஷம் குடிகொள்ளும். நீண்ட நாள்களாக இழுத்தடித்த சில காரியங்கள் நடக்கலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். சோம்பலை விரட்டி புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். மனைவியின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பணிபுரிவோர் விரும்பிய இடங்களுக்கு இடமாற்றம் பெறலாம். சிறியளவில் பல மாதங்களாகச் சேமித்த பணம் கைக்குக் கிடைத்து, அதை உருப்படியான வகையில் முதலீடு செய்வீர்கள். பிள்ளைகள் வழியில், பூர்வீக சொத்துக்கள் வகையில் திடீர்ச் செலவுகள் நேரவும் வாய்ப்பு உண்டு. நிலம், பூமி வாங்கும் விவகாரங்களில் பொறுமை அவசியம். உறவுப் பெண்கள் சந்திப்பு, புதிய பெண்கள் சிலரின் நட்பைப் பெறுதல், சகோதரிகள் வழியில் உதவி கிடைத்தல், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடையலாம். ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். திடீர் செலவு நேரும்.

### துலாம்

எந்த விடயத்திலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். அவசரப்பட்டுச் சில காரியங்களைச் செய்துவிட்டுப் பின்னர் வருத்தம் அடையலாம். எதிர்பாராத தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். பயணத் தடைகள் நேரும். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வேலையாகவோ வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். குடும்பத்தினர் வழியில் மருத்துவச் செலவு ஏற்படலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பாராத வகையில் சில உதவிகள் கிடைக்கலாம். தொழில் அபிவிருத்தி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். இளைய சகோதரர்கள் கேட்ட உதவிகளைச் செய்வதாலும், அவர்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதாலும் கணிசமான பணத்தைச் செலவிடலாம். தொழில் ரீதியாக ஓய்வின்றி அங்கும், இங்கும் அலையலாம். பல நாள்களாகக் கிடப்பில் இருந்த வேலைகளை முடுக்கி விடுவீர்கள். நிலம், பூமி தொடர்பான விடயங்களும் சாதகமாக அமையும். மாற்று மதத்தினரால் அனுகூலம் உண்டு.

### விருச்சிகம்

பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். ஆசைப்பட்டுச் சில பொருள்களை வாங்கியும் அதில், திருப்தி இல்லாமல் போகலாம். குடும்பத்தினரிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். தேக ஆரோக்கிய பராமரிப்பில் அதிக அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்கள் மத்தியில் உங்களைப் பிரபலப்படுத்திக் கொள்வதில் நாட்டம் செல்லும். விருப்பமான ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் அடைவீர்கள். நெடுநாளைய கடன் பிரச்சினைகளும் தீரும். எதிர்ப்புகள், போட்டிகள் விலகி நினைத்ததைச் சாதிப்பீர்கள். தெய்வகாரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். புதிய வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களிலும் முன்னேற்றம் உண்டு. அரச காரியங்கள் தடங்கலின்றி சுலபமாக முடியும். அரசியல்வாதிகள் சந்திப்பால், அவர்கள் மூலம் காரியம் சாதிப்பதால், சந்தோஷம் அடைவீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். புதிய அனுபவம் பெறலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

### தனுசு

தெம்பு, தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். நீங்கள் ஆசைப்பட்ட சில பொருள்களை மற்றவர்கள் கொடுக்கலாம். நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். உதிரி வருமானம் பெறலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மலை போல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். உறவுப் பெண்கள், மனைவி வழி உறவுகள், சகோதரிகள், திடீர் பயணங்கள், பந்தாவுக்காக செய்யும் காரியங்கள் போன்றவற்றால் செலவுகள் உண்டாகலாம். வீட்டில் வசதி வாய்ப்புக்களை அதிகரிக்க நேரிடலாம். குதர்க்கமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். மற்றவர்கள் எரிச்சல் உண்டாக்கும் வகையில் நடந்து கொண்டாலும், பொறுமை அவசியம். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் பொறுப்புகள், போராட்டங்கள் தொடரும். பணிபுரிவோருக்கு மற்றவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் அனைத்து வேலைகளையும் அவர்களே செய்யும் சூழ்நிலை உருவாகும். அதே நேரத்தில், கடந்த கால இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்பும் உருவாகலாம்.திட்டமிட்ட காரியங்களில் தடை ஏற்படும். கலகலப்பான அனுபவம் உண்டு.

### மகரம்

பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங்களே மீண்டும் செய்ய நேரிடலாம். உடல் ரீதியான சிறு உபாதைகளால் உற்சாகம் குறையலாம். கடன்மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து ஏற்றம் பெறுவீர் கள். பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள் போன்ற வற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பெண் பிள்ளைகள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சகோதரிகளுக்காகச் சில காரியங்களைச் செய்வீர்கள். பற்றாக்குறை இல்லாத வகையில் தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்வீர்கள். மாமன், மைத் துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். அவர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான வகையில் சிரமங்கள், இடர்பாடுகளைச் சந்திக்கலாம். கடன் விவ காரங்களில் கவனம் அவசியம்.

### கும்பம்.

மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கிவிட்டு அவதிப்படுவீர்கள். உறவினர் வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். வெளி வட்டாரத் தொடர்பு விரிவடையும். திடீர் வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். திட்டமிட்ட சில வேலைகள் நடக்காமல் இழுத்தடிக்கலாம். தொழில் ரீதியான விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். மனக்குறைகள் அகன்று நிம்மதி பெறுவீர்கள். குடும்பத்தினரின் தேவைகள், ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. சிலர் சொத்துக்கள் விற்பனை மூலம் கணிசமான பணம் புரட்டலாம். இளைய உடன் பிறப்புக்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், மாற்று மொழி பேசுவோர் போன்றவர்களால் ஆதாயம், அனுகூலம் பெறலாம். முகவர் தொழில் புரிவோருக்கும் வருமானம் கூடும். உதிரி வருமானங்களைப் பெறலாம்.

### மீனம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தினருடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் உதவி கிடைக்கலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறலாம். கடன் பிரச்சினைகளால் ஏற்பட்ட கலக்கம் தீரும். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போர், பொறியியல் பணியாளர்களுக்கு வருமானம் கூடும். நிலம், பூமி விவகாரங்கள் சாதகமாக அமையும். கடன் வாங்கியவர்கள் வட்டி கொடுப்பதற்கே அதிக பணத்தைச் செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். ஆசைப்பட்ட பொருள்களை வாங்குவீர்கள். இனிமையான பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்களால், பிரியமானவர்களின் சந்திப்பு போன்றவற்றால் ஆறுதல் அடைவீர்கள். திடீர்ச் செலவு நேரும். மறதியால் அவதியுண்டு. பணம் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமது நாட்டு மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கி வருவதையிட்டு காகில்ஸ் புட்சிற்றி பெருமையடைகின்றது. நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் பெறுமதியை ஏற்படுத்துவதுடன் சமூகங்களுக்கு சக்தியை வழங்கி அவர்கள் தமக்கென சிறந்த பலமான எதிர்காலத்தை நோக்கி முன்செல்ல ஊக்கமளிப்பதே எமது நோக்கமாகும்.

யாழ் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதுடன். அவர்களை மேலும் வலுவூட்டும் நோக்குடனேயே எமது விற்பனை நிலையங்களை மானிப்பாய் நகரிலும், யாழ். நகரிலுள்ள கன்னாதிட்டி றோட்டிலும் திறந்து வைத்துள்ளோம். இந்த வருடத்தில் குடாநாட்டில் மேலும் 5 விற்பனை நிலையங்களைத் திறந்து யாழ் மக்களின் இல்லத்தையும் இதயத்தையும் நோக்கி நெருங்கி வரவுள்ளோம்.

புத்தம் புதிய பழ வகைகள், காய்கறி வகைகள், மீன், இறைச்சி வகைகளையும், காகில்ஸின் பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளையும், அங்கீகாரம் பெற்ற மருந்து வகைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

காகில்ஸ் புட்சிற்றியில் பொருட்களைக் கொள்வனவு செய்து விசேட விலைக் கழிவுகளையும், சீட்டிழுப்புகள் மூலம் பரிசுகளையும், வெகுமதிகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

யாழ்ப்பாண மக்களை மலர்ந்த முகத்துடன் "வணக்கம்" கூறி வரவேற்கின்றோம்.

Cargills food city
வீடு செல்லும் போது

ADAM

THE RIGHT BALANCE

Speed, Performance, Value

www.adamequipment.com

இலத்திரனியல் தராசு

JAFFNA TRADE FAIR 2011

21st,22nd,23rd,January 2011 துரையப்பா விளையாட்டரங்கில்

எங்கள் காட்சியறைக்கு விஜயம் செய்யுங்கள் Stall No - 70



A.T.A

A.T.A. INTERNATIONAL (PVT) LIMITED.

176-1/3, Dutugemunu Street, Kohuwala, Nugegoda, Sri Lanka.

Tel: +94 11 2854200, +94 11 2854240 Hotline : +94 77 3028888 Fax: +94 11 2853063

E-mail: info@ataintl.com Website : www.ataintl.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதியில் வலி குதிவாதமா?

உங்கள் பாதத்தில் வலி ஏற்படுகிறது. அந்த வலி நீங்கள் காலையில் உறக்கத்தை விட்டு எழுந்து பாதத்தை நிலத்தில் வைக்கும் போது கடுமையாக இருக்கிறது. தொடர்ந்து நடக்கும்போது காலில் உள்ள வலி குறைந்து விடுகிறது. இத்தகைய வலிக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் முக்கிய காரணம் பிளான்டர் பியடிஸ் (Planter Fascitiis) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் நோய்தான். எம்மவர்கள் இதனைப் பொதுவாகக் குதிவாதம் என்பார்கள். ஆனால் இது தவறான அர்த்தத்தைக் கொடுக்கும் பெயராகும். வாதம் என்பது மூட்டுக்களில் ஏற்படும் நோய். ஆனால் இது மூட்டுக்களில் ஏற்படும் நோயல்ல. எனவே உண்மையில் இது வாதம் அல்ல. பாதத்தின் அடிப்பகுதில் உள்ள சௌவ்வுகளின் அழற்சியாலேயே இந்நோய் ஏற்படுகிறது. மூட்டுகளில் ஏற்படுவது அல்ல.

அத்துடன் பக்கவாதம் என்றும் பாரிச வாதம் என்றும் சொல்லப்படும் நோய்க்கும் இதற்கும் எத்தகைய தொடர்பும் கிடையாது என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே இது சில்லறைத் துன்பங்களைக் கொடுக்கும் நோய் மட்டுமே.

இந்நோயின் அறிகுறிகள் என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்.

இந்நோயின் முக்கிய அறிகுறி



உங்கள் பாதத்தின் குதிப்பகுதியில் ஏற்படும் வலிதான். சிலவேளைகளில் அப்பகுதி சிவக்கலாம், வீங்கலாம், அல்லது சூடாக இருப்பதையும் நீங்கள் உணரக் கூடும். எனவே இவை அழற்சியின் அறிகுறிகளாகும். உங்கள் பாதத்தின் அடிப்பகுதியில் உள்ள தடித்த உள்ளங்காலுக்குரிய சௌவ்வுப் பகுதியில் ஏற்படும் அழற்சியால்தான் இந்நோய் ஏற்படுகிறது.

## குதிவாதம் ஏற்படக் காரணம் என்ன?

குதிவாதம் ஏற்படக் காரணங்கள் பலவாகவோ அன்றி ஒன்றோடு ஒன்று தொடர்புடைய வெவ்வேறாகவோ இருக்கலாம். உங்கள் குதிப் பகுதியிலும் காலின் கெண்டைப் பகுதியிலும் உள்ள தசைகளின் இறுக்கம் காரணமாக இருக்கலாம், மாறாகப் பாதப்பகுதியின் தளர்ச்சியும் காரணமாகலாம், அல்லது நீங்கள் செய்யும் உடற்பயிற்சியைத் தவறாகச் செய்வதும் அல்லது உங்கள் பாதத்தின் இயற்கையான வளைவுப் பகுதிக்கு நீங்கள் கொடுக்கும் அதிகரித்த வேலைப் பளு காரணமாக இருக்கலாம்.

பொருத்தமற்ற அதாவது அளவற்ற காலணியை நீங்கள் உபயோகிப்பதும் அல்லது உங்கள் தொழில், பொழுது போக்குப் பழக்கம் காரணமாகவோ நீங்கள் குதிக்காலுக்குரிய சௌவ்வுக்கு அதிக வேலை கொடுத்து ஊறு விளைவிப்பதாலும் இருக்கலாம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தமிழுக்கு ஆங்கிலம் (1)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றது.

'அ' வரிசையில்:

| | |
|---|---|
| அன்பு-Kindness | அளி- Give, bee |
| அறிவு-Knowledge | அத்தி-Fig |
| அழகு-Beauty | அட்டை-Leach |
| அடக்கு-Control | அரங்கு-Stage |
| அதிகம்-Too much | அணங்கு-Woman |
| அடிமை-Slave | அந்தம்-End |
| அசிங்கம்-Dirty | அரிமா-Lion |
| அம்பு-Arrow | அரசு-Government, Bo tree |
| அச்சம்- Fear | அரசன்-King |
| அடக்கம்-Buriel, Restrain | அரசி-Queen |
| அந்தி-Evening, End | அங்கம்- Part |
| அலகு-Unit | அதிகாரம்- Power |
| அன்னம்- Swan, Rice | |

தொகுப்பு: ரம்யான்

## பறவைகளின் ஆயுள்காலம்

1. கொக்கு- 24 வருடம்
2. காகம்- 100 வருடம்
3. கழுகு- 100 வருடம்
4. வாத்து- 50 வருடம்
5. கோழி- 14 வருடம்
6. கிளி- 60 வருடம்
7. மயில்- 24 வருடம்
8. நாரை- 50 வருடம்

க.கஜனி, தரம்- 8,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## பொது அறிவு

➢ உலகில் உள்ள ஒரே ஒரு இந்து சாம்ராஜ்ஜிய நாடு?
நேபாளம்

➢ 2005,2006,2007 ஐ.சி.சி.கிண்ணத்தை வென்ற நாடு?
அவுஸ்திரேலியா

➢ சினிமாத் திரையரங்கு இல்லாத நாடு?
சவூதி அரேபியா

➢ மிக உயரத்தில் கூடு கட்டும் பறவை?
கழுகு

➢ சத்தம் போடாத விலங்கு எது?
ஒட்டகம்

பிரியதர்சினி, தரம்-6,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## பார்வை இழந்தோருக்கு உதவுதல்

மனித உறுப்புக்களில் மிகவும் முக்கியமானவை கண்களே. இவை எமக்கு இறக்கும் வரை உதவுகின்றன. இவற்றை நாமிழந்தால் உலகத்தையே அறியமுடியாது. எனவேதான் கண்கள் எமக்கு மிக அவசியமானவை. அவற்றை நாம் பாதுகாத்தல் அவசியம்.

கண்கள் நமக்கு எவ்விடத்தில் அமைந்துள்ளன என்பதை நாம் முதலில் அவதானிக்க வேண்டும். உடலின் மேற்பாகம் தலை. இத்தலையிற்றான் பஞ்சேந்திரியங்களாகிய கண், வாய், மூக்கு,செவி,நா என்பன இருக்கின்றன. இவை உயர்ந்த இடத்தில் பாதுகாப்பாக இறைவனால் படைக்கப்பட்டுள்ளன என்றாலும் கண்களை மிகப்பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.ஒன்று போனால் மற்றொன்று என்ற காரணத்திற்காக அவை இரண்டாக உள்ளன. பஞ்சேந்திரியங்களில் மிக முக்கியமானவை இரண் டாகவே உள்ளன. இப்படைப்புக்களில் தன்மையின் குண விசேடங்களை இந்தப் படைப்பின் மூலம் நாம் உணர வேண்டும் என்பதற்காகவே ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்''

''கண்களிற் சிறந்த உறுப்பில்லை'' என்ற இன்னோரன்ன பழமொழிகள் கண்களின் பேராற்றலை நமக்கு எடுத்தியம்புகின்றன. கண்களை நாம் தொலைத்து விட்டால் நமக்கு உலகமே இருண்டு விடும். நாம் வெறும் நடைப்பிணமாவோம். உலகில் வாழ்வதில் அர்த்தமே இருக்காது.

கண்களை இழந்தவர்களை இப்பொழுது நாம் பார்க்கின்றோம். அவர்கள் எத்தகைய பரிதாபகரணமன வாழ்க்கையை வாழுகிறார்கள் என்பதை நாம் உணர்வோம். அவர்களால் துணையின்றி வாழமுடியாது. எதற்கும் பிறரின் தயவையே நாடவேண்டியுள்ளது. கண் இழந்தவர்கள் தங்கள் நிலையை எண்ணி உருகாத நாளே இருக்க முடியாது.

ஆனால் அவர்கள் தற்போது பொறிமுறையில் கல்வி கற்கிறார்கள். ஓரளவுக்காவது தங்கள் கடமைகளைச் செய்கிறார்கள். இதனால் ஒருவித ஆறுதலை அவர்கள் அடைகிறார்கள். இதனால் கண்களை இழந்தவர்களிடத்தில் நாம் காட்டும் கருணை குறைந்து விடக் கூடாது. அவர்களை அரவணைத்து அவர்களுக்கு வேண்டிய மேலதிக உதவிகளை புரிதல் வேண்டும். இதுவே மனித குலத்தின் பண்பு என்பதை நாம் மறக்கக் கூடாது.

திவோஜினி, தரம்-9,
தும்பளை சைவப்பிரகாச மகா வித்தியாலயம்.

## விடை தெரியுமா? 92

1. பாகிஸ்தான் இராணுவத்தளபதியின் பெயர் என்ன?
2. இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ஹகுமானுக்கு எந்தத் திரைப்படத்தில் இசை அமைத்ததற்கு அமெரிக்கத் திரைப்பட விருது கிடைத்தது?
3. எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் சிம்பாவே அணியின் தலைவர் யார்?
4. எண்ணெய்வளம் மிக்க நாடு எது?
5. உலகில் மிகப்பெரிய மற்றும் அதிககாலம் உயிர்வாழும் தாவரமாக கருதப்படும் தாவரம் எந்தக் காடுகளில் காணப்படுகின்றன?

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 29.01.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## உங்களுக்கும் பரிசில்கள்


### விடை 90

1. இன்புளுவென்சா எ1 எச் 1
2. மிக்
3. தானோ கார் 2010
4. நியோ 808 ஐ (Nija 808)
5. ஆனந்தி

### வெற்றிபெற்றவர் விவரம்

1. கே.ஜனதரன், தரம் -10,
யாழ்.பரியோவான் கல்லூரி.
2. கு.ஆரிகா, தரம்- 01,
யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
3. கு.தசாயன்,தரம்-2,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
4. சா.பபிதா, தரம்- 8 A,
கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலம்.
5. வ.அவித்தா, தரம்-5
கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.
6. இ.நிருத்திகா, தரம்-1,
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.




கௌ.சிவானுஜன், தரம்-4,
சென்.ஜோன்ஸ் கல்லூரி.



செ.துஷாந்தன், தரம்-7,
மீசாலை வீரசிங்கம் ம.வி



ஜெ.கிருஷிகன், தரம்-5,
யா/ அ.மெ.மி.வி



மதிராஜ், தரம்-7,
யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.

## விடுகதைகள்

1. கூவி அழைப்பான்,கூடி உண்ணுவான் அவன் யார்?
காகம்
2. அவனுக்கு வீடு மற்றவர்களுக்கு வலை அது என்ன?
சிலந்தி
3. கண்ணீர் விட்டே கடைசி வரை ஒளி தருவான் அவன் யார்?
மெழுகுதிரி
4. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன?
சிரிப்பு
5. தலையைச் சீவினால் கறுப்பு நாக்கை நீட்டுவான் அவன் யார்?
பென்சில்
6. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான் அவன் யார்?
இளநீர்
7. நாக்கில்லாத உயிரினம் எது?
முதலை
8. வாழ்நாள் முழுக்க வாயை மூடாதவன் அவன் யார்?
தபால் பெட்டி
9. மிதித்தாலும் அவன் உன்னைத் தூக்கிச் செல்வான் அவன் யார்?
சைக்கிள்

பா.யாதுசன்,
வவுனியா ஸ்ரீ வைத்தியலிங்கம் வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிமதுரத்தின் மருத்துவ சக்தி

ஒரு மூலிகையால் ஓராயிரம் நோய்களைத் தீர்க்கலாம். அதற்குரிய மருத்துவ குணங்களை ஒவ்வொரு மூலிகைகளும் பெற்றுள்ளன. வேர்ப்பகுதி மட்டுமே மருத்துவ குணம் கொண்டதாக உள்ள அதிமதுரத்தின் சக்தி, அதைப் பயன்படுத்தியவர்களுக்குத் தான் தெரியும். நீங்களும் தெரிந்து கொண்டால் தேவையான சமயத்தில் தயங்காமல் பயன்படுத்தலாமே!

அதிமதுரம் சர்வதேச மருத்துவ மூலிகையாகும். அதிமதுரத்தின் மருத்துவ குணங்கள் அனைத்தும் உலகத்தின் எல்லா மருத்துவ முறைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. அதிமதுரம் மிக எளிய முறையில் பயன்படுத்தப்பட்டாலே அனேக நோய்களை நீக்கி விட முடியும். மனிதர்களுக்குத் தீங்கு செய்யும் வைரஸ் கிருமிகளை அழிக்கும் சக்திகள் நிரம்பியது. நவீன ஆய்வின் மூலம் இந்த உண்மை வெளியாகியுள்ளது.



**செரிமானத்திற்கும் மலச்சிக்கலுக்கும்...**

அதிமதுரத்தில் உள்ள பசைப் பொருளும் பிசின் பொருளும் உணவு மண்டலத்தில் செயற்பட்டு உணவு செரிப்பதற்கு உதவுகிறது. மலச்சிக்கலை நீக்குவதில் நிகரற்ற முறையில் செயற்படுகிறது.

**இருமல் நீங்க...**

அதிமதுரம், கடுக்காய், மிளகு மூன்றையும் சம எடையில் எடுத்து இளவறுப்பாய் வறுத்து 5 கிராம் அளவில் தேனில் குழைத்துச் சாப்பிட்டால் அதிகச் சூட்டினால் ஏற்படும் இருமல் தீரும்.

**மஞ்சள் காமாலை நீங்க...**

அதிமதுரம், சங்கம் வேர்ப்பட்டை சமமாக எடுத்துப் பொடி செய்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து பசும்பாலில் கலந்து மூன்று தினங்கள் சாப்பிட்டால் மஞ்சள் காமாலை நிவர்த்தியாகும். புளியில்லா பத்தியம் இருக்க வேண்டும்.

**தொண்டைக் கட்டு இருமல் சளிக்கு...**

அதிமதுரத் தூளைத் தயாரித்து வைத்துக் கொண்டு 12 கிராம் அளவில் தேனில் குழைத்து, தினம் மூன்று வேளை சாப்பிட்டால் தொண்டைக் கட்டு, இருமல், சளி குணமாகும். இதைச் சாப்பிட்டு வருபவர்களுக்கு ஆண் தன்மை பலவீனம் நீங்கும். உடற் பலமும் ஆரோக்கியமும் விருத்தியாகும்.

**தலைவலிகள் நீக்க...**

அதிமதுரம், சோம்பு, சர்க்கரை இவைகளை வகைக்கு 35 கிராம் எடுத்து, தனித்தனியாக நன்கு தூள் செய்து, பின் ஒன்று கூட்டி வைத்துக் கொண்டு தேனில் குழைத்துச் சாப்பிட்டு வந்தால் உடல் சூட்டினால் ஏற்பட்ட தலைவலி நீங்கும். இதையே தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தொடர்ந்து தொல்லை கொடுக்கும் தலைவலி, தீராத தலைவலி, ஒற்றைத் தலைவலி தீரும். அதிமதுரம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இவைகளைச் சம எடையாக எடுத்துத் தூளாக அரைத் தேக்கரண்டியளவு தேனில் குழைத்துச் சாப்பிட்டால் சீதளத்தால் ஏற்பட்ட தலைவலி தீரும். இதே தூளை நெய்யில் குழைத்துச் சாப்பிட்டு வந்தால் அதிக வெப்பத்தால் ஏற்பட்ட தலைவலி நீங்கும்.

# தோடம்பழம்



பசியைத் தூண்டவும் இரத்தத்தைச் சுத்திகரிக்கவும் பித்தத்தைப் போக்கவும் வயிற்றில் உள்ள உப்புச்சத்தை நீக்கவும் தோடம்பழத்தின் ஆயுர்வேத சிகிச்சை முறை பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இது வாயைச் சுத்தமாக்கவும் காய்ச்சலுக்கு அருமருந்தாகவும் அடி வயிற்று வலியைக் குறைக்கவும் குடற்புழுக்களை குணமாக்கவும் எலும்புகளை வலுப்படுத்தவும் பயன்படுகிறது.

சளி பிடித்துள்ளவர்கள் தோடம்பழச் சாற்றுடன் வெந்நீர் கலந்து குடிக்கலாம். இரவு உறங்கும் முன்பு ஒன்றிரண்டு தோடம் பழங்களைச் சாப்பிட்டு விட்டு உறங்குவது நல்லது. இதனால் மலச்சிக்கல் உள்ளவர்கள் பெரிதும் பயன் அடைய முடியும். ஆஸ்மா மற்றும் நெஞ்சக நோயாளிகளுக்குத் தோடை நல்லது. உடலுக்கு உட்சாகத்தைக் கூட்டக்கூடியது செரிமானத்தைச் சரியாக்கிப் பசியைத் தூண்டவும் குடல்களின் பாதையில் தொற்று நேராமல் பராமரிக்கவும் குடல்களின் இயக்கத்திற்கு வலுச் சேர்க்கவும் கர்ப்பகாலப் பெண்மணிகளுக்கு ஏற்படும் குமட்டலுக்குச் சிறந்ததாகவும் அமைகின்றது. செரிமானமடையாத உணவால் வயிற்றில் பொருமலுடன் உள்ளவர்கள் தோடம்பழச் சாறைக் குடிக்கவேண்டும். இது செரிமானச் சக்தியைக் கூட்டி, செரிமான உறுப்புகளை வலுவூட்டி வயிற்றுப் பிரச்சினையைத் தீர்க்கும்.

IELTS™




**British Council will conduct an IELTS examination session in Jaffna on 12 February 2011**

At British Council we provide the best starting point, whether you are preparing for or ready to take your IELTS exams. We have over 70 years of experience in teaching English across the globe and we understand exactly what it takes to help you achieve your goals.

At British Council we supply personal infra-red headphones for the listening test which make your test clearer and free from disturbances.

**We also offer you the following for free:**
- **Online resources**
- **Practice text books & CD-ROMs**

You may register at the following institutions:

British Business School, 140 Temple Road, Jaffna. T (021) 2225796
British College of English, 143 Adiapatham Road, Thirunelvely, Jaffna T (021) 3216027
British College of Higher Studies, 15 Sirambiyady Lane, Off Stanley Road, Jaffna. T (021) 2224550
Thames International, 664 Hospital Road, Jaffna. T (011) 5737306


BRITISH COUNCIL
49 Alfred House Gardens, Colombo 00300
T +94 (0) 117521521 E info.lk@britishcouncil.org
www.britishcouncil.org/srilanka

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிமோவின் சுயம்வரம்



"இத்தால் அறியத்தருவது என்னவென்றால்,

நாட்டு மக்கள் எல்லோருக்கும் ஒரு நல்ல செய்தி...!

அனைவருக்கும் ராஜ யோகம்...!

**டிமோவின் சுயம்வரம் யாழ் மண்ணில் இடம்பெறவிருக்கிறது...!**

இம்மாதம் 21,22,23 ஆம் திகதிகளில்,

சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக,

காலை 10.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம்பெறும்.

டிமோவின் சுயம்வரக் கூடத்திற்கு உலகில் முன்னணி வகிக்கும், வினைத்திறம்மிக்க, தரம் வாய்ந்த தயாரிப்புக்கள் வருகை தரும்.

வாருங்கள், முந்துங்கள், கண்டுகளியுங்கள், உரிமையாக்கிக் கொள்ளுங்கள்.

நீங்களும் டிமோவின் சுயம்வரத்தில் கலந்துகொண்டு, நீங்கள் விரும்பியதை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்...!"

BOSCH Invented for life
பொஷ் பவர் டூல்ஸ் மற்றும் பொஷ் ஒடோமோடிவ் பார்ட்ஸ்

BOMAG
போமெக் சாலை கட்டுமான உபகரணங்கள்

dimo අධි සත්කාර
டிமோ அதிசத்கார என்ஜின் மீள்கட்டமைப்பு

fischer
ஃபிஷர் ஃபிக்ஸிங்

KOMATSU
சுரங்க, கட்டுமான மற்றும் பொருட்கள் ஏற்றியிறக்கும் உபகரணங்கள்

KSB
கே.எஸ்.பி திரவ முகாமைத்துவ உபகரணங்கள்

Mahindra TRACTORS
மஹிந்ரா ட்ரக்டர்ஸ்

Mercedes-Benz The best or nothing.
பயணிகள் வாகனம், **SUVs**, பாதுகாப்பான வாகனங்கள்.

MICHELIN
உலகத் தரம் வாய்ந்த கார் டயர்கள்

MRF TRUCK TYRES
உலகத் தரம் வாய்ந்த வர்த்தக வாகனங்களுக்கான டயர்கள்

OSRAM
ஒஸ்ரம் மின் குமிழ் தெரிவுகள்

SKIL
ஸ்கில் பவர் டூல்ஸ்

TATA
வர்த்தக மற்றும் பயணிகள் வாகனங்கள்

WD-40
டப்ள்யு டீ போடி

யாழ் வர்த்தகக் கண்காட்சி டிமோவின் வெள்ளி / பிரதான அனுசரணையுடன் யாழ் மண்ணில் இடம்பெறுகிறது. ராஜ யோகமான டிமோவின் சுயம்வரத்தில் கலந்துகொண்டு ராஜ மரியாதையைப் பெறுங்கள்.


டிமோ யாழ்ப்பாணக் கிளை,
214, ஸ்டன்லி ரோட், யாழ்ப்பாணம்.
www.dimolanka.com

dimo TECHNOLOGY உன்னத எதிர்பார்ப்பு

மேலதிக விபரங்களுக்கு : சதிஷ் - 0773 686 651

www.sarva.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறியியல் கற்கைநெறிகளை வழங்குவதில் முன்னணியில் திகழும் CINEC கல்லூரி

இலங்கையில் பொறியியல் துறைக்கான உயர் கற்கை நெறிகளை 21 வருடங்களாக வழங்கி பொறியியல் கல்வி நிறுவனங்களுக்கு மத்தியில் மாணவர்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் வென்று சினெக் கல்லூரி (Colombo International Nautical and Engineering College - CINEC) சிறந்து விளங்குகின்றது.

இவ்வாறு மாணவர்களின் மனங்களை வென்று சினெக் சிறந்து விளங்க முக்கிய காரணம் உலகில் பிரசித்திபெற்ற நம்பிக்கையான பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பொறியியல் துறையில் டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பின் கற்கைநெறிகளை உலகளாவிய கல்வி திட்டத்தின் அடிப்படையில் வழங்கி வருவதேயாகும்.

கடல்சார் கப்பல் பொறியியல் கற்கைநெறிகளை ஆரம்பத்தில் கொழும்பு மட்டக்குளியில் ஆரம்பித்தும் காலப்போக்கில் மாலபேயிலும் திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் CINEC கல்லூரியை அமைத்தும் வழங்கி வருகின்றது.

ஆரம்பகாலத்தில் சான்றிதழ் கற்கை நெறியுடன் தனது சேவையினை ஆரம்பித்த சினெக் கல்லூரி தனது வெற்றிப் பயணத்தின் மூலம் டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்புகளை வழங்கி வருகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணம், திருகோணமலை மாணவர்களும் இலகுவில் உயர்கற்கை நெறிகளை மேற்கொள்வதற்காக திருகோணமலை, யாழ்ப்பாணத்திலும் CINEC கல்லூரியை அமைத்து வருகின்றது.

கடல்சார் போக்குவரத்து பொறியியல் கற்கைநெறி, தகவல் தொழில்நுட்பம் (IT), முகாமைத்துவம் ஆகிய கற்கைநெறிகளை பிரசித்திபெற்ற பிரித்தானியா, அவுஸ்திரேலியா, சீனா ஆகிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து அவற்றின் பல்கலைக்கழக பட்டங்களை வழங்கிவருகின்றது.

சினெக் கல்லூரி 200ற்கும் மேற்பட்ட திறமையான விரிவுரையாளர்களைக் கொண்டு மாணவர்களுக்கான கல்வியை வழங்கிவருகின்றது.

ஆங்கிலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சினெக் கல்லூரியின் இக்கற்கை நெறிகளில் இணைந்துகொள்ளும் மாணவர்களுக்கு விசேட ஆங்கில வகுப்புகளும் கல்லூரியில் நடைபெறுகின்றன.

இக்கல்லூரியில் இணைந்து கொள்வதற்கான தகுதி சாதாரண தரத்தை பூர்த்தி செய்திருத்தல் அல்லது உயர்தரத்தை பூர்த்தி செய்திருத்தல் ஆகும்.


சினெக் கல்லூரியானது மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புகளை வழங்குவதோடு மாணவர்களுக்கு விசேட சலுகைகளையும் வழங்கி வருகின்றது. அந்தவகையில் போக்குவரத்து சேவை, தங்குமிட வசதி ஆகியவற்றை வழங்கி வருகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள சினெக் கல்லூரி அங்குள்ள மாணவர்களுக்கு குறைந்த கட்டணங்களில் பொறியியல் துறையில் உயர்கல்வியை பெற வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

சினெக் கல்லூரியில் ஈரான், இந்தியா, மாலைதீவு ஆகிய நாட்டு மாணவர்களும் கல்வி கற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை இக்கல்லூரியின் உயர்கற்கை நெறிகளை இலங்கையிலேயே முழுமையாக கற்க முடிவதால் வெளிநாடு சென்று கற்கவேண்டிய செலவை மீதப்படுத்திக்கொள்ளமுடியும்.

சினெக் கல்லூரியில் கற்கைநெறிகளை பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு வெளிநாட்டு கடல்போக்குவரத்து துறைகளில் தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

எப்போதும் மாணவர்களுக்கு முதற்தர வகுப்பு




சலுகைகளை வழங்கிவரும் சினெக் கல்லூரி தனது உயர்கல்வி நெறிகளின் மூலம் தேசிய உயர்தர விருதுகளையும், சர்வதேச விருதுகளையும் பல வருடங்களாகப் பெற்று வருகின்றது. அந்தவகையில் 2010ஆம் ஆண்டுக்கான International Asia Pacific Award 2010 விருதையும் பெற்றுள்ளது.

ந.ஜெயகாந்தன்-



உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழக பட்டப்படிப்பை
யாழ் மண்ணிலேயே பெற்றுக்கொள்ள இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்..!

ஆம்.. ஐக்கிய இராஜ்ஜியம், அவுஸ்திரேலியா, சீனா ஆகிய நாடுகளின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களின் முழுமையான பட்டப்படிப்பை யாழ்மண்ணிலேயே குறைந்த செலவில், ஆனால் அதே சர்வதேச அங்கீகாரத்துடன் (UCG அங்கீகாரம்) பெற்றுக்கொள்ளலாம்.

நெகிழ்வு தன்மைவாய்ந்த கற்கைநெறி முழுமையாக இங்கேயே மேற்கொள்ளலாம், அல்லது 2+2 முறைமையின் கீழ் 2 வருடங்கள் சினேக் யாழ் வளாகத்திலும் மிகுதி 2 வருடங்கள் குறிப்பிட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகத்திலும் மேற்கொள்ளலாம்.



பொறியியல்துறை
(Engineering)



முகாமைத்துவம்
(Management)



தகவல் தொழில்நுட்பமும் கனணி கற்கையும்
(IT & Computing)

- குறைந்த, இலகு தவணை கட்டணங்கள்.
- உலகத்தரம் வாய்ந்த வசதிகள்.
- தரம் வாய்ந்த விரிவுரையாளர் குழாம்.
- உள்ளக பட்டப்படிப்பின் அங்கீகாரம்.

KKS Road, Maruthanamadam, Jaffna District.
Tel: 021 4 925 925 Gen. Hotline: 011 4 486 486
E-mail: infojaffna@cinec.edu

CINEC
Jaffna Campus
BRANCH OF CINEC MARITIME CAMPUS

வாழ்வில் கிடைக்கப்பெறாத அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்.

World Class Excellence in Education and Training www.cinec.edu

ADinnovations

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org